# வள்ளலார்



முனைவர் சு. சிவகாமசுந்தரி

# பொருளடக்கம்

ஆசிரியர் அறிமுகம் .......... 2

முன்னுரை .......... 4

சிறப்புரை .......... 5

வாழ்த்துரை .......... 6

முகவுரை .......... 8

1. வள்ளலார் .......... 10

2. வள்ளலாரும் தமிழும் .......... 15

3. சமரச சன்மார்க்கம் .......... 27

4. மனிதப் பண்பு .......... 34

5. உயிர்க் கருணை .......... 43

6. மனமாற்றம் .......... 52

7. இறவாத வாழ்வு .......... 57

8. உன்னை மறந்திடுவேனோ .......... 66

9. தாயாகித் தந்தையுமாய் .......... 73

10. அருட் பெருஞ்சோதி .......... 85

நன்றியுரை .......... 91

# ஆசிரியர் அறிமுகம்



## முனைவர் சு. சிவகாமசுந்தரி

தென்னாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சைக்கு அருகில் உள்ள திருவையாற்றில் பிறந்தவர் இந்த செந்தமிழ்ச் செல்வி. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்ட ஆற்றல் மிக்கோரில் இவரும் ஒருவர். பன்மொழிப் புலவர் பல்கலைச் செல்வர் டாக்டர் தெ.பொ.மீ. மற்றும் தமிழறிஞர் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ஆகியோரது அருமை மாணவி. 'தமிழ் இலக்கியத்தில் மனையியல்' பற்றிய ஆய்வுக்கு சென்னைப் பல்கலைக்கழகம் 1979ல் முனைவர் பட்டம் வழங்கியது. கோவை திரு. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவராக கால் நூற்றாண்டு காலம் பணியாற்றியபின், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல் துறைப் பேராசிரியர் மற்றும் பதிவாளராகவும் பணியாற்றியவர்.

பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றியுள்ளார். தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலும், வானொலியிலும் தனது நாவன்மைக்குத் தனி இடம் பெற்றவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். மேடைத் தமிழுக்கு தனி முத்திரை பதித்த இவர் பெற்றுள்ள சிறப்புப் பட்டங்கள் ‘செந்தமிழ்ச் செல்வி’, ‘அருட்பாமாணி’, ‘தமிழறிஞர்’, மற்றும் ‘நல்லாசிரியர்’ ஆகும். பேச்சாற்றலுக்கும், நடிப்பாற்றலுக்கும் பல பொற்பதக்கங்கள் பெற்றுள்ள இவர் ஒரு நல்ல கவிஞரும் கூட. தமிழக அரசு இவருக்கு ‘திருவள்ளுவர் விருது (1995)’, ‘இராசராசன் விருது (2003)’, ‘கலைமாமணி (2006)’ வழங்கி பெருமை சேர்த்தது.

இவர் எழுதிய புத்தகங்களின் வரிசையில் வள்ளலார், தமிழகப் பெண்கள் வாழ்வும் வளர்ச்சியும், அறம் வெல்லும், புகழ் கம்பன், மனை இயல், சங்க இலக்கிய விளையாட்டு களஞ்சியம், வள்ளலாரின் சமுதாய மறுமலர்ச்சி சிந்தனைகள், நேற்று நடந்தது (நாடகம்), நீலக் குறிப்பேடு(மொழியாக்கம்), பாரதிக்கு நிகர் பாரதியே என்பன குறிப்பிடத்தக்கவை. இவற்றில் சில பள்ளி மற்றும் பல்கலைக்கழக உரை நூல்களாக பயன்படுத்தப்பட்டவை. தனது பேச்சு வளம், ஆழ்ந்த சிந்தனை, சமுதாய நலன், சமரசக் கொள்கைகள், இனிய அணுகுமுறை மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழ் மக்களின் உள்ளம் கவர்ந்தவர். தமிழ் மொழி நலம் பேணத் தியாகத் தழும்புகள் பல ஏற்றுள்ளார்.

வடலூர், திருஅருட்பா இசைச் சங்கத்தின் உருவாக்கம் முதல் (1985) தனது இறுதிக் காலம் வரை, நிர்வாகச் செயலர் பொறுப்பில் அயராது பணி ஆற்றியவர். அருட்பிரகாச வள்ளலாரின் ஆன்ம நேய அருட்கொள்கையினை அருட் தமிழிசை வழியாக உலகம் முழுமைக்கும் எடுத்துச் செல்லும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இச்சங்கத்தின் மூலம் தனது சன்மார்க்க பணியை திறம்படச் செய்தவர். நூற்றுக் கணக்கான இசைக் கலைஞர்களுக்கு திருஅருட்பாவை அறிமுகப் படுத்தி, ஊக்குவித்த இவரது குரல், என்றும் உள்ளத்தில் ஊடுருவி ஒலிக்க வல்லது.

வாழையடி வாழையெனச் சன்மார்க்கம் பரப்பிய இவர் நம்பிக்கைக்கு அடித்தளம் 'எல்லாம் செயல் கூடும்' என்பது.

தோற்றம்: 13.01.1936 மறைவு: 22.11.2012

# முன்னுரை

திருமதி சிவகாமசுந்தரி, (எம், ஏ) அம்மையார் வள்ளலார் என்ற நூலைப் படைத்து அளித்துள்ளார். என்னுடைய மாணவியாகையால், இந்த நூலை உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையில் ஒரு முன்னுரை எழுதும் பேற்றை எனக்குத் தந்துள்ளார். உயிர்ப்புள்ள தமிழ் நடையில் பேசவும், எழுதவும் வல்ல அம்மையார் தமக்கு உகந்த பெரியாரைப் பற்றி உள்ளம் உருகி எழுதி இருக்கின்றார். அவர் மனத்தைக் கரைத்துருக்கிய பாடல்களை நாமும் சுவைத்துப் பயன்பெற இடையிடையே தந்துள்ளார்கள். மேலும் பல நூல்களை இவ்வாறு படைத்துத் தமிழ் அன்னையை ஆசிரியர் மகிழச் செய்வாராக.

*தெ. பொ. மீனாட்சி சுந்தரன்,*

*துணை வேந்தர்,*

*மதுரைப் பல்கலைக்கழகம்.*

# சிறப்புரை

திருமதி சு. சிவகாமசுந்தரி அவர்கள் வள்ளலார் எனும் தலைப்பில் எழுதிய நூலைப் படித்து பெரிதும் மகிழ்ந்தேன். திருவருட் பிரகாச வள்ளற் பெருமானைச் சமீப காலமாகப் பலர் பேசியும், எழுதியும் வருவது நல்ல காலத்தின் அறிகுறியாகத் தெரிகிறது. தனி வாழ்வில் சத்விசாரமும், பொதுவாழ்வில் பரோபகாரமும் வற்புறுத்தி உலக வாழ்வுக்கு ஒரு பெருநெறியை, சன்மார்க்க நெறியை வள்ளற் பெருமான் வகுத்துச் சென்றுள்ளார். பண்டித அசலாம்பிகை அம்மையார் வள்ளற் பெருமானைப் பற்றி ஒரு அரிய நூல் பல ஆண்டுகளுக்கு முன் எழுதினார். அவர்கள் காந்தி புராணமும் எழுதியவராவர். அப்படிப்பட்ட புலமைச் செல்வியரின் வரிசையில் இன்று சிறந்த பேச்சாளரான திருமதி சிவகாமசுந்தரி அம்மையாரும் எளிய இனிய நடையில் எழுதியிருப்பது பாராட்டத் தக்கது.

“பாடகக்கால் மடந்தையரும், மைந்தரும் சன்மார்க்கப் பயன்பெற நல் அருள் அளித்த பரம்பரனே” என்றும், பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்கப்படல் வேண்டும் என்றும் பெண்களுக்குச் சன்மார்க்கத் தனியுரிமையை வள்ளற் பெருமான் வழங்கியிருக்கிறார். அந்த வகையில் இந்த நூலாசிரியர் மேலும் இத்தகைய நூல்கள் பலவற்றை எழுதுமாறு வேண்டுகிறேன்.

வாழ்க நூலாசிரியை!

வெல்க வள்ளலார் நெறி!

*திரு. நா. மகாலிங்கம், பி. எஸ்சி., எம். ஐ. இ.*

*பொள்ளாச்சி*

# வாழ்த்துரை

[திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் இராமலிங்க அடிகளாரின் வழி மாணாக்கர், முத்தமிழ்க் கவியரசு, பன்னீரிலக்கணப் பெரும்புலவர் தஞ்சை சண்முகம் பிள்ளை அவர்களின் மாணாக்கர், செம்பியநல்லூர் செந்தமிழ்க் களஞ்சியம், முதுபெரும் புலவர் செ. கோவிந்தசாமி ஐயா அவர்களின் வாழ்த்துரை.]

*சிவாய ராமலிங்க மென்னில் தீவினைகள் சிந்திடும்*
*சிவாய ராமலிங்க மென்னில் தேரு முத்தமிழியல்*
*சிவாய ராமலிங்க மென்னில் சித்திராஜ யோகமும்*
*சிவாய ராமலிங்க மென்னில் தெய்வசித்த ஞானியே.*

வள்ளலார் என்ற தலைப்பில் அமைந்துள்ள நூலினைக் கண்ணுற்றுப் பெருமகிழ்வு எய்தினேன். இந்நூலினைத் தொகுத்த ஆசிரியை திருமதி சு. சிவகாமசுந்தரி அம்மையார் வள்ளற்பணியே தன் பணியாகக் கொண்டுள்ள தஞ்சை திரு K. பழனிவேல் அவர்களின் திருமகளாவார். “குலவிச்சை கல்லாமற் பாகம்படும்” என்பதற்கேற்ப தந்தை வழியே மகளார் நின்று, வள்ளற்பணியில் ஈடுபட்டமை, என்போன்றானுக்கு வள்ளற்பணி இவ்வுலகத்திற்குக் கொள்ளற்பணியாகத் தொடர்ந்து நடந்தே வரும் என்ற உண்மை நிலையினை உணர்ந்து உள்ளம் பூரிக்கின்றேன்.

இந்நூலின்கண், பொருளடக்கம் பத்துத் தலைப்புகளில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பத்துத் தலைப்புகளும் வகைப்படுத்தப்பட்டு, அதற்கேற்ப விரிக்கப்பட்டுள்ளமை தொகை, வகை, விரி என்பதன் பாற்படும். தொகுத்துள்ள தலைப்புகளை வகைப்படுத்தினால் அவைகளில் பொருள் ஒருவாறு விரிக்கக் கூடிய நிலையை இயல்பாக அடைந்துள்ளமை தெரியவரும். வள்ளல் நெறியே தலைப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் இந்நூலை ஆய்வு நூலாக அமைத்துள்ளார்கள். முகவுரையில் "அருட்பிரகாச வள்ளலாருக்கு ஒரு காணிக்கையாக அவர் அருட்பா பற்றிய இந்த ஆய்வு மலரைப் படைக்கின்றேன்" எனக் கூறியுள்ளமை அவர்கள் வள்ளலாரின் வாரிசு என்று கூறாமலே அமையும். வள்ளற் பெருமானின் வாரிசாக உள்ள ஒருவர் அருட்பா பற்றி ஆய்வு செய்து மலர் படைத்தல் இயல்பே. மலர் தூவி இறைவழிபாடு இயற்றுதல் மலரைப் படைத்தலாகும். நமது நாட்டு மரபு, 'படைத்தல்' வழிபடுதல் என்ற முறையில் இந்நூல் வள்ளற் பெருமானை வழிபடுவதே எனக் கூறல் மிகையாகா.

இந்த ஆய்வு நூல் வழிபாட்டு நூலின் காணிக்கையாகும். வழிபாட்டில் காணிக்கை செலுத்துதல் சிறப்பேயாகும். அவ்வழியில் வள்ளலாருக்குக் காணிக்கை செலுத்தப் பட்டுள்ளதை எண்ணும்பொழுது வள்ளற் பெருமான் இந்நூல் ஆசிரியருக்கு எல்லா நலன்களையும் நல்குவார் என்பது என் போன்றானது துணிபு. வள்ளற் பெருமான் ஆசிரியர் அவர்களுக்குப் பல்லாற்றானும், திருவருட்பாவில் தோய்ந்து, ஆய்வு செய்து மேலும், மேலும் காணிக்கை மலர்கள் தூவிப் படைப்பதற்கு அருள் புரிய வேண்டுமென எல்லாம் வல்ல அருட்பெருஞ்சோதி ஆண்டவரை வழுத்துகின்றேன். எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே இறங்கி ஈந்தருளும் பதம்.

வள்ளல் மலரடி வாழ்க.

*செ. கோவிந்தசாமி*

*செம்பியநல்லூர்*

# முகவுரை

*எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே*
*எல்லாம் வல்லான் றனையே யேத்து.*

அருட்பிரகாச வள்ளலாருக்கு ஒரு காணிக்கையாக அவர் அருட்பா பற்றிய இந்த ஆய்வு மலரைப் படைக்கின்றேன்.

திருவள்ளுவர், திருமூலர், திருநாவுக்கரசர், மணிவாசகப் பெருந்தகை, பட்டினத்தடிகள், தாயுமானார் என வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் வந்தவர் வள்ளலார். அகத்தே கருத்துப் புறத்தே வெளுத்திருந்த உலகர் அனைவரையும் திருத்திச் சன்மார்க்க சங்கத்தில் சேர்க்கவும், சேர்ந்தவரெல்லாம் இகத்தே பரத்தைப் பெற்று மகிழவுமென்றே இறைவனால் சென்ற நூற்றாண்டில் வருவிக்கப் பெற்றவர்.

வள்ளல் வழங்கிய அருட்பா ஒரு கற்கண்டு மலையாகும். அதை எங்கே விண்டு உண்டாலும் இனிப்பு மயமாக விளங்கும். வள்ளலாருக்கு முன்னும், பின்னும் எத்தனையோ மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆயினும், அவர் எல்லோருடைய ஒளியும் வள்ளலாரின் 'அருட்பெருஞ்சோதி'யில் சங்கமமாகி விடுகின்றது.

இத்தகைய வள்ளலாரின் பாட்டுத் திறத்தைத் தமிழர் உள்ள இடமெல்லாம் துய்க்கச் செய்ய வேண்டுமென்ற பேராசை கொண்டே இம்முதல் மலர் கன்னி முயற்சியாக முகிழ்த்திருக்கின்றது.

இந்நூலிலுள்ள பத்துக் கட்டுரைகளையும் தமிழ்ச் சமுதாயம் ஒருமுறையேனும் படித்தால் வள்ளலார் நமக்கு வைத்துவிட்டுப் போயிருக்கும் அழியாப் பெருஞ்சொத்தின் பெருமதிப்பை நன்கு தெரிந்து கொள்ளக்கூடும்.

இந்நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள, எனது பெறுமதிப்பிற்கும், வணக்கத்திற்குமுரிய பேராசிரியப் பெருந்தகை, மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர், பல்கலைச் செல்வர், பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கட்கு என் நன்றி என்றும் உரியதாகுக.

சிறப்புரை வழங்கியுள்ள, சென்னை இராமலிங்கா மிஷின் தலைவரும், வள்ளல் நெறியில் நிற்பவரும், பல நற்காரியங்களுக்குத் துவக்குநரும், எனது வணக்கத்திற்கும் மதிப்பிற்குமுரியவர்கள் திரு. நா. மகாலிங்கம் அவர்கட்கு என் நன்றி என்றும் உரியதாகுக.

வாழ்த்துரை வழங்கியுள்ள, வள்ளல் வழிப் பரம்பரையினரும், நூற்றிமுப்பது வயது நிரம்பப் பெற்றவரும், முதுபெரும் புலவரும், எனது வணக்கத்திற்கும் மதிப்பிற்குமுரிய செம்பியநல்லூர் திரு செ. கோவிந்தசாமி அய்யா அவர்கட்கு எனது சிறந்தாழ்ந்த நன்றி என்றும் உரியதாகுக.

நூல் சிறப்புற வெளிவரப் பல்லாற்றானும் உதவி, ஒத்துழைத்து, ஊக்குவித்த கோவை மெர்க்குரி திரு. கிருஷ்ணசாமி அவர்கட்கு என் நன்றி.

இது எனது முதல் முயற்சி. ஆசை பற்றி அறைந்தது. தமிழ்ப் பெருங்குடி மக்கள் யாவரும் எனது முயற்சியை மேன்மேலும் ஆதரிப்பர் என்று நம்புகிறேன்.

*சு. சிவகாமசுந்தரி (1969)*

---

*வள்ளலாரை எனக்கு இனங்காட்டிய என் தந்தை*
*தஞ்சை திரு.K.பழனிவேல் அவர்களின் அறுபதாண்டு நிறைவு*
*நினைவாக!*

---

# 1. வள்ளலார்

இந்திய நாட்டுக்கு பலவகையான சிறப்புகள் இருந்த போதிலும் தலைமையானது, ஆன்மிகத் துறையில் உலகிற்கு தொடர்ந்து வழி காட்டி வரும் சிறப்பே ஆகும். காரணம்... இந்து சமயம் உலகியல் வழிமுறைகளுக்கு ஏற்ற முறையில், மக்களின் அன்றாட வாழ்க்கையில் பின்பற்றத் தக்கவாறு ஆன்மிக வாழ்க்கை நெறியைப் புகட்டிவருவதுதான். தேவை ஏற்படும் காலங்களில் எல்லாம், இந்த மண்ணில் மகான்கள் தோன்றிப் புதிய புதிய திட்டங்களைப் புரட்சிகரமான முறையில் தந்துவிட்டு சென்று இருக்கிறார்கள். அருளியலின் பண்ணையான தமிழ் நிலம், அவர்களின் அடிப்படையை மட்டும் மாற்றவில்லை. "அவன் அன்றி ஒரு அணுவும் அசையாது" என்பதும் "வேத ஆகமங்களே நமக்கு வழிகாட்டி" என்பதும் இவ்வடிப்படைகள் எனலாம். அவ்வாறு தோன்றிய மகான்களின் ஒருவர்தான் **வள்ளலார்** என்று அழைக்கப்படும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்.

*"கருணையும், சிவமே பொருள் எனக் காணும்*
*காட்சியும் பெறுக! மற்றெல்லாம்*
*மருள் நெறி என நீ எனக்கறிவித்த*
*வண்ணமே பெற்றிருக்கின்றேன்"*

என்று இறைவனிடமே அவர் கூறும் அவர் அனுபவம் அவரது கடவுள் கோட்பாட்டையும்

*"ஆகம முடிமேல் ஆரண முடிமேல்*
*ஆக நின்று ஓங்கிய அருட் பெருஞ் சோதி"*

என்ற அகவல் அவர் வேத நெறிக்கு புறம்பானவரல்லர் என்பதையும் காட்டுகிறது. "யாதொரு தெய்வம் கண்டீர், அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்ற சித்தாந்த சாத்திரத்திற்கு இலக்கியமே அருட்பா என்று கூறலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேல் நாட்டவரின் ஆட்சி, ஆட்சி மொழி, நாகரிகம் இவை பெற்ற செல்வாக்கின் விளைவாக, இந்து சமயத்தில் சீர்திருத்தப் புயல் வீசியது. இந்த சீர்திருத்தத்தின் ஆர்வ வேகத்தில், இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களையே மூட நம்பிக்கை என்று புறக்கணித்து, மேனாட்டார் கருத்துக்களை தமதாக்கிக்கொள்ள சிலர் எண்ணினார்கள்.

இந்த சூழ்நிலையில்தான் வட நாட்டில் ராமகிருஷ்ண பரமஹம்சர் தோன்றி, இந்து சமயத்தின் மேன்மையை உலகிற்கு உணர்த்தினார். அந்த பெருமையை மேலும் உலகம் உணருமாறு செய்தார் வேதாந்த சிங்கம் சுவாமி விவேகானந்தர்.

வள்ளலார் வாழ்ந்த காலமும் இதுவே. வள்ளலாரின் ஆன்ம நேய ஒருமைப்பாடு உலகளாவிய ஒன்று. வாழையடி வாழையென நம் தமிழகத்தில் தொன்று தொட்டு முளைத்தெழுந்த தொண்டர் குலத்தின் பரிசு. தமிழகம் உலகினுக்கே தந்த பரிசு வள்ளலார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டைத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் ஆரம்ப காலம் என்றும் கூறலாம். ஏறத்தாழ மூன்று நூற்றாண்டு காலமாக வளம் குன்றி இருந்த தமிழ், மதிப்பிடற்கரிய புதிய வளம் பெற்ற காலம் இது. அச்சு எழுத்தை, 'எழுதா எழுத்து' என இக்காலத்திலேயே போற்றினர். இந்த புதுமையைப் பயன்படுத்தி பழைய நூல்களை பாதுகாக்க பெரியோர்கள் பலர் பாடுபட்டனர். வித்துவான் தாண்டவராய முதலியார், விசாக பெருமாளையார், மழவை மகாலிங்கையர், வேதகிரி முதலியார் இத்துறைக்கு முன்னோடிகளாவார். தமிழ்மறை வள்ளுவம், நாலடியார், தேவாரப்பாக்கள், கம்ப ராமாயணம் போன்ற பல நூற்கள் அச்சேறின. சைவ நூற்களை திருத்தமாக அச்சிட்டு அருந்தொண்டாற்றினார் ஆறுமுக நாவலர். தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி ஆகியவற்றோடு, வேறு சில நூல்களையும் பதிப்பித்தவர் அறிஞர் தாமோதரம் பிள்ளை ஆவார். பதிப்புத் துறையில் தன்னேரில்லாத் தொண்டு புரிந்த டாக்டர் உ.வே. சா. பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தம் தலையாய பணியை துவக்கிவிட்டார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, காஞ்சி சபாபதி முதலியார், பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை போன்றோரின் தமிழ்ப் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தக் காலத்துப் புலவர்களுள், புதிய இலக்கிய படைப்பாளர்களில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் வள்ளலார். இவர் வடலூரார், இராமலிங்க சுவாமிகள், இராமலிங்க அடிகள், இராமலிங்கப் பெருமான், அருட்பெருஞ்சோதி மகான், சமரச சுத்த சன்மார்க்க ஞானி எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

“எல்லா மக்களும், எல்லா மதத்தினரும், எல்லா இனத்தவரும், எல்லா நாட்டினரும் வேற்றுமை இன்றி வாழவேண்டும். அறிவே இறைவன், அன்பே இறைவன் என்ற உண்மையை உணர்ந்து வழிபடவேண்டும். இறைவன் ஜோதி வடிவானவன், கருணை

உள்ளவன்; இந்த இரண்டின் கூட்டுறவே சன்மார்க்கம். இதை உணர்ந்து நடப்பவர்கள் ஒன்றுபட்டு கூடிவாழ்வதே, தங்கமே அனையார் கூடி வாழும் சன்மார்க்க சங்கம். இந்த சங்கத்தை உருவாக்க, இறைவன் வருவிக்கவே நான் உலகிற்கு வந்தேன்; மறைகிறேன்; நான் மீண்டும் தோன்றுவேன்" என்று கூறி மறைந்த வடலூர் வள்ளலார், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்து மறைந்த புலவர் பட்டியலிலே மட்டும் இடம் பெறத் தக்கவரா? அதற்கு அப்பாலும், அப்பாலுக்கப்பாலும், அவரைப் பற்றி சிந்திக்க இயலுமா? கோடான கோடி தமிழ் மக்களின் உள்ளங்களில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள சன்மார்க்க விளக்கு, இன்று உலக மக்களின் உள்ளங்களிலும் சுடர் விடத் துவங்கியுள்ளது என்றால் சிந்திக்க வேண்டியதுதான்!

இராமலிங்க அடிகள் எளிமையும், இனிமையும், இசை நயமும் ததும்பும் தோத்திரப் பாடல்களைப் பாடிய கவிஞர் மட்டும் அல்லர். கீர்த்தனைகளையும், கும்மியையும், கண்ணியையும், தெம்மாங்கையும் பாடித் தமிழுக்கு வளங்கூட்டிய புலவர் மட்டுமல்லர். எளிய இனிய தமிழில், 'மனுமுறை கண்ட வாசகம்' எழுதிய உரைநடை ஆசிரியர் மட்டுமல்லர். 'நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்' என்ற தலைப்பில் மருத்துவத் திறன் விளக்கிய மருத்துவர் மட்டுமல்லர். பின் வள்ளலார் யார்?

எல்லா உயிர்களிலும் இறைவன் திருநடனம் புரிகிறாரென்ற உண்மையைக் கூறி, சீவகாருண்ய நெறியினைக் கற்பித்த வழிகாட்டி. ஒவ்வோர் உயிரையும் புனிதமாகக் கருதி, அன்பு பெருக்கி வாழ வேண்டும் என்பதை வழங்கிய பெருந்தகை. உயிர்களை ஒரு சேரப் பிணைக்கும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டிற்கு வடிவம் கொடுத்தவர். அவர் உருவாக்கிய சமரச சன்மார்க்க சங்கத்தின் தனித் தலைவர் எல்லாம் வல்ல இறைவனாவார். தயை என்னும் அருளுடையார் அனைவரும், சமரச சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்த அகவினத்தாரென்றும், சேராத புறவினத்தாரைத் தம் வழிப்படுத்தச் செய்யும் தொண்டே சன்மார்க்கத் தொண்டு - இதுவே இறைபணி என்றும் கூறினார்.

*"தயை உடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம்*
*சார்ந்தவரே ஈங்கு அவர்கள் தம்மோடும் கூடி*
*நயமுறு நல் அருள்நெறியில் களித்து விளையாடி*
*நண்ணுக என்று எனக்கு இசைத்த நண்புறு சற்குருவே"*

என்றும்

*"அருளுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம்*

*அடைந்தவரே ஆதலினால் அவருடனே கூடித்*
*தெருளுடைய அருள்நெறியில் களித்து விளையாடிச்*
*செழித்திடுக வாழ்கஎனச் செப்பியசற் குருவே"*

என்றும்,

*"கொலைபுரிவார் தவிரமற்றை எல்லாரும் நினது*
*குலத்தாரே நீஎனது குலத்துமுதல் மகனே*
*மலைவறவே சுத்தசிவ சமரசசன் மார்க்கம்*
*வளரவளர்ந் திருக்கஎன வாழ்த்தியஎன் குருவே"*

என்றும்,

*"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்*
*உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார்"*

என்றும் தெளிவாகத் தன்னை மற்றவர்களினின்றும் தனித்துக் காட்டிய வள்ளல் பெருமானை உணர அவரின் அருட்பா தெள்ளமுதத்தில் திளைக்க வேண்டும்.

பகைமை காரணமாக பழிப்பிலும், நட்பு காரணமாக ஏத்தலிலும் வாழும் உலகோர் வள்ளலாரை எப்படிக் காணுவார்? வள்ளுவப் பெருமானை உணர்தற்கு வள்ளுவமும், சேக்கிழாரை உணர்தற்குப் பெரிய புராணமும், கம்பனை அறிதற்கு இராமாயணமும், மற்றவர்களை இனம் காண அவரவர்களின் நூற்களும் உதவுதல் போல, வள்ளல் பெருமானைக் காண அவரின் 'திருவருட்பா' எனும் பெட்டகமே நமக்கு உறு கருவியாக நிற்கின்றது.

ஏராளமான படங்கள் எழுதப்படுவதும், பிடிக்கப்படுவதும், இன்று சர்வ சாதாரனமான நிகழ்ச்சியாகும். இது எண்ணிக்கையில் அடங்காமல் பெருகிவருகிறது. இப்படங்கள் எல்லாம் உருவத்தின் புற அழகைக் காட்டுமே தவிர உள்ளத்தைக் காட்டாது; காட்ட முடியாது. 'அகத்தின் அழகு முகத்தில் என்பார்களே'... அது சிலருக்குத்தான் பொருந்தும். அவ்வாறெனின், உள்ளத்தை உணர்த்தும் படங்கள் கிடையாதா? உண்டு. அவைதாம் நூற்கள். அந்நூற்களின் வாயிலாகவே, அவர்களின் உள்ள நிலையை உணர்கிறோம். நூற்களின் வாயிலாக நூலுடையாரின் உள்ளத்தை உணர்வதோடு, மெல்ல மெல்ல உருவத்தையும் உணரலாம். இராமலிங்கப் பெருமானின் அருள் பழுத்த நெஞ்சங் கொண்ட அழகிய உருவைக் காண 'அருட்பா' என்னும் பளிங்கறையைப் பார்க்க வேண்டும். புரியாத பலவற்றை புரிந்து கொள்ளலாம்.

*“சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே*
*சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே*
*சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்*
*சோம்பர் கண்டார் அச்சுருதிக்கண் தூக்கமே.”*

என்றும்,

*“தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம் உள்ளே*
*தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம் உள்ளே*
*தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம் உள்ளே*
*தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே”*

எனவும் திருமூலர் விளக்கும், அறிவு விளக்கத்தால் ஒளியில் தூங்கும் தகைமை பெறுவோருக்கு ‘தூங்காத தூக்கத்தில் தூக்கிய பாதம்’ என்று இராமலிங்கரும் சிறப்பித்துக்கூறும் நிலையைப் பெறுவோர் வள்ளலாரின் உள்ளத்தைப் பார்க்க முடியும்.

# 2. வள்ளலாரும் தமிழும்.

தமிழை முறையாக படித்தவரா வள்ளலார்? என்ற வினா பலரது மனத்தில் எழுகின்ற வினாவாகும். "கண்ணால் யானும் கண்டேன் காண்க" என மணிவாசகப் பெருந்தகையைப் போல, தணிகை முருகப் பெருமானைக் கண்களால் கண்டு, சீர்கொண்ட தெய்வத்தைப் பாடிய வள்ளலார், இந்நிகழ்ச்சியின் உண்மையை விவரிக்கின்றார்.

*"என்னை ஒன்பதாம் ஆண்டிலே ஆண்டுகொண்ட அருட்கடலே"*

என்றும்

*"ஓதாது உணர்ந்திட ஒளியளித்தாய்"*

என்றும்

*"ஏட்டில் எழுதிய மறைகளையும், எழுதாத மறைகளையும்*
*என் உள்ளத்தே எழுதுவித்தாய்"*

என்றும்

*"ஓதி உணர்ந்தவரெல்லாம் எனைக்கேட்க, எனைத்தான்*
*ஓதாமே உணர்ந்து உணர்வாம் உருவமுறச் செய்தாய்"*

என்றும் பாடியுள்ளார்.

*"ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட அருட்கடலே"*

என்றும்,

*"ஆறொடு மூன்றாண்டு ஆவதிலே முன் என்னை ஆண்டாய்"*

என்றும்,

*"ஓதாதுணர்ந்திட ஒளியளித் தெனக்கே*
*ஆதாரமாகிய அருட்பெருஞ் சோதி"*

என்றும்

*"ஏடகத்தே எழுதாத மறைகள் எலாம் களித்தே*
*என்உளத்தே எழுதுவித்த என்உரிமைப் பதியே"*

என்றும்,

*"ஓதி உணர்ந்தவர் எல்லாம் எனைக் கேட்க எனைத்தான்*
*ஓதாமல் உணர்ந்து உணர்வாம் உருவுறச் செய் உறவே"*

என்றும் கூறியதுடன்,

*"படித்தேன் பொய் உலகியல் நூல் எந்தாய் நீயே*
*படிப்பித்தா லன்றியுமப் படிப்பிலிச்சை*
*ஒடித்தேன் நான் ஒடித்தேனோ ஒடிப்பித்தாய்"*

என்றும்,

*"படித்தனன் உலகப் படிப்பு எலாம் மெய் நூல்*
*படித்தவர் தங்களைப் பார்த்து*
*நொடித்தனன் கடிந்து நோக்கினேன்"*

என்றும்,

*"படிப்பு அடக்கிக் கேள்வி எலாம் பற்று அற விட்டு அடக்கி"*

என்றும்,

*"படித்த என் படிப்பும் கேள்வியும் இவற்றின்*
*பயனதாம் உணர்ச்சியும் அடியேன்"*

என்றும் கூறுகின்ற அவருடைய கூற்றால், உலகியல் நூற்களை வள்ளலார் புரட்டிப் பார்த்திருக்க வேண்டும். இறைவன் அவரைப் புரட்டச் செய்திருக்க வேண்டும். தமிழ் மொழிமாட்டு வள்ளலாருக்கிருந்த பற்று அளவிடற்கரியதாகும்.

'தமிழ்' என்ற சொல்லிற்கு வள்ளலார் தரும் பொருள், அவரது உரைநடை வாயிலாக அறியலாம். தமிழ் என்னும் மொழியில் அடங்கிய ஒவ்வோர் எழுத்துக்கும் உள்ள சிறப்பைத் தீர்க்கமாக ஆராய்ந்து உள்ளார். "கடவுள் ஆணையால் கற்பிக்கப்பட்டது தமிழ்" என்கிறார் வள்ளலார். இங்குக் 'கற்பிக்கப்பட்டது' என்பதன் பொருள், ஆதியில் அகத்திய முனிவர்க்குக் கற்பிக்கப்பட்டுப் பின் அவரால் தொல்காப்பியர் முதலானவர்கட்கு அறிவிக்கப்பட்டு, பின் உலகெங்கும் கற்பிக்கப்பட்டதைக் குறிக்கும்.

இதனை

*"ஆதியில் தமிழ் நூல் அகத்தியர்க் குணர்த்திய*
*மாதொரு பாகனை வழுத்துதும்*
*போத மெஞ்ஞானம் நலம்பெறல் பொருட்டே"*

என ஆனாப் பெருமைச் சேனாவரையர் கூற்றாலும், கவ்வியில் பெரியாராகிய கம்பர், "தழர்புரை சுடர்க் கடவுள் தந்ததமிழ் தந்தான்" என்று அறிவிக்கும் ஆற்றாலும், ஆன்றோர் பலரது கூற்றாலும் அறியலாம். தமிழ் "இனிமை" என்பது நிகண்டு மூலம் அறிய வருகிறது. இப்பொருள் தருகின்றமையை தமிழ். 'மருதம்' எனத் தெய்வப் புலவர் சேக்கிழாரும் "வண்டு தமிழ்ப் பாட்டு இசைக்கும் தாமரையே" என்று கம்பரும் கூறிய தொடர்களில் காணலாம்.

'ழ' கர மெய்யெழுத்தைப்பற்றி வள்ளலார் கூறும் பொழுது "'ழ'கர என்ற சிறப்பியல் அக்கரம் (எழுத்து), சிவயோக பூமியாகிய பாரதக் கண்டத்தில், பௌராணிகத் தத்துவத்தால் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசம் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேச பாஷைகளிலும் இல்லாதது" என எழுதியுள்ளார். இதற்கும் மேலே ஒருபடி சென்று தமிழின் பெருமையை, "செந்தமிழ், கொடுந்தமிழ் என்னும் இருமைக்கும் ஒற்றுமை உரிமையும், முத்துறைத் தமிழுக்குள் முதன்முறைத் துறையானதும் இருக்கு, யசுர், சாமம், என்னும் சமஸ்கிருத வேதத் திரயப் பொருள் அனுபவத்தை எளிதில் கற்றுணர்ந்து தெளிந்த அனுபவத்திற்கும், திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களை உடையதும், ஆரியம், மகாராட்டிரம் , தெலுங்கு போன்ற பாஷைகளைப் போல் ஆகாமல், பெரும்பாலும் கற்பதற்கு எண் அளவு சுருக்கமாகவும், ஒலி இலேசாகவும், கூட்டு என்னும் சந்தி அதி சுலபமாகவும், எழுதவும், கவி செய்யவும், மிகநேர்மையும், அட்சர ஆரவாரம், சொல் ஆடம்பரம், போது போக்கு, பெருமறைப்பு முதலிய பெண்மை அலங்காரமின்றி எப் பாஷைகளின் ஓசைகளையும் தன் பாஷையில் அடக்கி ஆளுகையால் ஆண் தன்மை பொருந்தியதுமான தன் பாஷைக்கே இவ்வாறு கூறியதன் கருத்து, வடமொழியில் இம்மூன்று எழுத்துக்கள் சில இல்லாமையால் என்க. அமைவுற்ற ழ், ற், ன் என்னும் முடி, நடு, அடி சிறப்பியல் அக்கரங்களில் சுட்டறச் சுட்டும் இயற்கை உண்மைத் தனித் தலைமை பெருமை சிறப்பியல் ஒலியார்" என்றெழுதி, இறுதியில் "இதன் கருத்து யாதெனில் தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சுத்த சிவானுபவத்தைக் கொடுக்கும் என்பதாம்" என்று வள்ளலார் கூறுகிறார்.

சுந்தரரது திருப்பாட்டைப் புகழும் இடத்தில் வள்ளலார் வடமொழியை விடத் தமிழ் மொழியே சிறந்தது என்பதை

*"இலைக் குளநீர் தழைத்து அதனில் இடங்கர் உற அழைத்து அதன்வாய்த்*
*தலைக்கு தலை மதலை உயிர் தழைப்ப அழைத்து அருளிய நின்*
*கலைக்கும் வட கலையின் முதல் கலைக்கும் உறு கணக்கு உயர் பொன்*

*மலைக்கும் அணு நிலைக்கும் உறா வன் தொண்டப் பெருந்தகையே."*

என விளக்குகிறார். இப்பாடலின் மூலம் தமிழ்ப் பாடல்களை மேருமலைக்கும், வடகலைகளை அணுவுக்கும் உவமைத்துக் காட்டுகிறார்.

இவ்வாறாக வள்ளல் பெருமான் தானும் படித்துத் தமிழையும் படித்து முன்னோர்க்கெல்லாம் வாரிசாக நிற்பதைக் காண்கிறோம்.

வள்ளல் பெருமான் இயற்றிய அருட்பா, ஆறு திருமுறைகளாக அமைந்திருக்கின்றது. அப்பாக்கள் அனைத்தும், அமிழ்த வெள்ளமாக உள்ளன. அவற்றில் திளைப்பவர் இறவாமை பெறுவார். அருட்பாவிலும், இதர வியாக்கியானப் பகுதிகளையும், உபதேசப் பகுதிகளையும் ஊன்றிப் பார்க்குங்கால், தமக்கு முன் வாழ்ந்த பலரையும், அருட்பா வழியாக வள்ளலார் காட்டுவதை உணரலாம்.

தொல்காப்பியர் போற்றிக்கூறும் 'அறிவர்களின்' ஒருவராக வைத்துப் போற்றத்தக்கவர் வள்ளலார்.

*"மருவில் செய்தி மூவகைக் காலமும்*
*நெறியின் ஆற்றிய அறிவன்"*

என்பது தொல்காப்பிய புறத்திணையியல் சூத்திரம்.

*"சொல்லிய கிழவி அறிவர்க்கும் உரிய"*
*"இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்*
*கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்"*

என்பன அறிவரைப் பற்றி தொல்காப்பியர் கூறும் நூற்பாக்களாகும். இந்த இலக்கணத்திற்கு "காமம் வெகுளி மயக்கமில்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வுமென்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைத்த முழுதுணர்வுடையோன்" அறிவர் என்றும் "கலச யோனியாகிய அகத்தியன் முதலியோரும் அறிவர் என்றுணர்க" என்றும் நச்சினார்க்கினியர் விளக்கமும், எடுத்துக்காட்டும் தந்துள்ளார். இதனால் அறிவர் என்பவர் அகத்தியர், வள்ளுவர், திருமூலர் போல உலகியலை நெறிப்படுத்தி அருளுலகுக்கு வழி காட்டும் உத்தமர்களாவார் என்பது விளங்குகிறது. இவ்வரிசையில் வடலூர் வள்ளலாரும் ஓர் அறிவரே.

'நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்', இல்லற - துறவற ஒழுகலாற்றில் வழுவினோரை, 'இடித்து வரை நிறுத்தலும்' அறிவர்தம் கடமையாகும். அக்கடமையை நிறைவேற்றவே வள்ளலார் தம்மை அர்ப்பணித்தார்.

உலகத்தில் தோன்றிய அனைத்து உயிர்களும், இன்புற்றிருக்க வேண்டு மென்ற பெரு நோக்கை அடிப்படையாகக் கொண்டு, உயிர்க்குலங்களின் அன்னையும், தந்தையுமாக விளங்கும் ஆண்டவனைத் தலைவனாகக் கொண்டு, ஆருயிர்கட் கெல்லாம் தொண்டு செய்ய வேண்டுமென்பதற்காக அமைக்கப்பட்ட அமைப்புக்களே சமயங்களாகும். சமயம் என்று கூறினால் புரியாமல் மருளுவோர்க் , அதனை, 'அருள்நெறி' என்று சுருங்கக் கூறி, விளங்க வைப்பதே பொருத்த முடையதாகும். சாதி, மதம், இனம் என்ற எல்லைக்கோடுகளை எல்லாம் தாண்டி, நிலம், நீர், என்னும் வேறுபாடுகளையெல்லாம் கடந்து, கல்வி, கல்லாமை, செல்வம், இல்லாமை, என்ற ஏற்றத் தாழ்வுகளை யெல்லாம் விடுத்து, எவ்வுயிர்க்கும் தொண்டாற்றும் அருள்நெறி அமைப்புகளாகிய சமயங்களில் பலப்பல பிணக்குகளும், குழப்பங்களும், பிளவுகளும், மறைப்புகளும் பிறவும் தோன்றி அறிவிலும், அறத்திலும் இருள் சூழ்ந்து மருள் விளைந்த காலத்தில், அவ்விருளை ஓட்டி, ஒளியை நாட்டச் சுருக்கமற்ற தமிழில், உருக்கமிக்க பாடல்களை, இரக்கமிக்க கடவுள் மீது பாடிப் பரவி பணி புரிந்தார் வள்ளலார். ஆன்ம நேய ஒருமைப்பாடு காண, ஆன்றோர் கருத்துக்களையெல்லாம் தன்னதாக்கி வாரி வழங்கினார். தொல்காப்பியர் கண்ட அறிவர் போலவே வாழ்வெல்லாம் வள்ளலார், உயிரிரக்கத்தால் பிறர் நலம் பேணியும், 'பணி செய்து கிடந்தார்'. அவரை 'நிறைமொழி மாந்தர்' என்று தொல்காப்பிய வழியிலேயே போற்றலாம்.

*"தொல்காப் பியனெனத் தன் பெயர் தோற்றிப்*
*பல்புகழ் நிறுத்த படிமை யோனே"*

என்றும் தொல்காப்பியப் பாயிரச் செய்யுளை மேற்கோள் காட்டியுள்ளார்.

வள்ளலார். தொல்காப்பியச் சொற்றொடர்களும், துறைகளும் வள்ளலார்தம் உரைநடைப் பகுதிகளில், சுளை சுளையாக அமைத்துள்ளதைக் காணலாம்.

தொல்காப்பியம் போலவே, வள்ளலாருக்குத் திருக்குறளில் இருந்த பற்றும், விளக்கமும் உணரலாம்.

*"செல்லா இடத்துச் சினம் தீது; செல்லிடத்தும்*

*இல் அதனில் தீயது; என்றது எண்ணிலையே! மல்லல்பெறத்*
*தன்னைத் தான் காக்கின் சினம் காக்க; என்றதனைப்*
*பொன்னைப் போல் போற்றிப் புகழ்ந்திலேயே! துன்னி*
*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல என்னும்*
*திகழ் வாய்மையும் நீ தெளிவாய்"*

இவை முதல் திருமுறையிலே நெஞ்சறிவுறுத்தல் என்னும் பகுதியிலே காணப்படுகின்றவை. இவை அப்படியே திருக்குறளை கற்றுணர்ந்து பாடிய பாடல்களெனலாம்.

*"செல்லா இடத்துச் சினம் தீது; செல் இடத்தும்*
*இல் அதனில் தீய பிற"*
*"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்"*
*"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வாரைப் பொறுத்தல் தலை"*

என்கிற குறட்பாக்களில் பிரதிபலிப்பு என்பதை அறியலாம். இவையன்றி, குறட்பாக்களின் சொற்றொடர்களையும், கருத்துக்களையும், வள்ளலார் அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

*"'உறங்குவது போலும்' என்ற ஒண்குரலின் வாய்மை*
*மரம் சுருதி அந்தோ! மறந்தாய்",*
*"'நெரு நல் உளன் ஒருவன்' என்னும் நெடும் சொல்*
*மருவும் குறட்பா மறந்தாய்!"*

என்று திருக்குறளின் பெயரையே குறிப்பிட்டுப் பாடும் பகுதிகள் 'நெஞ்சறிவுறுத்தலில்' காணப்படுகின்றது.

*"உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு"*
*"நெறுநெல் உளன்ஒருவன் இன்று இல்லை; என்னும்*
*பெருமை உடைத்து இவ்வுலகு"*

என்ற இரண்டு குறட்பாக்களும் மேலே காட்டிய அடிகளில் குறித்திருப்பதைக் காணலாம்.

*"கூத்தாட்டவை சேர்குழாம் விளிந்தால் போலும் என்ற*
*சீர்த்து ஆள் குரல் மொழியும் தேர்ந்திலேயே"*

என்று தம் நெஞ்சிற்கு அறிவித்துள்ளார். இது வள்ளுவத்தின்,

*"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம்*
*போக்கும் அதுவிளிந் தற்று"*

என்னும் அடிகளை ஒட்டியது. இது தவிர,

*"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு"*

என்னும் குறட்பாவை, சைவ சித்தாந்த சாத்திரங்களாகிய திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இரு நூற்கள் முறையே,

*"பற்றறுப்பதோர் பற்றினை பற்றிடில் ஆப்*
*பற்றை அறுப்பர் என்று உந்தீ பற"*

என்றும்,

*"பற்றினுள் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து*
*பற்றிப் பரிந்திருந்து பார்க்கின்ற பற்றதனைப்*
*பற்றுவிடில் அந்நிலையே தானே பாரம் ஆகும்*
*அற்றமிது சொன்னேன் அறி"*

எனவும் அமைத்து பாடியிருத்தலைக் காண வேண்டும்.

இவ்வாறே வள்ளல் பெருமானும் நெஞ்சறிவுறுத்தலில்

*"பற்றற்றான் பற்றினையை பற்றியிடல் வேண்டும்*
*பற்றற்றால் அன்றிப் பாலியாதல்"*

என்று கூறியுள்ளார்.

'இரவு' என்னும் அதிகாரத்தில் தமிழ்ப் புலவன்

*"இருத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவினும் தேற்றாதார் மாட்டு"*

என்ற குரலின் பொருளை ஆழமாக உணர்ந்த வடலூர்ப் பெருமான், அதனை விளக்கமாக 'நெஞ்சைத் தேற்றல்' என்னும் பகுதியில்

*"இரக்கின்றோர்களுக்கு இல்லை என்னார் பால்*
*இரத்தல் ஈதலாம் எனல் உணர்ந் திலையோ"*

என்று பாடியுள்ளார். இறைவன், 'அற ஆழி அந்தணன்' என வள்ளுவப் பேரரசன் கூற, வள்ளலாரும், 'அற ஆழியாம் அருட்பெருஞ்சோதி' என்றனர்.

அருட்பெருஞ்சோதி அகவலிலே 'எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக' என்று காணப்படும் வரி, 'எண்ணிய எண்ணியாங்கு எய்தும்' திருக்குறள் வரியை நினைவில் நிறுத்துகிறது.

*"மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்"*

என்பது திருக்குறள். "*எண்ணுவார் இதய அம்புயத்து அமர்ந்த அருட்பெருஞ்சோதி*' என்ற அகவல் அடிக்கு முற்பிறப்பாகும். 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்ற வரியைப் பின்பற்றி "*வேண்டுதல் இல்லார், வேண்டாமை இல்லார்"* என்று பாடினார்.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற கூற்றை ஏற்றுக்கொண்ட வள்ளலார், அந்நிலையில் தன் வெறுப்பையும், பிள்ளைப்பெரு விண்ணப்பத்தில் கூறுகிறார்.

*"பொருளிலே உலகம் இருப்பது ஆதலினால்*
*புரிந்து நாம் ஒருவர்பால் பலகால்*
*மருவினால் பொருளின் இச்சையால்*
*பலகால் மருவுகின்றான் எனக் கருதி*
*வெருவுவர் என நான் அஞ்சி எவ்விடத்தும்*
*மேவிலேன் எந்தை நீ அறிவாய்*
*ஒருவும் அப்பொருளை நினைத்தபோது எல்லாம்*
*உவட்டினேன் இதுவும் நீ அறிவாய்."*

என்பது அப்பாடல். இது போல் இன்னும் தேவர் திருவள்ளுவரின் குறட்பாவில் வள்ளலார் மூழ்கி, அவருக்கு வாரிசாக விளங்குவதைக் காண்கிறோம்.

தாயுமானவரின் தத்துவங்களை வள்ளலார் பாராட்டினார்; பின்பற்றினார் என்பதற்கும் பாடல்கள் சான்று கூறுகின்றன.

*"இன்று இருந்தார் நாளைக்கு இருப்பது பொய் என்று அறவோர்*
*நவின்று இருந்த வார்த்தைநீ நாடிலையோ!"*

இந்த அடிகள் தாயுமானவர் பாடலிலே உள்ள சச்சிதானந்த சிவம் என்ற பகுதியில் உள்ள செய்யுள் ஒன்றையே நினைவுபடுத்துகிறது.

*இனி ஏதுநமக்குஉன் அருள்வருமோ எனக்கருதி*
*ஏங்குதே நெஞ்சம் ஐயோ!*
*இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர் என்று*
*எண்ணவோ திடம் இல்லையே*
*அநியாயமாய் இந்த உடலைநான் என்றும் வரும்*
*அந்தகற்கு ஆள் ஆக்கவோ;*
*ஆடித்திருந்து நான் கற்றதும் கேட்டதும்*
*அவலமாய்ப் போதல் நன்றோ;*
*கனியெனும், வறிய செங்காயேனும்*
*உதிர்சருகு கந்த மூலங்களேனும்*
*கனல் வாதை வந்து எய்தின், அள்ளிப்*
*புசித்துநான் கண்மூடி மௌனியாகித்*
*தனியே இருப்பதற்கு எண்ணினேன்; எண்ணம்இது*
*சாமிநீ இது அறியா ததோ!*
*சர்வ பரிபூரண அகண்டதத் துவமான*
*சச்சிதானந்த சிவமே"*

என்ற தாயுமானவரின் பாடலில் வள்ளலாருக்கு உள்ள பற்றையே மேலே எடுத்துக்காட்டப்பட்ட வரிகள் காட்டுகின்றன.

வள்ளல் பெருமான் மூவர் தேவாரத்தையும் முறையாகப் பயின்றவர்; உள்ளத்தைப் பறிகொடுத்தவர்; வாசகத் தேனை தெவிட்டாமல் பருகியவர். வள்ளலாரின் நான்காம் திருமுறையில் நால்வரைப் பற்றியப் பாடல்கள் காணப்படுகின்றன. 'ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை' என்பது பதினோரு பாடல்களைக் கொண்டு சம்பந்தர் பெருமையைப் பாடுகிறது. 'ஆளுடைய அரசு அருள்மாலை' பத்துப் பாடல்களைக் கொண்டு நாவுக்கரசரைப் பற்றிப் பாடியது. 'ஆளுடைய நம்பிகள் அருண்மாலை' என்பது சுந்தரமூர்த்தியைக் குறித்து பத்து பாடல்களைக் கொண்டது. 'ஆளுடைய அடிகள் அருள்மாலை' மாணிக்க வாசகரைப் பற்றிய பத்துப் பாடல்கள் கொண்டது. இவற்றைப் படிக்குங்கால் நால்வரிடமும் வள்ளலாருக்கு உள்ள ஈடுபாடு தெளிவாகத் தெரியவரும்.

*"வான்கலந்த மாணிக்க வாசக நின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால் நற் கருப்பஞ் சாற்றினிலே*

*தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என்*
*ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே."*

என்ற பாடலில் மாணிக்கவாசகப் பெருமானிடம் தன்னை ஒப்புவித்த தன்மையை வள்ளலார் காட்டுகிறார். இருவரும் 'அச்சோபதிகம்' பாடியுள்ளனர். ஆளுடைய அடிகள் 'செம்மை நலம் அறியாத' என்பதில்

*"நம்மையும் ஒரு பொருளாக்கி, நாய்சிவிகை ஏற்றுவித்த*
*அம்மை எனக்கருளிய வாறார் அச்சோவே"*

என்கிறார். வள்ளலாரோ 'எம்மையும்' என்று தொடங்கும் பாடலில்

*"செம்மை தரு சித்தனை சிவாபதியைத்*
*தெள்ளமுதத் திரளைஎன்றன்*
*அம்மையைச் சிற்றம்பலத் தென் அருட்பெருஞ்சோதியைப்*
*பெற்றேன் அச்சோ, அச்சோ"*

எனக் கூறுகிறார். இன்னும் மணிமொழியார்,

*"அய்யன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"*

என்று கூறியதை,

*"அய்யனைச் சிற்றம்பலத் தென் அருட்பெருஞ்சோதியைப்*
*பெற்றேன் அச்சோ, அச்சோ"*

என்று ஆண்டு கொண்டார் வள்ளலார். 'ஆனந்த மாலை' என்னும் பதிகத்தை இருவருமே அருளியுள்ளனர்.

*"தாயே என்றுன்தாள் அடைந்தேன் தயாநீ என் பாலில்லையே"*

என்று மணிவாசகப் பெருந்தகையார் கூற,

*"சண்பை மறைக் கொழுந்து மகிழ் தர அமுதங்*
*கொடுத்தாள் தயவுடையாள் எனையுடையாள்"*

என வள்ளலார் பாடுகின்றார்.

*"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்*
*பெண்சுமந்த பாகத்தின் பெம்மான் பெருந்துறையான்*
*விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்தீசன்*
*கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை*

*மண்சுமந்து கூலி கொண்டக் கோவால் மொத்துண்டு*
*புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"*

என்ற மணிவாசகப் பெருந்தகையின் திருக்கருத்தைப் போற்றும் வகையில்

*"பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்*
*எண்சுமந்த சேவகன் போலெய்தியதும் வைகைநதி*
*மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியால்*
*புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே"*

என்று 'நான் கலந்து பாடுங்கால்' என்பதற்கு உரை விளக்கம் தந்துள்ளார்.

இனி வள்ளலாருக்கு திருமந்திரத்திடம் இருந்த ஈடுபாட்டைக் காண்போம். திருமந்திரத்திடம் வள்ளலாருக்கு ஏற்பட்ட உறவுக்கு காரணங்கள் மூன்று எனலாம். முதலாவது, சாத்திரங்களில் சிறந்தது திருமூலர் திருமந்திரம். திருமந்திரம் எண்ணாயிரம் என்பது இரண்டாவது கருத்து. மூன்றாவது, சன்மார்க்க உண்மை தெரியவேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனித்தால் விளங்குமென்பது.

*"நின்றார் இருந்தார் நிலை குலைய வீழ்ந்து உயிர்தான்*
*சென்றார் எனக்கேட்டும் தேர்ந்திலையே"*
*"தொட்டார் உணவுடனே தும்மினார் அம்ம உயிர்*
*விட்டார் எனக் கேட்டும் வெட்கிலையே"*
*"உண்டார் படுத்தார் உறங்கினார் பேர் உறக்கம்*
*கொண்டார் எனக்கேட்டும் கூசிலையே"*

என்பது போல நெஞ்சறிவுறுத்தலில் வள்ளலார் பேசும் வரிகள்,

*"அடப்பண்ணி வைத்தார் கடிசிலை உண்டார்*
*மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்*
*இடப் பக்கமே இறை நொந்தது என்றார்*
*கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"*

என்ற திருமந்திரப் பாடலின் உட்கருத்துக்களைக் கொண்டது என்பதில் ஐயம் இல்லை.

திருவருட்பாவின் பரசிவ வணக்கத்தில் இறைவனது அருள் நிலையைப் பற்றி பேசுகையில் 'அன்புரு பரம்பர சிவமே' என்று போற்றப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக

*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*

*அன்பே சிவம் ஆவதாகும் அறிகிலார்*
*அன்பே சிவம் ஆவதாகும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே!"*

என்கிற திருமந்திரப் பாடல் அமைந்துள்ளது.

இவற்றாலெல்லாம் வள்ளல் பெருமானுக்குத் தமிழின் மீது தளராது பற்று ஏற்படுத்திய தன்மையும், வாழையடி வாழையாக வளர்ந்துள்ள பாரம்பரியத்தின் ஆழத்தையும், அன்பையும் உணர்கிறோம்.

# 3. சமரச சன்மார்க்கம்

அருட்பா என்னுங் கருவி கொண்டு, வள்ளலார் வாழ்வை நோக்கினால், அவர் வாழ்வின் பற்றுக்கோடு எது என்பதை நாம் உணரலாம். அந்தப் பற்றுக் கோடுதான் அவர் வாழ்வுக்குக் குறிக்கோளைத் தந்தது; அழைத்துச் சென்றது. அந்தப் பற்றுக்கோடுதான் அனைவர் வாழ்வையும் மேன்மையுறச் செய்வது. அந்தப் பற்றுக்கோட்டிலிருந்து மனிதன் விலகும்போது மரணத்தைத் தழுவுகிறான். அந்தவொன்று .... அது எது? அதுதான் கடவுளிடத்து உறுதி கொள்வது. வாழ்விற்குக் கொழு கொம்பு போன்ற இதனை சிக்கெனை விரைந்து பற்றினார் வள்ளலார். தாம் வேறு, அக்கொம்பு வேறு என அதனைத் தனித்துப் பார்க்கவில்லை அவர். எண்ணம், சொல், செயல் எல்லாம் அந்தப் பற்றற்றானிடமே படியச்செய்தார். அவரது ஊன், உயிர், உடல் அனைத்தும் அதனூடே உருவி, பிணைந்து கிடந்தது.

*"அப்பா நின்னை அன்றி எங்கும் அணைப்பார் இல்லையே*
*அந்தோ நின்னை அன்றி எங்கும் அருள்வார் இல்லையே*
*எப்பா லவர்க்கும் நின்னை அன்றி இறைமை இல்லையே*
*எனக்கும் நின்மேல் அன்றி உலகில் இச்சை இல்லையே."*

*"உன்னை மறக்கில் எந்தாய் உயிர் என் உடம்பில் வாழுமோ*
*உன்பால் அன்றிப் பிறர்பால் என்றன் உள்ளம் சூழுமோ*
*என்னைக் கொடுக்க வாங்கிக் கொண்ட தென்ன கருதியோ*
*எந்தாய் நின்னைக் கொடுக்க என்பால் இன்று வருதியோ."*

*"இறைவா நின்னைக் கனவில்ஏனும் யான் மறப்ப னோ*
*எந்தாய் உலகத் தவர்கள் போல் நான் இனி இறப்ப னோ*
*மறை வாசகமும் பொருளும் பயனும் மதிக்கும் மதியி லே*
*வாய்க்கக் கருணை புரிந்து வைத்தாய் உயர்ந்த பதியி லே."*

*"இறுகப் பிடித்துக் கொண்டேன் பதத்தை இனி நான் விடுவ னோ*
*எந்தாய் பாதம் பிடித்த கையால் வேறு தொடுவ னோ*
*குறுகப் பயந்து கூற்றும் ஓடிக் குலைந்து போயிற் றே*

*கோவே உன்றன் அருட் சிற்சோதி என்ன தாயிற் றே.”*

இந்தப் பாடல்களுக்கு விளக்கம் தருதல் வேண்டுமென்ற நிலை இல்லை. இறைவனிடம் தன்னை இணைத்துக் கொண்ட வள்ளலார், உலகத்தவரை அவனோடு இணைப்பதற்காக இறைவன் தன்னை வருவிக்கத் தான் வந்ததாகவே கூறுகிறார். உலகத்தவரின் குறைகளுக்காக வள்ளலார் குறைகளை முறையிட்டார். கசிந்து கசிந்து உருகினார்; அழுதார்; மனமாசைக் கழுவினார்; இறுதியில் பெறற்கரிய மார்க்கம் ஒன்றை உருவாக்கினார்.

*“என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந்தானே”* என்று கூறி, “சாகாதவனே சன்மார்க்கி” என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார். *“சன்மார்க்கப் பெருநெறி கொண்டு வாழியவே”* என்று வாழ்த்தி,

*“ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்*
*ஈன்ற முதளித்த இனிய கற்றாயே”*

எனப் போற்றுகிறார்.

மாய்ந்தவர் மீட்டும் வரு நெறியாகிய சன்மார்க்கப் பெருநெறியை தமக்கு ஆண்டவன் உணர்த்த, உணர்ந்ததாகக் கூறுகிறார்.

சைவ சமயத்தில் பேசப்படுகின்ற சன்மார்க்க கருத்துக்களை யெல்லாம் தொகுத்துப் பார்க்கிறார் வள்ளலார்.

*“சாற்றும் சன்மார்க்கம் ஆம் தற் சிவ தத்துவத்*
*தோற்றங்கள் ஆன சுருதிச் சுடர் கண்டு*
*சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்*
*கூற்றத்தை வென்றார் குறிப்பு அறிந்தார்களே”*

\- *திருமூலர்*

*“ஒன்றது பேரூர், வழியாறு அதற்குள*
*என்றது போலும் இருமுச் சமயங்கள்*
*நன்றிது தீதிது என உரை மாந்தர்கள்*
*குன்று குரைத்தெழும் நாயை ஒத்தார்களே”*

- *திருமூலர்*

*“அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்*
*இன்றும் திருவுருவம் கண்டிலேன் - என்றுந்தான்*
*எவ்வுருவோ நும்பிராற்கு என்பார்கட் கென்னுரைக்கேன்,*
*எவ்வுருவோ நின்னுருவம் ஏது!"*

- *காரைக்காலம்மையார் அற்புதத் திருவந்தாதி*

*“விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே*
*எறிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்"*

- *திருநாவுக்கரசர்*

*“ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்*
*சோதிக்க வேண்டா, சுடர் விட்டுளன் எங்கள்சோதி”*

- *திருஞான சம்பந்தர்*

*“அறிவினன் மிக்க அருவகைச் சமயத்து*
*அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து”*

- *சுந்தரர்*

*“சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க!*
*சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க!*
*பத்தி வலையிற் படுவோன் காண்க!*
*மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க!*
*நூலுணர் வுணரார் நுண்ணியோன் காண்க!”*

- *மாணிக்க வாசகர்*

*“சுருதி வானவரும்; திருநெடுமாலாம்; சுந்தர விசும்பின் இந்திரணம்;*

*பரிதி வானவனாம்; படர்சடை முக்கட் பவனாம்; அகவுயிர்க்கமுதாம்*
*எருது வாகனனாம்; எயில்கள் மூன்றெறித்த ஏறு சேவகனுமாம் பின்னும்*
*கருதுவார் கருதும் உருவமாம்; கங்கை கொண்ட சோளேச்சுரத் தானே."*

- *கருவூர்த் தேவர்*

*"வாதமும் சமய பேதமும் கடந்த மனோலய இன்ப சாகரனே"*

- *பட்டினத்தார்*

*"ஓது சமயங்கள் பொருள் உணரு நூல்கள்*
*ஒன்றோ டொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்*
*யாது சமயம்? பொருள்? நூல்? யாதுஇங் கென்னின்,*
*இது ஆகும் அது அல்ல தெனும் பிணக்கதின்றி*
*நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண*
*நின்றது யாதொரு சமயம், அது சமயம் பொருள், நூல்."*

- *அருணந்தி சிவாச்சாரியார்*

*"முருகன் தனிவேல் முனிநம் குருவென்று*
*அருள் கொண்டறியார் அறியுந் தரமோ?*
*உருவன் றருவன் றுளதன் றிலதன்று*
*இருளன் றொளியின் றென நின்றதுவே."*

- *அருணகிரிநாதர்*

*"சைவ முதலா அளவில் சமயமும் வகுத்து, மேல்*
*சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ."*

- *தாயுமானவர்*

இவற்றையெல்லாம் அழுத்தமாகச் சிந்தித்த வள்ளலார், *“நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன்”* என்று அறிவிக்கின்றார். *“அருட்பெருஞ் சோதியை அடைதலே, எவைக்கும் அரிய பேறு”* என்று ஆணையிடுகிறார்.

*“அருட்சோதி ஆனேன் என்று அறையப்பா முரசு*
*அருளாட்சி பெற்றேன் என்று அறையப்பா முரசு”*

என்று முரசு கொட்டுகின்றார்.

*“தானே அருளானான் தானே பொருளானான்*
*தானே எல்லாம்வல்ல தானானான் - தானேதான்*
*நான் ஆனா னென்னுடைய நாயகனானான்”*

என்ற உண்மையைக் காணுகின்றார். இந்த உண்மையை வாடிய பயிருக்குச் சொல்ல விழைகிறார். வருந்திய மனிதருக்குக் கூற எண்ணுகிறார். சுத்த சன்மார்க்க ஞானியாகத் தன்னையாக்கிய பரம்பொருள், உலகத்தவரை ஆக்குவதற்குக் காட்டிய மார்க்கமே சன்மார்க்கம் என்று கூறுகிறர்.

இரக்கமே சன்மார்க்கத்திற்கு வழிகாட்டும்; சத் என்பதற்கு மெய்ம்மை என்பது பொருள். மார்க்கம் என்றால் நெறி என்று பொருள். சத் மார்க்கம் என்பதற்கு உண்மை நெறி என்பது பொருள். சத் மார்க்கம் என்ற வடமொழித் தொடர் சன்மார்க்கம் என்று தமிழாடை போர்த்து நிற்கின்றது.

மானிடராகப் பிறந்தோர் உள்ளக் குழைவுடையவராக இருக்கவேண்டும். இதயத்தே இரக்கம் பொங்கிக் குதித்தோடி, நாடுவோர் வேட்கையைத் தீர்க்கக் கூடியதாக அமைய வேண்டும். பிறரின் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகி, நம்மை அறியாமலேயே கண்ணீரை, குன்றிலிருந்து கோர்த்திடும் அருவிபோல வீழச்செய்யவேண்டும். பாரி முல்லைக்குத் தேர் கொடுத்ததும், பேகன் மயிலுக்குப் போர்வையளித்ததும் இவற்றையே காட்டுகிறது. இரக்கத்தின் சிறப்பை உணர்ந்தவர்களால் மட்டுமே இந்தச் செயலை உணர முடியும். எல்லையில்லாத மனவிரக்கமுள்ளவர்களின் செயலுக்குப் பாரியும், பேகனும் மண்ணில் புதைந்த பொன் இருளிலே மின்னுவதுபோல ஒளி விடுகின்றனர். இறக்கமுற்ற பெருமக்கள், செடி, கொடிகளிடமே இவ்வாறு அன்பு காட்டினர் என்றால், மக்களிடம் எப்படி நடந்து கொள்வார்களென்பதைக் கூறவும் வேண்டுமோ?

இரக்கத்தின் உயர்ந்த நிலையை அடைவோர்களெல்லாம் சன்மார்க்கிகளாக மாறமுடியும்.

சன்மார்க்க சங்கத்திலே சேர எண்ணுவோர்க்கு வேண்டிய மூலதனம் யாது? இரக்கம்! இதைத் தொடர்ந்த ஆன்ம நேய ஒருமைப்பாடு. இந்நெறிக்கு சாதியோ, சமயமோ, மதமோ, குலமோ, கோத்திரமோ, பிற ஏற்றத்தாழ்வோ எதுவுமில்லை. ஒத்தாரும், தாழ்ந்தாரு மில்லாமல் அனைவரும் இணைந்து சன்மார்க்க சங்கத்தை நடத்த முடியும். 'இரக்கமே வள்ளலாரின் உயிர்; உடல்; இரக்கமே அவர்.'

*"வரும் உயிர் இரக்கம் பற்றியே உலக வழக்கில்*
*என் மனம் சென்ற தோறும்*
*வெருவி நின் அடிக்கே விண்ணப்பித்து இருந்தேன்*
*விண்ணப்பஞ் செய்கின்றேன்"*

என்றும்,

*"நிலை பெறும் இரக்கம் நீங்கில் என் உயிரும் நீங்கும்*
*நின் திருவுளம் அறியும்"*

என்றும்,

*"ஆதலால் இரக்கம் பற்றி நான் உலகில் ஆடலே அன்றி ஓர் விடயக்*
*காதலால் ஆடல் கருதிலேன் விடயக் கருத் எனக்கு இல்லை"*

என்றும்,

*"என்னையும் இரக்கந் தன்னையும் ஒன்றாய்*
*இருக்கவே இசைவித்து இவ்வுலகில்*
*மன்னி வாழ்வுறவே வருவித்த கருணை*
*வள்ளல் நீ"*

எனவும் இரக்க வடிவாக நின்ற வள்ளலார், அருள் பூத்த நெஞ்சினர் சன்மார்க்க சங்கத்தை அடையலாம். எவ்வுயிரையும், பொதுவெனக் கொள்வோர் திருவுள்ளத்தில் சன்மார்க்கத்திற்கு இடம் இருக்கும்.

*"தயைஉடையார் எல்லாரும் சமரச சன் மார்க்கம்*
*சார்ந்தவரே ஈங்கு அவர்கள் தம்மோடும் கூடி*
*நயமுறு நல் அருள் நெறியில் களித்து விளையாடி*
*நண்ணுக என்று எனக்கு இசைத்த நண்புறு சற்குருவே*

*உயலுறும் என் உயிர்க்கு இனிய உறவே என் அறிவில்*
*ஓங்கிய பேர் அன்பே என் அன்பில் ஊறும் ஒளியே*
*மயலறு மெய்த் தவர் சூழ்ந்து போற்றும் மணி மன்றில்*
*மா நடத்தென் அரசே என் மாலை அணிந் தருளே."*

எனக் கருணையுள்ளவர்கள் அனைவரும் சங்கத்தைச் சேர்ந்தவரே என்று கூறுகிறார். தொடர்ந்து, *"அருளுடையார் எல்லாரும் சமரசசன் மார்க்கம் அடைந்தவரே!"* என்று கூறுதலால் சமரச சன்மார்க்க சங்கத்தின் அடித்தளம் இரக்கமே என்பது தெளிவாகிறது.

இந்தச் சங்கத்தில் இடம் பெற்றோர் அனைவருடைய வாழ்வுக்காக, அனைவருமே பிரார்த்திக்கிறார்கள். ஒத்தாரும், தாழ்ந்தாரும் எவருமில்லாது ஒருமையுளராகி உலகியல் நடத்துகிறார்கள். அவர்கள் பிரார்த்தனை யாது?

*"அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்*
*ஆர் உயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்"*
*"உண்ணாடி உயிர்கள் உறும் துயர் தவிர்த்தல் வேண்டும்"*
*"இருளாமை உறல் வேண்டும் எனை அடுத்தார் சுகம்*
*வாய்ந்திடல் வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்"*
*"தெருள் நயந்த நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று*
*நினைத்து எல்லோரும் வாழ்க இசைந்து"*

இதுதான் வள்ளலார் படைத்த சன்மார்க்க சங்கத்தின் வேண்டுகோள். இந்த வேண்டுகோளை உணர்ந்து, *"தம்மை மறந்து அருளமுதம் உண்டு தேக்கும் தகையுடையார்"* ஒன்றுசேர்ந்து உருவாக்கியதே சன்மார்க்க சங்கம். உலகத்தவர்களெல்லாம் சன்மார்க்க சங்கத்தைத்தான் சரணடைவார்கள். பன்மார்க்க மெல்லாம் பசையற்று ஒழிந்து, சன்மார்க்கம் ஒன்றே தழைக்கும்.

## 4. மனிதப் பண்பு

பண்பெனப் படுவதைப் பாடறிந் தொழுகுவதால், உலகம் பட்டுண்டு நிற்கிறது. வேறுள குழுவையெல்லாம் வெல்லும் ஆற்றல் படைத்த மனிதன், மகிழ்ச்சியும், மனநிறைவும் கொள்ளக்கூடிய தன்மையில், துன்பமும், இன்பமும் மாறிமாறி அவனைத் தாக்குகின்றன. இன்பத்திற்கும், துன்பத்திற்கும் துணிந்து துடிப்பதுதான் மனித வாழ்வின் குறிக்கோள். நிறைவான இன்பத்தைப் பெற்று, முக்காலத்திலேயும் மனிதன் நிம்மதியாக வாழ முடியாதா? என வினா தொடுத்தால் 'முடியும்' என்ற விடையை அழுத்தந் திருத்தமாகக் கூறமுடியும். அப்படியானால் இன்பம் எது? அதை எங்கே பெறலாம் என்ற வினாக்கள் தொடருகின்றன. 'அறத்தால் வருவதே இன்பம்' என்று கூறலாம். அவ்வாறெனின் அறம் எது என்ற கேள்வி பிறக்கிறது. 'மனத்துக்கண் மாசு இலன் ஆதல்' - அறம். 'மனமாசு நீங்க வழி என்ன?' என அடுத்த கேள்வியும் பிறக்கிறது. தனக்குவமை இல்லாதவனின் தாளைப் பற்றுவதுதான் மாசு, கவலை நீங்க வழியாகும். இருள் சேர் இருவினையும் கூட அகன்று விடுகிறது.

எந்த மனிதனும், பிறருடைய உதவி இல்லாமல் தனித்து வாழ முடியாது. அறிந்தோ அறியாமலோ மக்கள் எல்லோரும் இணைந்தே வாழ்கின்றனர். சாதி, மதம், இனம், நிறம், தேசம், மொழி, நாகரிகம் ஆகிய எந்த வகையிலும் பேதம் பாராட்டாமல் வாழும்போதுதான் மனிதப் பண்பு தலைதூக்கும். அப்பொழுதுதான் அறிவின் பூரணத் தன்மையையும் உணர முடியும். இத்தகைய அறிவுடையவர்களுக்குத் தொண்டு செய்யத்தான் தன் மனம் விரும்புவதாக வள்ளலார் கூறுகிறார். இவர்களையே பேரறிவாளனாக வள்ளலார் பார்க்கிறார். அறம் வெல்ல - பாவம் தோற்க - தொண்டாற்றும் பண்பாளனாக வாழ வள்ளலார் வழி காட்டுகிறார்.

*"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்*
*தம்உயிர்போல் எண்ணி, உள்ளே*
*ஒத்து, உரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யாவர்? அவர் உளம் தான் சுத்த*
*சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்*
*இடம் என நான் தெரிந்தேன்; அந்த*
*வித்தகர்தம் அடிக் ஏவல் புரிந்திட என்*

*சிந்தை மிக விழைந்த தாலோ”*

என வள்ளலார் பாடினார். இத்தகு மனிதத் தன்மை வேண்டுமென்பதை நம்முடைய கலைகள், சாத்திரங்கள் அனைத்துமே ஏற்றுக்கொள்ளுகின்றன. வாழ்க்கையில் மனிதனுக்குப் பல அனுபவங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் பல சாதாரணமான அனுபவங்கள். ஆனால் சிற்சில சமயங்களில் நிகழும் அரிய அனுபவங்கள், வாழ்க்கையில் ஒரு மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தும் அனுபவங்களாக அமைகின்றன. சாதாரண அனுபவங்களைத் தாங்கிக் கொள்கின்ற அளவுக்கு நம்மைத் தயாராக்கிக் கொண்டிருப்பதைப்போல, அரிய வாய்ப்புகளுக்காக நம்மை நாம் தயாராக வைத்துக் கொண்டிருப்பதில்லை. “சேர வாரும் செகத்தீரே” என அழைத்தால் கூடக் கேளாக் காதினராக இருந்து விடுகிறோம். “மூல பண்டாரம் வழங்குகிறான் வந்து முந்துமினே” எனப் பிடித்திழுத்தாலும் கூட, கால்களைப் பெயர்த்து வைக்கக்கூட முடியாமல் இருக்கிறோம். இந்தத் தடங்கல்களையெல்லாம் கடந்து, எதிர்பாராது கிடைத்த அறிய வாய்ப்பை எவன் ஒருவன் விடாது சிக்கெனைப் பற்றுகிறானோ, அதுதான் அவனது அந்தரங்கப் பண்பைக் காட்டுவதாக அமையும். சாதாரணமாக தினந்தோறும் உண்கிறோம்; உடுக்கிறோம்; ஏதோ நாளும் செய்கின்ற வேலைகலைப் பணிப் பிரகாரம் செய்கின்றோம். ஓரளவு பழக்கப்பட்ட நிலையில் அவ்வேலைகளும் நடந்தேறி விடுகின்றன. அதிலிருந்து ஒரு மனிதனுடைய சிறந்த குணத்தை அறிந்து கொள்ள முடியாது.

எதிர்பாராது, திடீரென்று ஏதோவொரு நிகழ்ச்சி ஏற்பட்டுவிட்டால் அதற்குத் தக, எப்படி மனிதன் நின்று இயைந்து கொடுக்கின்றானோ, அதிலிருந்துநான் அவனுடைய உண்மையான மனிதப் பண்பை அறிந்துகொள்ள முடியும். இந்த மனிதப் பண்பை பகவான் இராம கிருஷ்ண பரமஹம்சர் வெகுவாகப் பாராட்டிக் கூறுகிறார். “ஒரு கிளிப்பிள்ளைக்கு, அதனுடைய சொந்தக்காரன், ‘இராமா, சிவா’ என்று சொல்லிக்கொடுக்கிறான். அவனைக் கண்டவுடன் அதுவும் 'இராமா, சிவா' என்று கூறுகிறது. எதிர்பாராது ஒரு பூனை அதைப் பிடிக்க வரும்போது, இயல்பான அதனது பண்பைக் காட்டி 'கீச், மூச்' என்று சத்தமிடுகிறது. அது கிளியின் பண்பாடு. ஆனால் மனிதன் அப்படிப்பட்டவன் அல்லன்.”

செயற்கரிய செய்து, வாழ்வாங்கு வாழ்ந்து, வானுயரும் தெய்வத்துக்குச் சமமாக உயர்கின்ற நிலையில் மகா-மனிதனாக, மகாத்மாவாக மாறி, இடுக்கண் வருங்கால் நகவும், துன்பத்தில் 'ஐயோ' என அலறாமல் 'முருகா, இராமா, ஆண்டவா' என அழைக்கவும்

படிக்கின்றான். எதிர்பாராமல் நடைபெறுகின்ற நிகழ்ச்சியிலிருந்து அவன் தன்னுடைய பண்பை வெளிப்படுத்துகின்றான். மனித உள்ளம் ஒரு செழுமையான வயல். அதிலே உணர்ச்சி மயமான ஒருமை நினைவு முளைத்துத், தழைத்துக் கிளைக்க வேண்டும். தாழ்ந்ததை தாழ்ந்தது என்று சுட்டிக் காட்டி திட்டினால் மட்டும் போதாது; அதற்குப் பதிலாக, நெஞ்சில் நிறுத்தி நினைந்து உவக்கத்தக்க உயர்ந்த ஒன்றையும் காட்டவேண்டும். அப்போதுதான் மனிதனது வியக்கத்தக்க பண்பு வெளியாகும். மனவொடுக்கமும், ஆணவ நீக்கமும் பெற்ற அருளாளனாக மனிதன் மாறும்போது, எவ்வுயிரையும் தம்முயிர்போல எண்ணும் போக்கு மலர்கிறது. மனிதப் பண்பு தலைதூக்குகிறது. பட்டப் பகலில் ஒரு கைவிளக்கு பிடித்து ஒரு மனிதனை தேடும் முயற்சியில் ஈடுபடாது, அல்லு பகலும் நல்ல மனிதனைக் காணமுடியும்.

மகத்தான மனிதப் பண்பு மனிதனது உள்ளத்தில் தலைஎடுத்தவுடன், நான், நீ என்ற வேறுபாடு மறைந்து, ‘உயிர்களின்மீதில் அருள் உடைமையே தெய்வ வழிபாடு’ என்ற கருத்துத் தோன்றுகிறது. 'நாம்' என்ற சிந்தனை மனிதனுக்கு ஏற்படுகிறது. குறுகிய எண்ணம் வளர்க்கும், சமயப் பூசல், சாதிப் பூசல், கட்சிப் பூசல் முதலியன ஒருவரது துன்பத்திற்குரிய படிகளாகும். இவை இல்லாத நிலை ஏற்படும்போதுதான், மனிதன் மனிதனாக முடியுமென்பது வள்ளலார் கருத்து.

சாதி, மதம் முதலிய வேற்றுமைகளால், உலகம் இடர்ப்படுவதைக் கண்ட வள்ளலார், அவற்றைக் களைந்து, சுத்த சன்மார்க்கத்தை நிலைநாட்ட எல்லாம் வல்ல இறைவனைக் கொழு கொம்பாகப் பற்றினார். இறைவனின் துணைகொண்டு, அவனருளாலே, அவன் தாள் வணங்கி வள்ளலார் மக்கள் பண்பை வளர்க்கும் தொண்டில் இறங்கினார். இறைவனின் துணையின்றி, 'என்னால் நடக்கும்' என்ற தன்முனைப்பில் மக்கட் பண்பை வளர்க்கும் எத்தொண்டில் மனிதன் ஈடுபட்டாலும், அவனுக்குத் தோல்விதான் காத்து நிற்கும். பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாது, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற உயர்நிலையில் வாழ்வமைக்க வள்ளலார் வழிவகுக்கிறார்.

'சாதி' என்று நாம் தமிழில் வழங்கும் சொல், 'ஜாதி' என்ற வடமொழிச் சொல்லின் பிறப்பாகும். 'ஜம்' என்ற பகுதியிலிருந்து பிறந்த இச்சொல், மக்கள் பிரிவை ஜாதி என்ற பெயரால் குறிக்கவில்லை. ஜாதி என்றால் மக்கள் எல்லோருமே ஒரு

சாதிதான். 'சாதி இரண்டொழிய வேறில்லை - இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்' – இதுதானே ஔவைப் பெருமாட்டியின் திருவாக்கு.

பறவைகள், விலங்குகள், நீர்வாழ்வன, ஊர்வன போன்றனவற்றையே சாதிப் பிரிவுகளாகப் பழந்தமிழ் நூற்களில் காண்கிறோம். நாளடைவில் இம்முறை மாறிவிட்டது. தொழிற் காரணமாக ஏற்பட்ட நான்கு பிரிவுகள், நான்கு நாற்பதாகி, நாற்பது நானூறாகி, நானூறு நாலாயிரமாக மாறிவிட்ட கொடுமையைக் காண்கிறோம். சாதி பேதத்திற்கு நண்பனல்லேன் என்ற குரலை, எக்காலத்தையும்விட, அழுத்தமுடனும், பொருட் செறிவுடனும் கேட்கும் குரல் இன்று மதிப்பிழந்து நிற்கும் நிலையை மறந்து விடக்கூடாது.

பிறப்பால் உயர்வு - தாழ்வு கருதுவதைப் போன்ற கொடுமை வேரெதுவும் இருக்க முடியாது. எல்லாக் கொடுமைகளுக்கும் சிகரமாக உள்ளது இதுதான். இந்த எண்ணம் காரணமாக மக்களுள் ஒற்றுமை குறைந்தது; விரோதம் பெருகியது. ஒன்றுபட்டு வாழ வேண்டிய மனித சமுதாயம் துண்டுபட்டுக் கிடக்கின்றது. சாதி என்ற நினைப்பின் காரணமாக மக்கள் தங்கள் பிணைப்பையே மறந்து விடுகின்றனர். பிறப்பால் உயர்வு - தாழ்வு கருதும் மக்களிடம் சமரசத்தின் சாயல் கூடப் படாது. இந்தப் பெருந்தீங்கினை உணர்ந்த பெருமக்கள், தாம் தோன்றியதன் உட்பொருளை உணர்ந்து, சாதிக் குறைபாட்டைக் களைய அவ்வப்போது சொல்லாலும், செயலாலும் கருத்துக்களை வழங்கி வந்தனர். அம்முயற்சிகளெல்லாம் பயனற்றதாகவே போயின. நமது நாட்டில் பன்நெடுங் காலமாகவே ஒரு தவறான கொள்கை இருந்து வருகிறது. நாம் மனமறிந்து இதனைக் கைக் கொள்ளுகிறோமா, இல்லையா என்பதை ஆராய வேண்டும். பெருமான்களைப் பற்றிச் சிந்தித்தும், பேசியும் வருவதைப் பழக்கமாகவும், வழக்கமாகவும் வைத்துக் கொள்ளும் அதே சமயம், அவர்களின் கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வரும் வாய்ப்பு ஏற்படும்போது, அவர் கோட்பாடுகளை ஆழமாகக் குழி தோண்டிப் புதைத்து விடுவது - உருவத்திற்கு வழிபாடு; உள்ளத்திற்குப் பெருங்கொலை.

*“சாத்திரம்பல பேசுங் சழக்கர்காள், கோத்திரமுங்*
*குலமுங் கொண் டென்செய்வீர்?”*

என்றும்,

*“சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்*
*ஆதமிலி நாயேன்”*

என்றும் அருளிய பெரியோரை வழிபடுவோர் சாதியைப் பாராட்டி மனிதப் பண்பை அழிக்கிறார்களா, இல்லையா என்பதைக் காண வேண்டும். சாதியைக் கடவுளாக வைத்து வணங்கும் மக்கள் பெருங்கூட்டம் இன்னும் நம் நாட்டிலிருக்கிற தென்பதை உணர வேண்டும். இதை உணர்ந்த வள்ளலார், ஊனுடம்பு ஆலயத்தினுள்ளே நுழைந்த சாதிப்பேய், நாடோறும் பெருகி நிற்கும் கற்கோயில்களும், சாதிக் கோயில்களுமாக மாறியமை கண்டு, மனத்தால் அழுது சமரசக் கோயிலை அமைத்தார்.

*"எச்சபைப் பொதுவென இயம்பினர் அறிஞர்கள்*
*அச்சபை இடங்கொளும் அருட் பெருஞ்சோதி"*

என்பதுதான் அச்சமரசக் கோயிலின் கொள்கை.

*"எச்சமயத் தவரும்வந் திறைஞ்சா நிற்பர்"*

என்று தாயுமானப் பெரியார் தில்லையின் பொதுத்தன்மையைக் கூறியதையும் நோக்க வேண்டும்.

சமரசம் என்பது நாடு, மொழி, சமயவெறி, சாதிவெறி முதலியவற்றால் கட்டுப்படாது, எல்லாவற்றையும் கடந்த நிலையில் நிற்பது. உலகத்தோடியைந்து வாழ எண்ணி, எப்பொருள் யார் யார் வாய்க் கேட்கினும் மெய்ப்பொருள் காண்போரே சமரச ஞானம் படைத்தோராவார்.

இந்த சமரச மனப்பான்மையே மனிதப் பண்பை வளர்த்துக் கடவுள் காட்சியை வழங்கும். இதற்கென வள்ளலார் வழங்கிய சமரசப் பாக்கள் ஆயிரமாயிரமாக உள்ளன.

*"சாதியும் மதமுஞ் சமயமுங் காணா*
*ஆதி அநாதியாம் அருட் பெருஞ் சோதி*
*சாதியும் மதமுஞ் சமயமும் பொய்யென*
*ஆதியில் உணர்த்திய அருட் பெருஞ் சோதி*
*சமயமுங் குலமுதல் சார்பெலாம் விடுத்த*
*அமயந் தோன்றிய அருட் பெருஞ் சோதி*
*சமரச சத்தியச் சபையில் நடம்புரி*
*சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே."*

இதைவிட இன்னும் தெளிவாகவும், ஆழமாகவும் சொல்ல விரும்பிய வள்ளலார், தன்னையே முன்னிலையில் வைத்துப் பேசுகிறார். மனிதப் பண்பை வளர்த்துக்

கொளுவதற்கான சீர்திருத்தத்தை ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தே தொடங்க வேண்டுமென்பதுதான் வள்ளலாரின் விருப்பம்.

*“சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்ந்தேன்*
*சாத்திரக் குப்பையும் தணந்தேன்*
*ஓதிய அனைத்தும் நீயறிந்தது நான்*
*உரைப்பதென் னடிக்கடி யுனக்கே”*

என வள்ளலார் தன்னிடமிருந்த குறைபாட்டைக் களைந்து விட்டதாகக் கூறினார். அவரிடமா குறையிருந்தது? குறைவில்லா நிறைவுடைய பெருமான் உலகோரிடம் நற்பண்பு வளர்க்கப்படவேண்டு மென்ற விருப்பத்தைத் தன்மூலமாகக் கூறினார். தொடர்ந்து,

*“குலத்திலே சமயக் குழியிலே நரகக்*
*குழியிலே குமைந்து வீண் பொழுது*
*நிலத்திலே போக்கி மயங்கி ஏமாந்து*
*நிற்கின்றார் நிற்க, நான் உவந்து*
*வலத்திலே நினது வசத்திலே நின்றேன்*
*மகிழ்ந்து நீ என் உளம் எனும் அம்*
*பலத்திலே நின்றாய் எனக்கிது போதும்*
*பண்ணிய தவம்பலித் ததுவே.”*

என்று பாடினார்.

தன்னையறிந்து, தான் திருந்தியது போல, 'மாறிலாய் என் வலத்தில் நிற்க' எனக் கண்ணுதலான் கண்ணப்பரை நிறுத்திக் கொண்டதைப்போல, தான் இறைவன் வலத்தே நின்றது போல, தான் செய்த தவம் பலித்தது போல உலகத்தவர் தவமும் பலிக்க வேண்டு மென்றே எண்ணுகிறார்.

*"மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது*
*வருணாச் சிரமமெனு மயக்கமுஞ் சாய்ந்தது*
*கொதித்தலோ காசாரக் கொதிப்பெல்லா மொழிந்தது*
*கொலையுங் களவுமற்றைப் புலையு மழிந்தது."*

சாதி, சமயம், ஆசாரம் இவையெல்லாம் உடன் உருவாக்கி, உடன் அழிக்கும் மண்வீடு போல, பிள்ளை விளையாட்டு என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்.

*"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா*

*நவின்றகலைச் சரிதம்எலாம் பிள்ளைவிளையாட்டே*
*மேல் வருணந் தோல் வருணங் கண்டறிவார் இலைநீ*
*விழித்து இதுபா ரென்றெனக்கு விளம்பிய சற்குருவே."*

மனிதனுக்குள்ளே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலையோ, தோலாலோ, இரத்தத்தாலோ வேறுபாடோ கிடையாது. உயிர்கள்மீது அருள் உடைமையே தெய்வ வழிபாடாகும். இறைவன் ஒருவன்தான். அந்த ஒருவன் ஒருமைப்பாட்டுடைய மக்களைப் படைத்தானே அன்றி வேறுபடுவதற்காக அல்ல. இதனை வள்ளலார் கூறுகிறார்;

*"எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் இலங்கு சிவம் ஒன்றே*
*என்னாணை என்மகனே இரண்டில்லை யாங்கே."*

என்று. இறைவன் ஒருவன்தான். அந்தப் பரம்பொருளுக்கு பலபேர். அது நம் மனத்தை ஈர்க்கும் பெயர்களாக மாறுகிறது. சிந்தையை இனிக்க வைக்கும் நாமங்களாக ஒலிக்கின்றன. அம்பலத்தே ஆடுகின்ற ஆடலரசன் தன் ஆட்டத்திற்கும், காட்டத்திற்கும் தகுந்தவாறு பெயர் மாற்றம் செய்து கொள்ளுகிறான்.

*"பெருகிய பேரருள் உரையார் அம்பலத்தே நடிக்கும்*
*பெருந்தகை என்கணவர் திருப்பேர் புகல் என்கின்றாய்*
*அருகர் புத்தர் ஆதி என்பேன் அயன் என்பேன்*
*நாராயணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்*
*பருகுசதா சிவம் என்பேன் சக்திசிவம் என்பேன்*
*பரமன் என்பேன் பிரம்மம் என்பேன் பரம்பிரம்மம் என்பேன்*
*துருவுசித்த பிரம்மம் என்பேன் துரியநிறைவு என்பேன்*
*சுத்தசிவம் என்பேன் இவை சித்து விளையாட்டே"*

என்ற உண்மையை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். இதற்கு மேலும் சென்று, தன் அகவிருளைப் போக்கி ஒளி நிறைத்த அருட் பெருஞ்சோதி, உலகோரின் உள்ளத்தை நிறைக்க வேண்டுமென்கிறார்.

*"எவ்வுலகில் எவ்வெவர்க்கும் அரும்பெருஞ் சோதியரே*
*இறைவரென்ப தறியாதே இம்மதவா திகடாங்*
*கவ்வை பெறு குருடர்கரி கண்ட கதைபோலே*
*கதைக்கின்றார் சாகாத கல்விநிலை அறியார்*

*நவ்விவிழி யாயிவரோ சிலபுகன்றா ரென்றாய்*
*ஞானநடங் கண்டேன் மெய்த் தேனமுத முண்டேன்*
*செவ்வை பெறு சமரசசன் மார்க்க சங்கந்தனிலே*
*சேர்ந்தேனத் தீ மொழியுந் தேமொழி யாயினவே"*

என்று மீண்டும் தன் அனுபவத்தைக் கூறுகிறார். பாடல்களிலே கூறிய கருத்துக்கள், எங்கே உலகாரைப் பற்றாமல் விடுமோ என எண்ணி உரைநடையிலும் இதே கருத்தைக் கூறுகிறார்:

*"எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி, எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின், ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள், எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவரே தேவரீர் திருப்பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!"*

என்று கூறினார்.

தனக்கு ஆராவமுதளித்த ஆண்டவன், தன்னுயிரின் நாயகமாய் இதயத்தே அமர்ந்து ஆட்சி செய்கின்ற பெருமான் அனைவரின், இதயத்திற்கும் அருளாரமுதந் தரவேண்டுமென்று வேண்டுகிறார்.

*"ஓதுக நீ யென்றபடி யோதுகின்றேன் மனனே*
*உள்ளபடி சத்தியமீ துணர்ந்திடுக"*

என்று கூறுவதுடன்,

*"என்சாமி எனதுதுரை என்உயிர் நாயகனார்*
*இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில் அமர்கின்றார்*
*பின்சாரும் இரண்டரை நாழிகைக்கு உள்ளே எனது*
*பேர் உடம்பில் கலந்து உளத்தே பிரியாமல் இருப்பார்*
*தன்சாதி உடைய பெருந் தவத்தாலே நான்தான்*

*சாற்றுகின்றேன் அறிந்து இதுதான் சத்தியம் சத்தியமே*
*மின்சாரும் இடை மடவாய் என்மொழி நின்தனக்கே*
*வெளியாகும் இரண்டரை நாழிகை கடந்த போதே."*

என்ற உண்மையைக் கூறி, தன் உள்ளத்தே ஜோதி வடிவில் நின்று,

*"தன்னையும் தன்னருட் சக்தியின் வடிவையும்*
*என்னையு மொன்றென் இயற்றிய தந்தையே"*

என விளித்து,

*"அருட்பெருஞ்சோதி என் ஆர் உயிரில் கலந்து ஆடுகின்ற*
*அருட்பெருஞ்சோதி என் அன்பில் கலந்து அறிவாய் விளங்கும்*
*அருட்பெருஞ்சோதித் தெள்ஆரமுது ஆகி உள் அண்ணிக்கின்ற*
*அருட்பெருஞ்சோதி நின் ஆசை ஒன்றே என்னுள் ஆர்கின்றதே"*

என்பதை உயிரால் இணைத்துக் கொண்டதன் விளைவாகப் பெற்ற மனிதப் பண்பு, பிறப்பொக்கும் எல்லா வுயிர்களிடமும் வரவேண்டுமென்ற வேட்கையை வெளிப்படுத்துகிறது.

# 5. உயிர்க் கருணை

மனிதப் பண்பை உணராத காலத்தே மனிதன் காற்றைக் கண்டு கலங்கினான். நீரோட்டத்தைக் கண்டு நிலைகுலைந்தான். நெருப்பைப் பார்த்து நெஞ்சு நடுங்கினான். தக தகவென ஒளிப் பிழம்பாகத் தோற்றந்தரும் சூரியனைப் பற்றிச் சிந்தித்தான். ஒன்றும் புரியவில்லை. காலையில் அதன் இளங்கதிர்கள் மேனியில் பட்டவுடன் சுறுசுறுப்பு அடைந்தான். புத்துணர்ச்சி பெற்றான். நடுப்பகலில் அதன் கொடும் வெய்யில் கண்டு வருந்தினான். மஞ்சள் வெய்யிலை மாலையில் கண்டு மனமகிழ்வெய்தினான்.

தலையில் உள்ள மூளை சிதறி விடுமோ என எண்ணுவதுபோலக் கதிரவன் காய்கிறான். கண்களால் கூட அவ்வெளிச்சத்தைப் பார்க்க முடியவில்லை. தலையை அதில் காட்டினால் வெடித்து விடும் போல இருக்கிறது. பூமியிலே கால்களைப் பதிக்க முடியவில்லை. பதித்தால் வெந்து தணிந்து சாம்பராகிவிடும் போலவிருக்கிறது. மாலைக்குள் அந்த நிலையில் மகத்தான மாற்றம். வானத்திலே பட்டுக் கருநீலப் போர்வை விரிக்கப்படுகிறது. இங்கும், அங்குமாக ஓடி ஆடும் வண்ண விளக்குகள் ஆயிரமாயிரம் ஏற்றப்படுகின்றன. மின்னல்கள் ஓடி, ஆடி விளையாடுகின்றன. காது, செவிடுபடும்படியான இடி முழக்கம். சோ வென்ற பெருமழை. வாடிய பயிர் வானத்தைப் பார்த்துச் சிரிக்கின்றது. கொதித்த பூமி குளிர்வடைகின்றது. வெய்யிலில் வாடிய மக்கள் உள்ளத்திலே உற்சாகம்; உடலிலே புதுத்தெம்பு.

இந்நிகழ்ச்சிகளைக் கண்டு அக்காலத்து மக்கள் வியந்தனர். இவற்றிற்கான காரண, காரியங்களை ஆராய முயன்றனர். அவர்கள் ஆராய்ச்சியிலே தெளிவு ஏதும் பிறக்கவில்லை. உடனே ஒரு முடிவுக்கு வந்தனர். 'தம்மை மீறிய சக்தி யொன்று எங்கோ இருக்கிறது. அதுதான், இக்காரியங்களை யெல்லாம் செய்கிறது. அதற்கு நாம் கட்டுப்பட்டே வாழ வேண்டும். அப்படிக் கட்டுப்பட்டு வணங்காமல் போனால், அதனால் தமக்கு தீமையே ஏற்படும்' என எண்ணினர்.

இந்த எண்ணம் காரணமாக, காற்று ஒரு கடவுள்; அக்கினி ஓர் ஆண்டவன்; தண்ணீர் ஒரு தெய்வம்; சூரியன், சந்திரன் கோளங்கள் அனைத்தும் தெய்வங்களாயின. அவர்கள் தாங்கள் கண்ட அதிசயங்கள் ஒவ்வொன்றையும் தெய்வமாக்கினர்.

இம்முறையிலேயே, ஆதிகாலத்து மக்கள் வணங்கிய தெய்வங்கள் பலவாயின. எந்த நாட்டிலும் இந்தப் பல தெய்வக் கொள்கைகளே இருந்தன. இயற்கைப் பொருட்களை யெல்லாம் தெய்வங்கள் என்று நம்பிய மக்கள், இயற்கை நிகழ்ச்சிகளையெல்லாம் தெய்வச் செயல்கள் என எண்ணி வியந்த மக்கள், அவற்றை ஆராதித்தனர்; வணங்கினர். அவற்றிற்கு தாங்கள் உண்ணும் உணவையும், குடிக்கும் பானங்களையும் வைத்துப் படைத்தனர். இவ்வாறுதான் தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. எந்தாட்டு வரலாற்றையும், சரித்திரத்தையும் படிப்போர், கேட்போர் இவ்வுண்மையை அறிவார்கள்.

மக்கள் அறிவிலே தெளிவு பெற்றபின், தெய்வம் ஒன்று என உணர்ந்தனர். தெய்வம் என்பது சத்தியம், உண்மை, அறிவு, அன்பு, ஒளி என்பவைகளே. இத் தெய்வ உணர்ச்சி மனித சமூகத்தில் வளர வேண்டும். எந்த விஞ்ஞானமும் இந்தத் தெய்வத்தை இல்லை என்று சொல்ல முடியாது. தெய்வத்தின் பெயரைச் சொல்லி மனித சமூகத்தை ஏமாற்றுகின்றவர்களுக்கே விஞ்ஞானம் எமனாக நிற்கின்றது.

பல தெய்வக் கொள்கையை அருட்பிரகாச வள்ளலார் ஒப்புக்கொள்ளவில்லை. அவற்றை சிறு தெய்வங்கள் என்று குறிப்பிடுகின்றார். இச்சிறு தெய்வங்களுக்குப் பலியிடும் அநாகரிகமான வழக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறார். பலியிடுவதைக் கண்டு உள்ளம் வருந்துகிறார்.

வள்ளலார் தம்மை மறந்தவர்; வையம் வாழும் வழிவகைகளை உணர்ந்து பாடியவர். அவர் உள்ளத்தில் உயிர்களிடத்தே வேறுபாடு தோன்றவில்லை. எவ்வுயிரும் ஓருயிராய்க் காட்சி அளித்தது. மனிதனுக்கும், விலங்குக்கும், பறவைக்கும், புல்லுக்கும் அவர் வேறுபாடு காணவில்லை. அவரது உயிர்க் கருணை மனித இனத்தோடு நிற்கவில்லை. அனைத்தையும் தாண்டி 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற உண்மையான அடிப்படையில் எல்லாவுயிர்களையும் பற்றி நின்றது அவரது சமரசம். எனவே, எவ்வுயிர் வாடினும், தாம் வாடினார். எல்லா உயிர்களும் வாழ வழி வகுத்தார். பாடல்கள் முழுவதிலும் இவ்வருள் உணர்வைப் பரப்பினார். தமிழ் நாட்டின் பல பகுதிகளையும், மருதூர் தொடங்கி, மேட்டுக்குப்பம் வரை, கணக்கற்ற உயிர்கள் வாடும் வாட்டம் அவர் உள்ளத்தை உருக்கிற்று. மனம் உருக, கண்கள் நீரைச் சொரிய வாய் பாடிற்று.

*"காணுறு பசுக்கள் கன்றுகள் ஆதி கதறியபோது*
*எலாம் பயந்தேன்*

*ஏணுறு மாடு முதல் பல விருகம் இளைத்தவை கண்டு*
*உளம் இளைத்தேன்*
*கோணுறு கோழி முதல் பல பறவை கூவுதல் கேட்டு*
*உளம் குலைந்தேன்*
*வீணுறு கொடியர் கையிலே வாளை விதிர்த்தல் கண்டு*
*என் என வெருண்டேன்."*

*"வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம் வாடினேன்*
*பசியினால் இளைத்தே*
*வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றரைக்*
*கண்டு உளம் பதைத்தேன்*
*நீடிய பிணியால் வருந்து கின்றோர் என் நேர்உறக்*
*கண்டு உளம் துடித்தேன்*
*ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர்*
*தமைக் கண்டே இளைத்தேன்."*

என்பன அருட்பாவின் இரு பாக்கள்.

உயிர்களுக்கு வரும் இடையூற்றினைப் போக்கி, அவற்றை நல்வழியில் அழைத்துச் செல்லுதற்குத் தக அமைந்ததோர் அமைப்பினைக் காண வேண்டும் என வள்ளல் பெருமானின் உள்ளம் இடையறாது எண்ணி இறைவனை வேண்டிற்று.

நாம் வாழுகின்ற வாழ்க்கை இவ்வுலகத்தோடு முடிவடைந்து விடுவதில்லை. உயிர்களின் மீது நாம் வைக்கின்ற கருணையாகிய 'சீவகாருண்யம்' தான் முக்திக்குத் திறவுகோல்.

இவ்வுலகத்தே வாழ்வாங்கு வாழ்ந்து, வீடுபேற்றை விரும்புகின்றவர்கள் அனைவரும் மன்னுயிரைத் தன்னுயிர் போல் பார்க்க வேண்டும். எல்லா உயிர்களும் ஈசன் கோயில்; ஆகவே எவ்வுயிரையும் கொல்லுதல் கூடாது என்பது வள்ளலார் கருத்து. ஆனை அடியில் அடங்காத அடி கிடையாது. அதுபோலக் 'கொல்லாமை' என்கிற அறத்தில் அடங்காத அறமும் கிடையாது.

*"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று"*

என்பது வள்ளுவம்.

ஒவ்வொருவரும், பிற உயிர்களைக் கொன்று அருந்தும் கொடிய பழக்கத்தை தவிர்த்து விட வேண்டும். அவ்வாறு கொல்லா விரதத்தை மேற்கொள்வாராயின் அவர்கள் வேறு தவமேதும் புரியத் தேவையில்லை. தானம் தர வேண்டாம். தருமம் செய்ய வேண்டாம். ஆண்டவன் அருள் தானே வரும். அதனால்தான்,

*“கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க*
*எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே”*

என்கின்றார் தாயுமானவர்.

புல் தின்கின்ற ஆடு, வைக்கோல் உண்கின்ற மாடு, தழைகளைத் தின்கின்ற யானை முதலியவைகளுக்கும் வலிமையில்லையா? சைவ ஆகாரம் அருந்துகின்ற யானைக்குள்ள வலிமையை அளக்க முடியுமா?

இந்த உடம்பை வளர்ப்பதற்கு இன்னொரு உடம்பை வெட்டி உண்பது கொடுமையிலும் கொடுமையல்லவா?

*“தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்”*

என்பது வள்ளுவம். இதனை ஒற்றி ஓர்ந்த வள்ளலார்,

*“ஆருயிர் கொல்லார் மேலோர் அறிவினை யறிந்த நல்லோர்*
*தீ மனம் அடக்க வல்லார் இவர்களே தேவராவார்*
*காமராய்க் கற்பழித்தோர் களவுசெய் துடல் வளர்த்தோர்*
*மாமிசம் திண்போ ரெல்லாம் மானிடப் புலையர் தாமே”*

என்பதைச் சாத்திரமாகவே கூறுகிறார்.

பிற உயிர்களை கொன்று தின்போர், கங்கை முதலிய நதிகளில் மூழ்கினாலும், கடவுளைப் பூசித்தாலும், மேகம்போல நிரம்ப அள்ளிக் கொடுத்தாலும், பலப்பல ஞான சாத்திரங்களைப் படித்தாலும் நரகம் சேர்ந்து நலிவுருவரென்பதை வள்ளலார் திண்ணமாகக் கூறுகிறார்.

*“கங்கையில் படிந்திட்டாலும் கடவுளைப் பூசித்தாலும்*
*மங்குல்போல் கோடிதானம் வள்ளலாய் வழங்கிட்டாலும்*
*சங்கையில்லாத ஞானசாத்திரம் உணர்ந் திட்டாலும்*

*பொங்குறு புலால் புசிப்போன் போய்நர கடைவான் அன்றே"*

இதை விட அழுத்தமாக வேறு எப்படித்தான் கூறவியலும்?

*"நோன் பென்பது கொன்று தின்னாமை"*

என்று தானே அவ்வைப் பெருமாட்டியும் கூறினார்!

*"கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள்களவு*
*கல்லாமல் கைதவரோ டிணங்காமல் கனவிலும் பொய்*
*சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர் மாயையிலே*
*செல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே"*

என்றார் பட்டனத்தடிகள்.

*"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிரும் தொழும்"*

என்ற வள்ளுவர் வாக்கையும் மிஞ்சி விடுவதுபோல வள்ளல் பெருமானின் உயிர்க்கருணை செல்லுகின்றது. உயிர்க் கொலையைக் கண்ட இடங்களிலெல்லாம், தம் உள்ளம் எவ்வாறெல்லாம் இரக்கங் கொண்டு கதறியது என்பதை வள்ளலார் கற்பவர் மனமும் கன்றும்படியாகக் கூறுகிறார்.

*"நலிதரு சிறிய தெய்வம் என்றையோ நாட்டிலே*
*பல பெயர் நாட்டிப்*
*பலி தர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக் கடா*
*முதலிய உயிரைப்*
*பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே*
*புந்திநொந்து உள நடுக்குற்றேன்*
*கலியுறு சிறிய தெய்வ வெங் கோயில் கண்ட*
*காலத்திலும் பயந்தேன்."*

தான் பயந்த பயத்தின் அடிப்படையை மற்றவர்களும் உணர்ந்து, நாணி அஞ்சவேண்டு மென்கிறார். அஞ்சுவது அஞ்சுவார் அறிவார் தொழிலல்லவா? மேலும் தொடர்கிறார்,

*"துண் எனக் கொடியோர் பிற உயிர் கொல்லத்*
*தொடங்கிய போதெலாம் பயந்தேன்*
*கண்ணினால் ஐயோ பிற உயிர் பதைக்கக்*
*கண்ட காலத்திலும் பதைத்தேன்*
*மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி*
*வகைகளும் கண்ட போதெல்லாம்*

*எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம்*
*எந்தை நின் திருவுளம் அறியும்."*

என இறைவனிடம் முறையிடுகிறார். உயிர்க்குலத்தின் துன்பத்தைத் துடைக்க வேண்டுவதற்கான வழியைத் தனக்குக் காட்டுமாறு இறைவனை வேண்டுகிறார். "உருவ என் உயிர்தான்; உயிர் இரக்கந்தான்; ஒன்றதே இரண்டிலை; இரக்கம் ஒருவில் என் உயிரும் ஒருவும்", "மலைவில் என் அறிவும் நானும் இவ்வுலக வழக்கிலே உயிர் இரக்கத்தால் இலகுகின்றன" என வள்ளலாரே கூறியுள்ளபடி, இரக்கமே உயிராக, உள்ளமாக, உடலாக வைத்தே ஆராய்ந்துள்ளார். திருவருட்பா ஆறாந் திருமுறையிலுள்ள, 'பிள்ளைச் சிறு விண்ணப்பம்', 'பிள்ளைப் பெரு விண்ணப்பம்' ஆகிய பதிகங்களில் வள்ளலாரின் இரக்க உள்ளத்தைப் பார்க்கக் காணுகையில், எப்பேர்ப்பட்ட கரையாத கல் நெஞ்சுகூடக் கரைந்துருகும். மனிதர்களிடம் பல வழிகளில் சொல்லியும் கேளாக் காதினராக மக்களிருப்பதைக் கண்டு மனம் வருந்திய வள்ளலார், தமக்கு மேலும் ஆற்றல் வழங்குமாறு இறைவனை நோக்கி வேண்டுகிறார்.

*"மண் உலகு அதிலே உயிர்கள் தாம் வருந்தும்*
*வருத்தத்தை ஒரு சிறிது எனினும்*
*கண் உறப் பார்த்தும் செவிஉறக் கேட்டும்*
*கணமும் நான் சகித்திடமாட்டேன்*
*எண்ணுறும் எனக்கே நின் அருள் வலத்தால்*
*இசைத்த போது இசைத்த போது எல்லாம்*
*நண்ணும் அவ் வருத்தம் தவிர்க்கும் நல் வரம்தான்*
*நல்குதல் எனக்கு இச்சை எந்தாய்."*

என்று வள்ளலார் கேட்கும் வரம் எல்லாவற்றிலும் ஈசனைக் காண்பதாக அமைந்துள்ளது. பார்த்தவிடமெங்கும் பரமனைக் காணுவோர் உள்ளத்தில், உயிர்களிடத்தில் இரக்கம் தோன்ற வேண்டுமென்பதையே வலியுறுத்துகிறார்; வேண்டுகிறார்.

இதனை ஞானிகள் புரிந்துகொண்டு, மனிதப் பண்பை வளர்ப்பதற்குரிய உயிர்க்கருணை சிறக்க வேண்டும். உண்மையை மறைக்காமல் திண்ணமாகக் கூறுகிறார். கொண்ட கோலத்திற்கும் கூசாமல் கண்டபடி நடக்கக்கூடியவரை யெல்லாம் ஞானிகளென்று கூற முடியாது என்கிறார் வள்ளலார்.

*"மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்தில்*

*கண் விழித்து வயங்கும் அப்பெண்*
*உருவாணை உருவாக்கி இறந்தவரை*
*எழுப்புகின்ற உறுவ னேனும்*
*கருவாணை யுற இரங்காது உயிருடம்பைக்*
*கடிந்து உண்ணும் கருத்தனேல் எங்*
*குருவாணை எமது சிவக் கொழுந்தாணை*
*ஞானி எனக் கூற ஒணாதே.”*

இதைவிடக் கடுமையாக யாரே கூற முடியும்? உயிர்களுக்கு வரும் இடையூற்றினைப் போக்கி நல்வழியில் செலுத்திச் செல்லுதற்குத்தக அமைந்ததோர் அமைப்பினைக் காணவேண்டு மென்பது வள்ளலார் விருப்பம். சீவகாருண்யம் நிலைபெறுதல் வேண்டும். நிலைபெற்றால் உயிர்களுக்கிடையே இன்பம் நிலவும். அவலம், கவலை, கையாறு முதலியன தொலைந்து போகும். **“இந்தச் சீவகாருண்யத்தால் இகலோக வழக்கம் வழங்குகின்றது. சீவகாருண்யம் இலையாகில், இகலோக வழக்கம் எவ்வளவும் வழங்கப்படாதென்று அறிய வேண்டும்”** என்று சீவகாருண்ய வழக்கத்திலே எழுதுகின்ற வள்ளலார், சீவகாருண்ய ஒழுக்கம் இல்லையேல், இகலோக ஒழுக்கம் அழிந்து படும் என்பதற்குப் பின்வருமாறு காரணம் கூறுகிறார்.

*“சீவகாருண்யம் இல்லாதபோது அறிவும், அன்பும் தோன்றாது. அவை தோன்றாத போது கண்ணோட்டமும், ஒருமையும் உபகாரமும் விளங்கா. அவை விளங்காதபோது வலிய சீவர்களால், எளிய சீவர்கள் ஒழுக்கம், பொறுமை முதலானவை தடைபட்டழிந்துபோம். பின்பு வலிய சீவர்கள் ஒழுக்கங்களும், தாமச ஒழுக்கங்களாகி, ஒருவர் ஒழுக்கத்தால் மற்றொருவர் ஒழுக்கம் மதத்தினால் சோர்வடைந்து மாறுபட்டு அழிந்துபோம். சீவகாருண்ய ஒழுக்கம் சிறிதும் இல்லாத புலி, சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக வழக்கம் வழங்கவே இல்லை. அதுபோல் சீவகாருண்யம் இல்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக வழக்கம் வழங்கவே மாட்டாது என்று அறிய வேண்டும்."*

இகலோக வாழ்க்கை என்பது தனியே இவ்வுலகத்துடன் முடிவடைந்து விடுவதில்லை. பரலோக வாழ்க்கைக்கு அடிப்படையாய் அதனை நிறைவு படுத்துவதே இகலோக வாழ்க்கை. இந்த வாழ்க்கை நடத்துபவர் உள்ளத்திலெல்லாம் இறைவன் திருநடனம் புரிகின்ற இடமாக வள்ளலார் உணர்கிறார்.

*"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்உயிர்*
*போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்*
*யாவர் அவர் உளம் தான்*
*சுத்த சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம் என*
*நான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர்தம் அடிக் ஏவல் புரிந்திட என்*
*சிந்தை மிக விழைந்த தாலோ."*

கருணையின் உருவமாகத் திகழ்ந்த வள்ளலார், மக்கள் பொய் நெறி புகுந்து, மெய்நெறி அறியாது திகைத்து, நரகில் தம்மைச் செலுத்தித் தம் இக வாழ்வை பயனற்றதாக ஆக்கிக் கொள்ளும் செயல் அவரை உலுக்கி விட்டது. இது கருதி அவர் புலம்பினார். அருட்பெருஞ்சோதி ஆண்டவனிடம் முறையிட்டார். உருகிக் கரைந்தழுது சுத்த சன்மார்க்கம் எனும் பொது நெறியில் மக்களைச் செலுத்துக என்று ஆண்டவன் இட்ட ஆணை வழி நின்றார்.

*"பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடும் ஓர்*
*பவநெறி இதுவரை பரவியது இதனால்*
*செந்நெறி அறிந்திலர் இறந்து இறந்து உலகோர்*
*செறி இருள் அடைந்தனர் ஆதலின் இனி நீ*
*புன்னெறி தவிர்த்து ஒரு பொதுநெறி எனும் வான்*
*புத்தமுது அருள்கின்ற சுத்த சன்மார்க்கத்*
*தன்னெறி செலுத்துக என்ற என் அரசே!*
*தனி நடராஜ என் சற்குரு மணியே."*

சுத்த சன்மார்க்கம் எனும் புதுநெறி பரவுவதன் மூலமாகத்தான் உயிர்க்கருணையைப் புரிய வைக்க முடியும் என்று வள்ளலார் நம்பினார்.

இராமலிங்க வள்ளல் பெருமான் தாம் மண்ணுலகில் பிறந்ததமைக்கொரு காரணத்தை வேண்டுகோள் பதிகத்தில் கூறுகிறார். "உலகில் வாழ்வோர் தம் நெஞ்சில் தீய எண்ணங்களை வளர்த்துக்கொண்டு வாழ்கிறார்கள். அவ்வஞ்சகக் கருமையினை மறைப்பதற்குப் புறத்தே பற்களைக் காட்டி நகைக்கிறார்கள். இவர்கள் அனைவரும் உண்மை அறிந்து திருந்த வேண்டும். இல்லையெனில் நாம் திருத்த வேண்டும். திருத்தமாகிய நன்மையை அடைந்து, உயிரின் மேன்மையை உணர இவர்களனைவரும்

சன்மார்க்க சங்கத்தை அடைதல் வேண்டும். இவ்வளவும் செய்வதற்காகத்தான் இறைவன் என்னை இவ்வுலகிற்கு வருவித்தான்" என்கிறார்.

*"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும்*
*சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட அவரும்*
*இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்திடுதற்கு என்றே எனை இந்த*
*உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே."*

என்பது பாடல்.

மக்களை உய்விக்கும் சன்மார்க்கம் வளர்ந்தோங்கும்போது, இரக்க உணர்வும், உயிர்கள்மேல் கருணையும் தோன்றும். கொலையும், புலையும் இரக்க உணர்வையும் மென்மையையும் கொல்கிறது; நெஞ்சில் நுண்மையை அழித்துத் தடித்த தன்மையை வளர்க்கிறது.

*"கொலை புரிவார் தவிர மற்றை எல்லாரும் நினது*
*குலத்தாரே நீ எனது குலத்து முதல் மகனே*
*மலைவறவே சுத்த சிவ சமரச சன்மார்க்கம்*
*வளர வளர்ந்துஇருக்க என வாழ்த்திய என் குருவே"*

என்ற அருள் விளக்க மாலையைத் தொடர்ந்து,

*"உயிர்க் கொலையும் புலைப் பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்*
*உறவினத்தார் அல்லர் அவர் புற இனத்தார்"*

என்கிறார்.

'அன்பே சிவம்' என்றார் திருமூலர். அவர் வழி நடந்த வள்ளல் பெருமானும் 'கருணையே சிவம்' என வற்புறுத்தினார். அந்தக் கருணை வழி இவ்வுலகில் நின்று கருணைக் கடலாகிய இறைவனைச் சேர்ந்திருக்கக் கருணை நெஞ்சுடன், சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்து அருள் பெற்றுயர்தலையே, உயிர்க்கருணையாக அமைத்துக் காட்டினார் அருட்சோதி வள்ளலார்.

*"கருணையும் சிவமே பொருள் எனக் காணும்*
*காட்சியும் பெறுக மற்று எல்லாம்*
*மருள் நெறி என நீ எனக்கு அறிவித்த*
*வண்ணமே பெற்றிருக் கின்றேன்."*

# 6. மனமாற்றம்

உயிர்க் கருணையும், உள்ளப் பண்பும், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வும் கொண்ட வள்ளல் பெருமான், சமுதாயம் சீர்பெறுவதற்கு மனிதன் தன்னை தயாராக்கிக் கொள்வதற்கான வழிகள் சிலவற்றை கூறுகிறார். மனிதனை, மனிதனாக வாழ விடாமல் செய்கின்ற மயக்கம் சிலவற்றைப் போக்குவது அவசியம். அந்த மயக்கம் தெளிந்தால்தான் மார்க்கம் எல்லாவற்றையும் ஒன்றாக்கும் சன்மார்க்கம் பிறக்கும், வளரும், சாகா நிலை அளிக்கும். அருட்பெருஞ்சோதி தத்துவத்தை விளக்கும் என்று நம்பினார்.

மயக்கம் தருகின்ற மதுவைப் பற்றிக் கூறாத பண்டைய இலக்கியங்கள் ஏதுமில்லை யென்று கூறலாம். உலகின்பம் நுகர வழியாயுள்ள எல்லா மக்களும் மதுவருந்தி வந்தனர்.

களிப்பு என்னும் சொல் கள்ளிலிருந்து பிறந்தது. கள் இல்லாவிட்டால் களிப்பு என்ற சொல் பிறந்திருக்காது. களிப்பு என்னும் சொல் இலக்கியங்களை எல்லாம் ஆட்கொண்டிருப்பதைப் பார்த்தாலே, கள்ளரக்கன், தமிழர் சமுதாயத்தை அடக்கி ஆண்டான் என்பதைத் தெளியலாம்.

தமிழிலக்கியங்களில் வள்ளுவம்தான் முதன் முதலில் கள் உண்ணும் கொடுமை பற்றிப் பேசுகிறது. கள்குடியன் கள்கு காமல், நல்ல புத்தித் தெளிவோடு இருக்கும் சமயத்தில் அவனுக்கு குடித்திருப்பவனைக் காட்ட வேண்டும். அப்பொழுது அவன் மனதில் அவசியம் ஓர் எண்ணம் பிறக்கும். அது உண்மை எண்ணமாயின் அவன் குடியை நிறுத்தல் கூடும்.

*"கள்ளுண்ணாப் போதில் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு"*

என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவத்திற்குப் பிறகெழுந்த நூற்கள், இயக்கங்கள் பலவும் மது அருந்தும் பழக்கத்தை கண்டித்தன. மதுபான மிகுதியால் நாட்டின் சமூக, பொருளாதார வாழ்க்கை பாழ்பட்டது. சூதாட்டம், விபசாரம், பொய்யுரைத்தல் இவை அனைத்தும் மதுபானத்தின் விளைவால் ஏற்படுகின்றன. ஆதலால், அறிஞர்களும், சான்றோர்களும் குடியர்களைக் கண்டாலே வெறுக்கத் தொடங்கினர். அருவறுப்போடு

பார்த்தனர். இந்நிலையை நன்குணர்ந்த வள்ளலார் கள்ளுண்ணாமை பற்றியும் பேசினார். நூலின் முழுவதும் பரக்கப் பேசாமல், இங்கும், அங்குமாக இலைமறை காய்போல வள்ளலார் குறிப்பிடுகிறார். கள் உண்ணாமை பற்றிக் குறிப்பிடும் இடங்கள் பன்னிரண்டு. இவற்றில் கள்ளைப் பற்றி மட்டும் பேசும் இடங்கள் நான்கு. கள்ளையும், காமத்தையும் இணைத்துப் பேசுகின்ற இடங்கள் நான்கு. பாதகச் செயல்கள் இன்னின்ன என்று தொகுத்துக் கூறும் இடத்துக் கள்ளையும் சேர்த்து உணர்த்திய இடங்கள் மூன்று. மாயையைக் கள் என இணைத்துப் பேசிய இடம் ஒன்று.

*“கள் உண்ட பித்தனைப் போல்”*
*(விண்ணப்பக் கலிவெண்பா. 322)*

*“எனது மனம் அது, கள் உண்டு கோலினால்*
*மொத்துண்டு பித்துண்டு வன்குரங்கோ”*
*(தெய்வ மணிமாலை. 23)*

*“கள் உணும் கொடியேன்”*
*(ஆற்றாமை.8)*

*“மதிப்பாலை அருட்பாலை ஆனந்தப் பாலை*
*உண்ண மறந்தார் சில்லோர்*
*விதிப்பாலை அறியேம் தாய்ப் பாலை உண்டு*
*கிடந்து அழுது விளைவிற்கு ஏற்பக்*
*கொதிப்பாலை உணர்வழிக்கும் குடிப்பாலை*
*மடிப்பாலைக் குடிப்பார் அந்தோ*
*துதிப்பாலை அருள் தரு நம் தேவ சிகா மணித்*
*தேவைத் துதியார் அன்றே.”*
*(தனிப்பாடல்கள். 76)*

கள்ளைப் பற்றி மட்டிலுமே மேற்கூறிய நான்கு பாடல்களில் கூறிய வள்ளலார், கள்ளுடன் காமத்தையும் சேர்த்துப் பாடுகின்ற பாடல்கள் வருமாறு:

*“காமம் எனும் கள் அறியாது*

*உண்டு கலங்கு கின்றேன்"*

*(விண்ணப்பக் கலிவெண்பா. 37)*

*"காமாந்த காரம் எனும் கள் உண்டு*
*கண்மூடி ஏமாந்தேன்"*

*(எழுத்தறியும் பெருமான் மாலை. 14)*

*"கள் உண்ட நாய்போல் கடுங்காம வெள்ளம் உண்டு*
*துள் உண்ட நெஞ்சத் துடுக்கு"*

*(அருள் திறந்து அலைசல். 22)*

*"எனை நரகில்*
*தள்ளும்படிக் கோ தலைப்பட்டாய்*
*சகத்தில் மடவார் தம்மயலால்*
*கள்ளுண்டந்தோ, வெறி கொண்டாய்"*

*(நெஞ்சோடு புலத்தல். 10)*

மாபாதகச் செயல்களுள் கள்ளையும் இணைத்துப் பேசி, அதன் கொடுமையையும் தெளிவாக உணர்த்துகிறார்.

*"கொலை களவுகள் காமம் முதலாகக்*
*கண்ட தீமைகள்"*

*(வைத்தியநாதர் பதிகம். 11)*

*"வள்ளல் இவ் வுலகில் தந்தையர் வெறுப்ப*
*மக்கள் தாம் ஒழுக்கத்தை மறந்தே*
*கள் அருந்துதல் சூதாடுதல் காமக்*
*கடைதொறும் மயங்குதல் பொய்யே*
*விள்ளுதல் புரிவார் ஐயகோ அடியேன்*

*மெய்ய நின் திருப்பணி விடுத்தே*
*எள்ளி அவ்வாறு புரிந்தது ஒன்றுண்டோ*
*எந்தை நின் ஆணை நான் அறியேன்."*
*(பிள்ளைப் பெரு விண்ணப்பம். 100)*

பஞ்சமா பாதகங்கள் குறித்துப் பாடல் வழியாகக் கூறிய தோடமையாமல், உரை நடை வாயிலாகவும் விளக்குகிறார்.

"கள், காமம், கொலை, களவு, பொய் இவ்வைந்தும் கொடிய துன்பத்தை உண்டுபண்ணும். இவ்வைந்திலும் கொலை விசேட பாவம் எனினும், கள் உண்டவனுக்கு காமம் உண்டாகாமல் இராது. கொலை செய்யத் துணிவு வராமல் இராது. களவு செய்யாமல் இரான். பொய் பேச அஞ்சான். ஆகையால் இந்த ஐந்தையும் ஒழிக்க வேண்டியது அவசியம். இவற்றில் ஒன்றை அடைந்தவன் ஆனாலும், அவனை மற்றவை தொடாமல் இரா" என்பதை வள்ளலார் விளங்கும்படியாகக் கூறுகிறார். இந்த மாபாதகங்களை யெல்லாம் வள்ளலார் தம்மீது ஏற்றிக் கூறுவதற்குக் காரணம், ஆன்றவிந்தடங்கிய சான்றோர்கள் எப்பொழுதுமே பிறர் குற்றங்களைத் தம் மேல் ஏற்றிக் கூறி அவ்வாறு செய்யற்க என அறிவுறுத்துவார்கள். அப்பணியிலே முதன்மை இடம் பெறுகின்றார் வள்ளலார்.

*"குலம் பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்*
*குற்றமே பெரிதுடையேன் கோலம் ஆய*
*நலம் பொல்லேன் நான் பொல்லேன் ஞானி அல்லேன்*
*நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற*
*விலங்கல்லேன் விலங்கல்லா தொழிந்தேன் அல்லேன்*
*வெறுப்பனவும் மிகப் பெரிதும் பேச வல்லேன்*
*இலம் பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்*
*என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே"*

என்று அப்பர் கூறி இருப்பதனால் அவர் இக்குற்றங்கட்கு ஆளானவர் என்று கூற முடியுமா? இது போன்ற நிலையில்தான் வள்ளல் பெருமான் வாக்கும் அமைந்துள்ளது.

கட்குடி உணர்வை அழிக்கும். அறிவு மடிதற்குக் காரணமாகும். மனத்தையும், வயிற்றையும் எரியச்செய்யும். இவற்றிற்கெல்லாம் காரணமாக இருக்கின்ற

கள்ளைக் குடித்து உணர்விழக்கும் மக்கள் வீணே அழிகின்றார்களே என்ற பெருங் கவலையினால், கருணை உள்ளத்தினால்,

*“கொதிப்பாலை உணர்வழிக்கும் குடிப்பாலை*
*மடிப்பாலைக் குடிப்பார் அந்தோ”*

என்று கூறினார். மனத்தையும், சிந்தையையும் மயக்குகின்ற மதுபானத்தை விடுத்து, இறைவனிடம் மயங்க வேண்டும். 'அன்னவர்க்கே சரண் நாங்களே' என்று பணிய வேண்டும். இதனைத்தான் வள்ளலாரும்,

*“துதிப்பாலை அருள்தரும் நம்*
*தேவ சிகாமணித் தேவைத் துதியார் அந்தோ”*

எனப் பாடி முடித்துள்ளார். வள்ளல் பெருமானுக்கு மிகுந்த ஈடுபாடுள்ள திருமந்திரமும் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

*“உள் உண்மை ஓரார் உணரார் பசு பாசம்*
*வள்ளன்மை நாதன் அருளின் வாழ்வுறார்*
*தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சோர்வுரு*
*கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே."*

# 7. இறவாத வாழ்வு

மரணத்தை எதிர்த்து நின்று தடுக்கவல்லார் சன்மார்க்கிகள்தாம். சன்மார்க்கிகளைத் தவிர மரணத்தைத் தடுக்கவல்லார் எந்த உலகிலும், எவரும் இல்லை என்பது வள்ளலாரின் உறுதியான நம்பிக்கை.

பட்டோடு பணியோடு திரிந்து, கொட்டோடு முழக்கோடு கோலம் கண்டு, நாறாத மலர் போலும் வாழ்ந்து, கண்மூடித் திரிந்து வாழ்க்கையில் அற்ப மகிழ்ச்சியும் பெற்று, பொய்க்கட்டிக்கொண்டு வாழுகின்ற மக்களால் சாகாத நிலையை அடைய முடியுமா?

ஆறாமல், அவியாமல் அடைந்த கோபம் உடையோர், மாறாமல் மனம் சென்ற வழி சென்று திகைப்போர், காமாந்தகாரத்தில் கண்மூடித் திரிந்தவர், கற்பன கற்காதவர், பச்சையும், செம்மையும், கருமையும் கூடிப் பரித்த வாழ்க்கையில் பண்பொன்றும் இல்லாதவர், இச்சையில் கண்மூடிச் சுகம் காண அலைந்தவர், இன்சொல்லை ஒழித்து, வன்சொல்லை வழக்கொடு இணைத்தவர், பகராத வன்மொழி பகருகின்றவர், அகம் கருத்துப் புறம் வெளுத்த உலகர், பண்ணாத தீமை, நண்ணாத தீயினம், நடக்காத நடத்தைகள் நடக்க வந்தோர் சாகாத நிலை அடைய முடியுமோ?

ஆனந்தத் தேனை, அமிழ்தத்தை, உண்ணும் அருளாளன், அருட்பெருஞ்சோதி மந்திரத்தினை நா மறக்காது சொல்லும் நெறியாளன் சாகாத நிலை அடைவான். மக்கள் பேற்றின் இறுதி நிலையே சாகாத நிலையாகும். இறவாத நிலையெனும் முடிந்த நிலையை ஒவ்வொரு உயிரும் அடைதற் பொருட்டே, எல்லாம் வல்ல இறைவன் அவைகட்குப் புல், பூடு, மரம், செடி, கொடி, புழு, மீன், புள், விலங்கு முதலிய உடல்களைப் படிப்படியாகத் தந்து இறுதியில் பகுத்தறிவை விளங்கச் செய்யும் மனித உடலைத் தருகின்றான். பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றவன், வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் வைத்து எண்ணப்படும் நிலையை எட்ட வேண்டும்.

தன்னுடைய உடல் அழிந்தாலும், தன் பெயர் இவ்உலகில் நிலைத்திருப்பதே சாகாத வரம். பல வீரர்களைப் பற்றி மக்கள் பேசுகின்றனர்; கொண்டாடுகின்றனர்.

*“தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதுஇலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று”*

என்றார் வள்ளுவர்.

மக்கட் பிறவியின் இச்சிறப்பை உணர்ந்தோர் அதற்குத்தக தங்கள் வாழ்க்கையை விழுமியதாக அமைத்துக்கொண்டனர்.

மனிதன் மனிதனாக வாழ்ந்து, இறைமை நிலை அடைய வேண்டுமெனின் அது மிக எளிதில் கைகூடக் கூடிய காரியமன்று. வருந்திப் பெறுவதுதான் வளமைக்கு வழிகாட்டும். எண்ணும் எண்ணம் நல்லதாக, தூயதாக, உயர்ந்ததாக அமைகின்ற நிலையில் நன்மைகள் பெருகிக்கொண்டே போகும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவற்றை நீக்குகின்ற தன்மையில்தான் அறம் தோன்றும். திணையளவு தீய எண்ணங்கள் மனத்தகத்தே தோன்றினாலும், பனையளவு துன்பம் தரத்தக்கதாக அமைந்து விடும். எனவே நல்லெண்ணங்களால் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, எண்ணிய முடிய, நல்லவே எண்ணி, நெஞ்சத்தை இறைவனுக்கே இடமாக்கும் தூய்மையில் வாழ்வமையும்போது, நெஞ்சமே கோயிலாக மலர்கிறது. ஆண்டவன் கோயில் கொள்ளத்தக்க உள்ளத்தை வளர்த்துக் கொள்ளும் பேற்றால் ஆனந்த மயமான வாழ்க்கையைப் பெற முடிகிறது. இந்த அழிக்கப்பட முடியாத நித்தியப் பேரானந்தப் பெருங்கடலுக்குள் வாழ்க்கை சுழன்று வருகின்ற நிலையில், நன்றுடைக் கடவுள் நிலையைப் பெறலாம். வள்ளல் பெருமானும் இத்தகு இறவாத நிலையைக் குறிக்கோளாக வைத்துத்தான் வாழ்க்கை நடத்தினார்கள். இதில் வெற்றியும் பெற்றார்கள்.

இந்தக் கருத்தை, வள்ளல் பெருமானே உரைநடை வாயிலாக விளக்குகின்றார்கள்.

*“இத்தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்து மழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல், எதனாற் பெறுதல் கூடுமென்று, அறியத் தொடங்கிய தருணத்து, 'வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது. எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்திரமொன்றாலே பெறுதல் கூடும்' என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன். பின்னர்த் திருவருள் சுதந்திரம் நமக்கு எந்த வழியாற் கிடைக்குமென்று அறியத் தொடங்கிய தருணத்து 'எனது, யானென்னும் தேக சுதந்திரம், போக சுதந்திரம், ஜீவ சுதந்திரம் என்னும் மூவகைச் சுதந்திரங்களும் நீங்கிய விடத்தே கிடைக்கும்' என்று தேவரீர் திருவருளாலே அறிவிக்க உள்ளபடி*

*அறிந்தேன். ஆதலின் எனது சுதந்திரமாகக் கொண்டிருந்த தேக சுதந்திரத்தையும், போக சுதந்திரத்தையும், ஜீவ சுதந்திரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்திரமாகக் கொடுத்து விட்டேன்.*

*கொடுத்த தருணத்தே இத்தேகமும், ஜீவனும், போகப்பொருளும், சர்வ சுதந்திரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப் பெற்றவையன்றி, நமது சுதந்திரத்தாற்பெற்றனவல்லவென்னும் உண்மையை அருளாலறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத் தேகத்தினிடத்தும், ஜீவனிடத்தும், போகப் பொருள்களிடத்தும், தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்திரத் தோற்றமும் தோற்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்திரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையுந் தவிர்த்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி, எக்காலத்தும் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும். இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும், எனக்கறிவித்தவண்ணமே அறிவித்து, அவரவர்களையும், உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்."*

*"எல்லா உயிர்களையும் பொதுமையினோக்கி, எல்லா உயிர்களும் இன்பமடைய வேண்டுமெனுங் கருணை நன் முயற்சியைப் பெருவித்து, சுத்த சன் மார்க்கத் தனி நெறி ஒன்றையே பற்றுவித்து, எக்காலத்தும் நாசமடையாத சுத்த தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்னும் சாகாக் கலாநுபவ தேகங்களும், தற்சுதந்திரத்தால், தத்துவங்களெல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப்பெரு வல்லபமும், கடவுள் ஒருவரே என்றறிகின்ற உண்மை ஞானம், கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்பப் பெருவாழ்வில் என்னை அடைவிப்பதற்குத் திருவுளங்கொண்டு அருட்பெருஞ் சோதியாகிய நான் எவ்விதத்தும் அறிதற்கரிய உண்மைப் பேறறிவை அறிவித்தும், நான் எவ்விதத்தும் காண்பதற்கரிய உண்மைப் பெருங் காட்சிகளைக் காட்டுவித்தும், நான் எவ்விதத்தும் செய்தற்கரிய உண்மைப் பெருஞ்செயல்களைச் செய்வித்தும், நான் எவ்விதத்தும் அடைதற்கரிய உண்மைப் பெரு*

*நன்மைகளை அடைவித்தும், நான் எவ்விதத்தும் அனுபவித்தற்கரிய உண்மைப் பேரனுபவங்களை அனுபவித்தும், எனது அகத்தினும், புறத்தினும், இடைவிடாது காத்தருளி, எனது உள்ளகத்திலிருந்து உயிரிற் கலந்து பெருந்தயவால் திருநடஞ் செய்தருளுகின்றீர். இங்கனஞ் செய்தருளுகின்ற தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்."*

உரைநடையில் தெளிவாக கூறியுள்ளது போலவே பாவரிசையிலும் அடுத்தடுத்து விளக்குகிறார்.அருட்பெருஞ்சோதி அகவலில் அடுத்தடுத்து இது பற்றியே பேசுகிறார்.

*"என்னையும் பணிகொண் டிறவா வரமளித்*
*தனையி லுவந்த அருட்பெருஞ் சோதி"*

என்றும்,

*"இறவா வரமளித் தென்னை மேலேற்றிய*
*அறவாழி யாந்தனி அருட்பெருஞ்சோதி"*

என்றும்,

*"சாவா நிலையிது தந்தனம் உனக்கே*
*ஆவா எனவருள் அருட் பெருஞ்சோதி"*

என்றும்,

*"உடலுறு பிணியால் உயிருடல் கெடாவகை*
*அடலுறக் காத்தருள் அருட்பெருஞ்சோதி"*

என்றும் விளக்குகிறார்.

மனிதனுக்கு வருகின்ற பிணிகள் பலவிருக்கின்றன. உடலை வருந்துகின்ற பிணிகள் பலவற்றிற்கு பல வகையான மருந்துகள் உள்ளன. உள்ள நோய்க்கு மருந்து, அவ்வளவு விரைவில் கிடைத்து விடாது.

உள்ள நோய்க்கு மாற்று கிடப்பது சிரமம் எனினும், அழுதால் அவனைப் பற்றி, நோயைத் தீர்த்துக் கொள்ளலாம். உள்ளம் பழுதுபட்டால், மரணம் மனிதனை வெகு விரைவில் தழுவிக்கொள்ளும். இதை உணர்ந்த வள்ளலார்,

*“மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு*

*கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே*
*நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரு*
*முறைதரு பெருஞ்சீ ருடையநன் மருந்தே"*

என மருந்தாகிய இறைவனை நோக்கித் தன் உள்ளம் வளம் பெற வழிவகை செய்த தன்மையை உலகோர்க்குக் காட்டுகிறார்.

இறைவனையே மருந்தாகப் பாவித்து, நோய் நாடி, நோய் முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடிடும் தன்மையை எல்லோராலும் பெற்றுவிட முடியுமா? அதற்கான தனிக் கல்வியும், தனிப் பயிற்சியும் பெறவேண்டுமென்கிறார் வள்ளலார்.

*"சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச்*
*சாகா வரத்தையுந் தந்து மென்மேலும்*
*அன்பையும் விளைவித் தருட்பே ரொளியால்*
*இன்பையும் நிறைவித் தென்னையும் நின்னையும்*
*ஒருரு வாக்கியான் உன்னிய படியெலாஞ்*
*சீருறச் செய்துயிர்த் திறம்பெற அழியா*
*அருளமுத ளித்தனை அருணிலை ஏற்றினை*
*அருளறி வளித்தனை அருட்பெருஞ்சோதி."*

சாகாத நிலையினைப் பெற எண்ணுவோர் பெறுகின்ற கல்வியினையும் தரமறிந்து கற்கவேண்டும். அக்கல்வியின் பொருளை உணர்ந்து கொள்வதற்குத் தனித் திறமை வேண்டும். கீழ்ப்பாலொருவனும் கற்று மேற்குலத்தவனாக முடியும். தரமறிந்து, சாகாத கல்வியினைக் கற்போர் உண்மைநிலை அறிதலோடு, அவர்களே நற்குலத்தாராகவும் விளங்குகின்றார்களென்ற உண்மையையும் வள்ளலார் விளக்குகின்றார்.

*"சாகாத கல்வித் தரமறிதல் வேண்டுமென்றும்*
*வேகாத காலுணர்தல் வேண்டுமுடன் - சாகாத்*
*தலையறிதல் வேண்டுந் தனியருளால் உண்மை*
*நிலையடைதல் வேண்டும் நிலத்து"*

என்ற கல்வியைக் கற்குங்கால், நரை, மூப்பறியா நல்லவுடம்பு பெற்று நற்குலத்தாராக மக்கள் திகழுகின்றனராம்.

*"நரை மரண மூப்பு அறியா நல்ல உடம் பினரே*
*நற்குலத்தார் எனஅறியீர் நானிலத்தீர் நீவிர்*
*வரையில் உயர் குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும்*

*வகுக்கின்றீர் இருகுலமும் மாண்டிடக் காண்கின்றீர்*
*புரையுறு நும் குலங்கள் எலாம் புழுக் குலம் என்று அறிந்தே*
*புத்தமுதம் உண்டு ஓங்கும் புனிதகுலம் பெறவே*
*உரைபெறும் என் தனித் தந்தை வருகின்ற தருணம்*
*உற்றதிவண் உற்றிடுவீர் உண்மை உரைத்தேனே."*

மனித சமுதாயத்தைச் செம்மைப்படுத்துவதாக, 'இறைவன் வருவிக்க வந்தேன். அருளைப் பெற்றேன்' என்று கூறுகின்ற வள்ளலார். மனித சமுதாயம் தனக்குத்தானே செய்துகொண்டுள்ள தீமைகளையும், அமைத்துக் கொண்டுள்ள தடைகளையும் உடைத்து வாழவேண்டிய அவசியத்தை உணருகிறார். தம்மை மறந்து, எப்பொழுதும் நாவும், மனமும் போட்டி போட்டுச் சிந்திக்க வேண்டிய பரம்பொருளை, எப்பொழுதாவது ஒருமுறை சிந்தித்துச் சீர் பெறலாமென்ற சோம்பேறித்தனமான வாழ்வை எண்ணிக் கலங்குகிறார். எனவேதான் பகுத்தறிவு பெற்ற மனிதனை மெதுவாகச் சிந்திக்க வைத்து அவன் சிந்தனையைச் சிவமாக்குவதற்குமுன் அவனுக்குக் கல்வி போதிக்கிறார். அந்தக் கல்வி எழுமையும் ஏமாப்புடைய தென்பதை அவன் மனத்தில் இறக்குகிறார். கற்றவனுக்கு அழிவில்லை, குலமில்லை, சென்ற இடமெல்லாம் சிறப்பு செய்யப்படுகின்றான் என்ற உண்மையை உணர்த்தி, அவனைத் தயாராக்குகிறார். அவனைத் தயாராக்குகின்ற முதல் நிலையில், பலவிதத் தோல்விகளைக் கண்டாலும், இறுதி வெற்றி மனிதனுக்குத்தான் என்ற நம்பிக்கையைத் தான் ஏற்றுக் கொண்டு, அவனும் ஏற்றுக்கொள்ளும்படியான வழியில் நடத்திச் செல்கிறார். தான் சொல்லும் வார்த்தைகளனைத்தும் சத்திய வார்த்தை என்று கூறுகிறார்.

ஒருமுறையல்ல, இருமுறையல்ல, பலமுறை நினைக்கச் சொல்கிறார். பழக்கம் வழக்கமாகிறது. முதலில் நா எதையோ தலைகீழ்ப்பாடமாக ஒப்புவிக்கிறது. சொன்ன சொற்கள் நாவிலே தழும்பாகப் படுகிறது. பன்னாட்கள் கழித்து அச் சொற்கள் நாவிலே ஒரு வகையான இனிப்பை உருவேற்றுகிறது. அதைத் தொடர்ந்து பல நிலைகள், தன் அனுபவத்தை வள்ளல் பெருமான் கூறுகிறார்.

*"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே*
*நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனால் உடம்பு*
*நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான*
*நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று*
*வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்*
*மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்*

*புனைந்து உரையேன் பொய் புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன்*
*பொற்சபையில் சிற்சபையில் புகுந் தருணம் இதுவே."*

இதைவிட அழுத்தமாகவும், சத்தியமாகவும் யாராலும் கூற முடியாது. பொய் பேசி, புனைந்து கூறி வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளும் மக்களிடையே வாழ்ந்த காரணத்தால், பொய்யில்லை; புனைந்துரையில்லை; சத்தியமாகக் கூறுகிறேனென்று வள்ளலார் கூறுகிறார்.

தான் கூறுகின்ற மரணமில்லாப் பெருவாழ்வுக்கு மக்களை அழைத்துச் செல்லுகின்ற மார்க்கம்தான் சன்மார்க்கம் என்கிறார். நம்மிடம் உள்ளவரை உயிரின் அருமையோ, பொருளின் பெருமையோ அறியாதவர்களாகவே வாழ்கிறோம். நமக்கு கிடைத்த பெரும் பொருளை, நாமே வைத்துக்கொள்வதற்கான வழி காட்டப்பட்ட பிறகும், அந்த வழியிலே நடக்க முயல்வதில்லை. சன்மார்க்கம் காட்டும் வழியில் நடந்தால், பொருளும், உயிரும் நமக்குத்தான்.

*"இறந்தவரை எடுத்திடும் போது அரற்றுகின்றீர் உலகீர்*
*இறவாத பெரு வரம் நீர் ஏன் அடைய மாட்டீர்*
*மறந்து இருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு*
*மறந்தும் இதை நினைக்கில் நல்லோர் மனம் நடுங்கும் கண்டீர்*
*சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணிமூப்பு மரணம்*
*சேராமல் தவிர்த்திடுங் காண் தெரிந்து வம்மின் இங்கே*
*பிறந்த பிறப்பு இதில் தானே நித்திய மெய் வாழ்வு*
*பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே."*

இறவாத பெரும் வரம் பெறுவதற்கான மார்க்கம் திறந்து விடப்பட்டுவிட்டது. விரைந்து வருவதற்கான மனம், கால்கள் நம்மிடத்தே தான் உள்ளதென்கிறார்.

*"ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன் மாளாத ஆக்கை பெற்றேன்*
*கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவு கின்றேன்*
*பாடுகின்றேன் எந்தைபிரான் பதப்புகழை அன்பினொடும் பாடிப் பாடி*
*நீடுகின்றேன் இன்பக் கூத் தாடுகின்றேன் எண்ணமெலாம் நிரம்பி னேனே."*

என்ற பாடலிலும்,

*"காற்றாலே புவியாலே கனகமத னாலே*
*கனலாலே புனலாலே கதிராதி யாலே*
*கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே*

*கோளாலே பிறவியற்றுங் கொடுஞ் செயல்களாலே*
*வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்*
*மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே*
*ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்*
*எந்தையருட் பெருஞ்சோதி இறைவனைச்சேர் வீரே”*

என்ற பாடலிலும், இறவா நிலையைப் பெறுவதற்கான உள்ளநிலை தனக்கு வந்துற்றதன் உண்மை நிலையினை எடுத்துக் காட்டி, மற்றவர்களையும் அந்த அடிச் சுவட்டைப் பின்பற்றும்படி வேண்டுகிறார்.

தனக்கு முன்னாலேயே தோன்றிய அறிஞர் பெருமக்கள் பலரும், இவ்வுலகத்திலேயே வாழ்வாங்கு வாழ முடியும், இறை நிலையை அடைய முடியுமென்று கூறியிருந்தாலும், தன் காலத்தில் தாம் ஒருவரே கூற வேண்டிய நிலையினை நன்குணர்ந்த வள்ளலார், தம் கருத்துக்களை உலகோர் விளங்கிக் கொள்ளும் வண்ணம் சொல்வதற்கான ஆற்றலை வேண்டுகிறார்.

*“உடைய நாயகன் பிள்ளைநான் ஆகில் எவ்*
*வுலகமும் ஒருங்கி இன்பம்*
*அடைய நான் அருட் சோதி பெற்று அழிவிலா*
*யாக்கை கொண்டு உலகெல்லாம்*
*மிடைய அற்புதப் பெருஞ்செயல் நாடொறும்*
*விளைத்து எங்கும் விளையாடத்*
*தடையதற்ற நல் தருணம் இத் தருணமாத்*
*தழைக்க இத் தனியேற்கே.”*

என்று பாடியவர், இறவாத நிலைக்காகத் தான் இறையை நோக்கி வேண்டியதாகவும், தன் வேண்டுதல் பலித்து விட்டதாகவும் கூறுகிறார்.

தன் துன்பம் தொலைவதற்கான நாள் தொலைதூரத்தில் நிச்சயிக்கப்படாமல், உண்மை அருட்சோதி உள்ளத்தில் புகுந்த நாழிகை துவங்கி, மரணமிலாப் பெரு வாழ்வு வந்துற்றதாகப் பாடுகின்றார்.

*“சாதல் பிறத்தல் என்னும் அவத்தைத் தவிர்த்துக் காலையே*
*தனித்து உன் அருளின் அமுதம் புகட்டிக் கொடுத்தாய் மேலையே*
*ஓதல் உணர்தல் உவத்தல் எனக்கு நின் பொற் பாதமே*
*உலக விடயக் காட்டில் செல்லாது எனது போதமே.”*

*“சாகாக் கல்வி எனக்குப் பயிற்றித் தந்த சோதியே*
*தன்னேர் முடி ஒன்று எனது முடியில் தரித்த சோதியே*
*ஏகாக் கரப்பொற் பீடத்து என்னை ஏற்று சோதியே*
*எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த சோதியே.”*

*“சிற்சபையும் பொற்சபையும் சொந்தம் என தாச்சு*
*தேவர்களும் மூவர்களும் பேசுவது என் பேச்சு*
*இற்சமய வாழ்வில் எனக்கு என்னை இனி ஏச்சு*
*என் பிறப்புத் துன்பம் எலாம் இன்றோடே போச்சு.”*

*“ஐயர் அருட்சோதி அரசாட்சி என தாச்சு*
*ஆரணமும் ஆகமமும் பேசுவது என் பேச்சு*
*எய்யுலக வாழ்வில் எனக்கு என்னை இனி ஏச்சு*
*என் பிறவித் துன்பமெலாம் இன்றோடே போச்சு.”*

வள்ளல் பெருமான் பெற்ற இறவாத நிலையை எல்லோரும் பெறலாம். அக்கதவு நமக்காக திறக்கப்பட்டிருக்கிறது. நுழைவோமா?..........

# 8. உன்னை மறந்திடுவேனோ

*“உன்னை மறந்திடுவேனோ, மறப்பறியேன், மறந்தால் உயிர் விடுவேன்,*
*கணந்தரியேன் உன்னாணை இது.”*

உறுதியும் தீராப் பெருங் காதலும் கலந்த நிலையில் துடித்துத் துடித்துக் கதறிய பின், உயிர் இறைவனை உணர்கிறது. இனி அதற்குக் கவலையில்லை; துயரில்லை. உலகத்தைக் கண்டு அஞ்சவோ, அதை ஒதுக்கவோ தேவையில்லை.

*“அப்பா நின்னையன்றி எங்கும் அணைப்பாரில்லையே*
*அந்தோ நின்னையன்றி இறைமை இல்லையே*
*எனக்கு நின்மேலன்றி உலகில் இச்சை இல்லையே”*

என்று உயிர் இறைவனைப் பற்றிப் பாடுவது இயல்பு. ஆனால் அந்த நிலை உடனே வந்து விடுகின்றதா? " எனக்கு நின்மேலன்றி உலகில் இச்சை இல்லையே " என்று கூறுவதற்கு நெஞ்சில், நெடும் போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது.

*“மண்ணிலே மயங்கு மனத்தினை மீட்டுண்*
*மலரடி வழுத்திடச் சிறிதும்*
*எண்ணிலேன் கொடிய ஏழையேன் என்னை*
*என் செய்தால் தீருமோ அறியேன்”*

என்றும், “*மோகமதிற் போய்ப் படுவோர், பஞ்சப் பொறிகளால் வெம்பாம்பின் வாய்ப்படுமோர் தேரையைப்போல் வாடுகின்றேன்*” என்றும் வள்ளலார் வருந்துகிறார். தன் மனத்தையே பார்த்துப் பேசுகிறார். தன்னையறிந்தால் இன்பமுறலாம். இதுதான் வள்ளலாரின் சித்தாந்தம். எனவே இறைவனை மறக்காமல் இருக்க தன்னை நோக்கி,

*“அஞ்சு அருந்தென்றல் அமுதின் ஆர்கின்றாய் விட்டிடென்றால்*
*நஞ்சு அருந்தென்றாற்போல் நலிகின்றாய் வஞ்சகத்தில்*
*ஓடுகின்றாய் மீளாமல் உன் இச்சையின் வழியே*
*ஆடுகின்றாய் மற்றங்கு அயர்கின்றாய்”*

என்று பேசி வருந்துகிறார். இறைவனுடைய அருளையே வேண்டி,

*“தாயனே துணை நீயல்லால்*
*கண்டிலேன் எனைக் காப்பதுன் கடன்காண்*

*கைவிடேல் கைவிடேல் எந்தாய்”*

என்று வள்ளலார் முறையிடுகின்றார். கட்டுண்டு கிடக்கும்ீ உலக பந்த பாசங்களிலிருந்து அவனை நோக்கித் திரும்பினால், மலைப்பும், வியப்பும் தோன்றுகிறது. தூரத்தைக் கண்டு மனம் துணுக்குறுகிறது. 'முடியுமா' என்ற கேள்வி பிறக்கிறது. இந்த மலைப்பை நீங்கச் செய்ய உயிரானது அவனை நோக்கி முறையிடுகிறது.

*“அளவிறந்த நெடுங்காலம் சித்தர் யோகர்*
*அறிஞர் மலரயன் முதலோர் அனந்த வேதம்*
*களிவிறந்தும் காணாதி இறந்தும் செய்யும்*
*கடுந்தவத்தும் காண்பரிதாம் கடவுள்”*

இத்தகைய கடவுளைக் காண முடியுமா? கோடையின் நிழலில், மேடையின் காற்றில், தீஞ்சுவை நீரில், மலரின் மணத்தில் காண முடியுமென்கிறார்களே, முடியுமா?

*“பேரறிவாற் கண்டும் பெரியோர் அறியாரேல்*
*யாரறிவார் யானோ அறிகிற்பேன் - சீர்கொள்*
*வெளியாய் வெளிக்குள் வெளியாய் ஒளிக்குள்*
*ஒளியாகி நின்ற உனை”*

என்னால் காண முடியுமா? உயிர் இறைவனையே நோக்கி முறையிடுகிறது. முறையீடு முதிர்ந்து பேரழுகையாகிறது. அல்லும், பகலும், எக்காலமும் உள்ளமும் உடலும் நீர் சோர எந்நேரமும் மனம் முறையிடுகின்றது. முறையீட்டின் முதிர்ச்சியை, மறக்க முடியாத நிலையினை வள்ளலார் உணர்த்துகிறார்.

*“தந்தைநீ அலையோ தனயன் நான் அலனோ*
*தமியனேன் தளர்ந்து உளம் கலங்கி*
*எந்தையே குருவே இறைவனே முறையோ*
*என்று நின்று ஓலிடு கின்றேன்*
*சிந்தையே அறியார் போன்றிருந் தனையேல்*
*சிறியனேன் என் செய்கேன் ஐயோ*
*சந்தையே புகுந்த நாயினில் கடையேன்*
*தளர்ச்சியைத் தவிர்ப்பவர் யாரோ.”*

இப்படி நொந்து நொந்து அழுததன் பின்னர் ஈசனது திருவருள் நெருங்குகிறது. நெருங்குகின்ற திருவருளைச் சிக்கெனப் பற்றிக்கொள்ள நினைக்கிறது. மீண்டும் தன் கடந்த கால வாழ்க்கையை மனம் ஒரு புரட்டு புரட்டுகிறது.

*“பேதை நெஞ்சினன் செய் பிழைஎல்லாம்*
*பேசினாற் பெரும் பிணக்கினுக்கு இடமாம்*
*தாதைநீ யவை எண்ணலை”*

என்று இறைவனிடம் உயிர் முறையிடுகிறது.

அவனின் அலகிலாக் கருணையை எண்ணிய உயிர் பெருவியப்பில் ஆழ்கிறது. அனுபவம் பெற்ற பின்னர், அந்த அனுபவத்தைப் பேரனுபவ ஆனந்தமாக மாற்ற எண்ணுகிறது. முன்னிலும் உறுதியோடு தாங்கொனாப் பெருங் காதலோடு, தாபத்தோடு அவனை நோக்கித் திரும்புகிறது. கணநேரத்திற்குத் தன்னைத் தொட்ட பேரருள் என்றென்றும் தன்னை அணைக்க வேண்டுமென்று மன்றாடுகிறது.

*“செய்வகை என்னெனத் திகைத்தேன்!*
*திகையேல் என்றொரு நாள்*
*திருமேனி காட்டி எனைத் தெளிவித்தாய் நீயே!*
*பொய்வகையன்று இதுநினது புத்தி அறிந்ததுவே.”*

*“பொன்னடியே துணையெனநான் என்னுயிர் வைத்திருந்தேன்*
*எய்வகை என நம் பெருமான் அருள்புரிவான் என்றே*
*எந்தை வரவு எதிர்பார்த்தே இன்று மிருக்கின்றேன்*
*ஐவகை இவ்வுயிர்த்துயரம் இனி பொறுக்கமாட்டேன்*
*அருட்சோதிப் பெரும் பொருளை அளித்தருள் இப்பொழுதே.”*

உறுதியும் தீராப் பெருங்காதலும் கலந்த நிலையில், துடித்துத் துடித்துக் கதறிய பின், உயிர் இறைவனை உணர்கிறது. இனி அதற்குக் கவலையில்லை, துயரில்லை, துன்பமில்லை. உலகத்தைக் கண்டு ஒதுங்கவோ, அஞ்சவோ தேவையில்லை. இப்படித்தான் உயிர் எண்ணுகிறது.

*“கடல் கடந்தேன்; கரையடைந்தேன்*
*கண்டு கொண்டேன் கோயில்,*
*கதவு திறந்திடப் பெற்றேன்*
*காட்சி யெலாம் கண்டேன்”*

என வியந்து பாராட்டுகிறது. ஆராவமுதத்தை, பேரின்பத்தைக் கொடுத்த இறைவன் அவ்வின்பத்திற்கு மேலும் சுவை சேர்க்க எண்ணுகின்றான். பக்குவப்படுத்தப்பட்ட உயிரைப் பிரியேன் என்றுகூடக் கூறினார். கூறியவர் திருவருட் பேற்றை உயிருக்கு வழங்குவதில் உயிருக்கு மேலும் சில சோதனைகள் நடக்கின்றது. இன்பத்தைப் பெற்றவன், அதனைத் தொடர்ந்து பெறுகின்ற தன்மையில், இடையில் வருகின்ற சோதனைகட்காகக் கலங்க மாட்டான். எனினும், கிடைத்த இன்பம், பாதி உண்ணும் நிலையில் தட்டிப் பறிக்கப்பட்டு விட்டால், பல படிகளேறி வந்து அவனை வணங்கிய பிறகு மீண்டும் பார்ப்பதற்குள் கதவு அடைக்கப்பட்டு விட்டதென்றால், உயிர் என்ன செய்யும்?

*"படிகள் எலாம் ஏற்றுவித்தீர் பரம நடம் புரியும்*
*பதியை அடைவித்தீர் அப் பதி நடுவே விளங்கும்*
*கொடிகள் நிறை மணி மாடக் கோயிலையும் காட்டிக்*
*கொடுத்தீர் அக் கோயிலிலே கோபுர வாயிலிலே*
*செடிகள் இலாத் திருக்கதவம் திறப்பித்துக் காட்டித்*
*திரும்பவும் நீர் மூடுவித்தீர் திறந்திடுதல் வேண்டும்*
*அடிகள் இது தருணம் இனி அரைக்கணமும் தரியேன்*
*அம்பலத்தே நடம்புரிவீர் அளித்தருள்வீர் விரைந்தே."*

வார்த்தைக்கு வார்த்தை சோர்வுறாமல் அழுத்தமாகக் கதவு திறந்திட வேண்டுமென்று உயிர் மன்றாடுகிறது. படிகளெல்லாம் ஏறி வந்தது எதற்காக? மணிமாடக் கோயிலை அடைந்தது எதற்காக? கதவைத் திறப்பித்துக் காட்டிக் கருணையை வழங்கிய பிறகு கதவை மூடுதல் அழகாமோ? 'அடித்தது போதுமப்பா! அணைத்திடல் வேண்டும்' என்கிறார். அரைக்கணமும் அவனை விட்டு நீங்க முடியாத பக்குவத்தை உண்டாக்கிக் கொடுத்தவனே சோதிப்பதைக் கண்டு வள்ளலார் மனம் வாட்டமுறுகிறது. கதவு அரைக்கணத்தில் திறக்கப்படவில்லை. எனினும் மனம் எப்போதோ அவருக்காகத் திறக்கப்பட்டுவிட்டது. வாய் திறந்து பாடுகிறார்.

*"பெட்டி இதில் உலவாத பெரும் பொருள் உண்டு இது நீ*
*பெறுக என அதுதிறக்கும் பெருந் திறவுக்கோலும்*
*எட்டிரண்டும் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர்*
*இதுதருணம் திறந்து அதனை எடுக்க முயல்கின்றேன்*
*அட்டிசெய நினையாதீர் அரைக்கணமும் தரியேன்*
*அரைக் கணத்துக் ஆயிரம்ஆயிரங் கோடி ஆக*
*வட்டிஇட்டு நும்மிடத்தே வாங்குவன் நும் ஆணை*

*மணி மன்றில் நடம்புரிவீர் வந்தருள்வீர் விரைந்தே."*

பேதையைப் போல, எதுவுமறியாத உழன்ற உயிரைப் பக்குவப்படுத்தி, அது பெற வேண்டிய அழியா நிதி நிறைந்த பெட்டகத்தையும், திறவுகோலையும், திறக்கும் வழியினையும் காட்டிக் கொடுத்த பெருமான், திறக்க முயலும் வேளையில் தாமதம் காட்டினால், தன்னால் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையினை உயிர் அப்படியே எடுத்துக் காட்டுகிறது. அவசரமில்லாது, நின்று, நிதானித்து வாழ்ந்த உலகோரை,

*" ஞானசபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே "*

எனச் சொல்ல வைக்கும் நிலைக்கு வந்த பிறகு தாமதம் செய்தல் நல்லதே அல்ல. அரைக்கணந் தாமதித்தாலும் அந்த அரைக்கணத்திற்கு, ஆயிரமாயிரம் கோடியாக வட்டியிட்டு இறைவனிடமே அசலையும், வட்டியையும் வாங்கப் போவதாக ஆணையிட்டு உயிர் கூறுகிறது. அது மட்டுமா?

*"கைக்கு இசைந்த பொருள் எனக்கு வாய்க்கு இசைந்து உண்பதற்கே*
*காலம் என்ன கணக்கென்ன கருதும் இடம் என்ன*
*மெய்க்கு இசைந்தன்று உரைத்தது நீர் சத்தியம் சத்தியமே*
*விடுவேனோ இன்று அடியேன் விழற்கிறைத்தேன் அலவே*
*செய்க்கிசைந்த சிவபோகம் விளைத்துணவே இறைத்தேன்*
*தினந்தோறும் காத்திருந்தேன் திருவுளமே அறியும்*
*மைக்கிசைந்த விழிஅம்மை சிவகாம வல்லி*
*மகிழ நடம் புரிகின்றீர் வந்தருள்வீர் விரைந்தே."*

என் கையிலே கிடைத்துள்ள பொருள் எனக்கிசைந்த பொருள்தான். வாய்க்கும், மனத்திற்கும் ஏற்ற பொருள். உண்ணுவதற்கு வாயும் தடை சொல்லாது. மனதும் ஏற்கும். இதைக் கொடுத்தபின், 'உண்ணுவதற்காக வேண்டி, காலத்தையும் இடத்தையும் பார்த்துக் கொண்டிரு' என்று கூறுதல் அழகாமோ? நான் உந்தன் வரவுக்காகத், தினம், தினம் காத்திருந்ததை மனிதர்கள் அறிவாரோ? உன் உள்ளமே அறியும். என்னை வந்தருள்வீர் விரைந்தே என வள்ளலார் படுகின்றார்.

தன்னால் தாங்கிக் கொள்ள இயலாத மன நிலையை இறைவன் அளித்துவிட்ட நிலையினைக் காட்டி, இப்பொழுதே, இக்கணமே கதவு திறந்து, தன்னை ஆட்கொள்ள வேண்டுமென்று வள்ளலார் பாடுகின்றார்.

*"அன்றெனக்கு நீ உரைத்த தருணம் இது எனவே*
*அறிந்து இருக்கின்றேன் அடியேன் ஆயினும் என் மனந்தான்*

*கன்றெனச் சென்று அடிக்கடி உட் கலங்குகின்றது அரசே*
*கண்ணுடைய கரும்பே என் கவலை மனக் கலக்கம்*
*பொன்றிடப் பேர் இன்ப வெள்ளம் பொங்கிட இவ் வுலகில்*
*புண்ணியர்கள் உளங் களிப்புப் பொருந்தி விளங்கிட நீ*
*இன்று எனக்கு வெளிப்பட என் இதய மலர்மிசை நின்று*
*எழுந்தருளி அருள்வதெலாம் இனிதருள்க விரைந்தே."*

*"இது தருணம் நமையாளற்கு எழுந்தருளும் தருணம்*
*இனித் தடை ஒன்று இலை கண்டாய் என் மனனே நீதான்*
*மது விழுமோர் ஈப் போலே மயங்காதே கயங்கி*
*வாடாதே மலங்காதே மலர்ந்து மகிழ்ந் திருப்பாய்*
*குதுகலமே இது தொடங்கிக் குறைவிலை காண் நமது*
*குருவாணை நமது பெருங் குல தெய்வத் தாணை*
*பொதுவில் நடம் புரிகின்ற புண்ணியனார் எனக்குள்*
*புணர்ந்து உரைத்த திருவார்த்தை பொன் வார்த்தை இதுவே."*

உயிரின் பரிபக்குவநிலை, இறைவனைப் பிரிந்தால், அவன் பிரியும் நிலை உருவாகி விட்டது. கதவு திறக்கப் பெறுகிறது. காட்சியெலாம் காணுகின்றான். இனி எங்கிருந்தால் என்ன? மண்ணுலகமே மனிதனுக்கு பொன்னுலகமாகிவிட்டது.

*"என்னை விடமாட்டாய்*
*நான் உன்னை விடமாட்டேன்*
*இருவரும் ஒன்றாகி*
*இங்கே இருக்கின்றோம் இதுதான்*
*நின்னருளே அறிந்த தெனில்*
*செயுஞ் செய்கை அனைத்தும்*
*நின் செயலோ, என் செயலோ*
*நிகழ்த்திக நீயே"*

என்ற நிலையில் இங்கிருந்தே அவனோடு ஒன்றாக நிற்கும் இந்தச் சித்தி நிலையில் வள்ளலார் வாழ்ந்து மற்றவர்களை வாழ்வித்தார்.

இறைவனே இவ்வுலகையும், உள்ளத்தையும் நிறைத்து விடுகிறான். இந்த நிலையில், சமுதாயத்தில் காணப்படும் சாதி, சமய வேற்றுமைகளும், மற்றவையும் அற்பமாகவே வள்ளலாருக்குத் தென்படுகின்றன.

*“சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்*
*சாத்திரக் குப்பையும் தனந்தேன்*
*நீதியும் நிலையும் சத்தியப் பொருளும்*
*நித்திய வாழ்க்கையும் சுகமும்*
*ஆதியும் நடுவும் அந்தமும் எல்லாம்*
*அருட் பெருஞ் சோதி என்றறிந்தேன்”*

இப்படி வள்ளலார் உயிர்களெல்லாம் பொதுவென்ற தன்மையையும், இரக்கத்தையும் காட்டினார். தம்முடைய உயிரே இவ்விரக்கம் என்றார்.

*" உருவ என் உயிர் தான் உயிரிரக்கந்தான்*
*ஒன்றதே இரண்டிலை; இரக்கம்*
*ஒரு வில் என் உயிரும் ஒருவும் என் உள்ளத்*
*தொருபனே நின்பதத்தாணை "*

என்று இரக்கத்தில் நெகிழ்ந்து வாழும் வள்ளலாரை மறக்க முடியுமா?

# 9. தாயாகித் தந்தையுமாய்

இறைவன் எல்லா உயிர்களுக்கும் பொதுவான தாயும் தந்தையுமானவர். அருள் வடிவாக விளங்குபவர். உலக வாழ்க்கை ஒழுங்காக, முறையாக, இனிமையாக நடைபெறும்பொருட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்று நிற்கும் தன்னேரில்லாத் தலைவர். உயிர்களை யெல்லாம் குழந்தைகள் போலக் கருதி, யாதொரு வேறுபாடும் இல்லாமல் நலம் செய்பவர். செல்வர், வறியர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகளைப் பொருட்படுத்தாத அருளாளர் அவர். உண்மையும் அவரே; அறிவும் அவரே; இன்பமும், அன்பும், நிறைவும் அவரே; எனவேதான், ‘ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு’ என்ற உண்மையை உள்ளவாறு நம் தமிழகம் உணர்த்தியது. 'தெய்வம் தெளிமின், தெளிந்தோர் பேணுமின்' என்று தெளிவாக எடுத்துக்காட்டியது. பாரதியார்கூட ‘பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்’ என்று பறை சாற்றினார். தமிழர்களின் கலைக் களஞ்சியங்களிலே, படித்தவர் போற்றும் பத்துப்பாட்டிலே, புலவர் போற்றும் புறநானூற்றிலே, கற்றோரேத்தும் கலித்தொகையிலே, அறிஞர் போற்றும் அகநானூறிலே, பண்புடையோர் போற்றும் பரிபாடலிலே, குவலயத்தார் கொண்டாடும் குறுந்தொகையிலே, கடவுள் மணமும், தெய்வ சிந்தை எனும் தேனும் தேங்கி நின்று ஆரா இன்பத்தைத் தருகின்றது. இவ்வாறெல்லாம் திரும்பத் திரும்ப உணர்த்தி உலகை உய்விக்க வந்த ஞானியர் திருக்கூட்டத்தைச் சார்ந்தவர் அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள்.

இந்த தூய கருத்தோடு ஒத்துவராத கடவுட் கருத்தும் உண்டு. அந்தக் கருத்தின்படி கடவுள் ஒரு பெரு முதலாளி; வியாபாரி; அவருக்கு வேண்டியவர் உண்டு; வேண்டாதவர் உண்டு.

அவரை அடிக்கடி தற்புகழ்ச்சியாகப் பேசி, போற்றிச் சில தந்திர, மந்திரங்களைக் கையாளுகின்றவர்களுக்கு மட்டுமே அவர் வேண்டியவர். அந்த அன்பர்களுக்கு மட்டுமே அவர் உதவி செய்வார். அவர்களின் வேண்டுகோளுக்கு மட்டுமே செவி சாய்ப்பார். மற்றவர்களை அந்தக் கடவுள் புறக்கணிப்பார். வேண்டியவர்களுக்கு நன்மை பலவற்றை அடுக்கடுக்காக, ஒன்றன்மேல் ஒன்றாக செய்வதோடு அமையாது, வேண்டாதவர்களுக்கு தீமையும் செய்வார். அதாவது, ஆடம்பர, ஆரவார பூசையும்,

பூப்பலியும், திருவிழாவும் செய்வோர்க்கு நன்மை பல செய்து, அவை செய்யாதவர்க்குத் தீமையும் செய்வார்.

வேறு பலர், இறைவனை தங்கள் விருப்பு வெறுப்புக்குத் தக்கவாறு ஆடுகின்றவராகவும், பொருள் முதலியவை கொடுத்தால் மனத்தை மாற்றிக் கொள்ளக்கூடியவராகவும், நடுநிலைமை அற்றவராகவும் கற்பனை செய்து தன் சுயநல வாழ்க்கைக்குத் துணை தேடுகின்றனர். தம்முடைய வம்பு வழக்குகளுக்கும், ஆசைகளுக்கும், கடவுளைத் துணையாக வேண்டிக் கொண்டு, தம் விரோதிகளுக்குத் தீமை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றனர். தம் பிரார்த்தனைக்கு இறங்கி கடவுள் இவ்வாறு செய்ததாகவும் நம்புகின்றனர்.

ஒழுங்காக நடைபெறுகின்ற உலகப் போக்கை அடிக்கடி மாற்றி, ஒழுங்கு கெடுத்தாவது அற்புதங்கள் நிகழச் செய்யும் ஒருவராகக் கடவுளை மதிக்கின்றனர். அந்த அற்புதங்களைத் தமக்கு நன்மையாகத் திருப்பிக்கொள்ள முடியும் என்று நம்பி, அந்தத் தன்னலத்தாலேயே கடவுளுக்கு பூசை, திருவிழா முதலியன செய்கின்றனர்.

தமிழ் மக்களது அறிவு, உணர்ச்சி, தெளிவு முதலியன குறைவறப் பொருந்திய வாழ்க்கையின் அனுபவத்தினின்று எழுந்தது இறைமைக் கொள்கை. தமிழ்க் குடியினர் பழங்காலந் தொட்டே, நெஞ்சந் தோய்ந்த சமய வாழ்க்கை வாழ்ந்து, கடவுள் வழிபாட்டிலே ஈடுபட்டிருக்கின்றனர். தாம் கண்ட கலைகள் அனைத்தையும் கடவுள் நெறியின் சார்பிலே நின்று, வளர்த்து, வளம்படுத்தி, இறையருட் பணிக்கே பயன்படுத்தினர். தமிழிலக்கியம் காட்டும் நெறியும், வழிபாட்டுணர்ச்சியும், தமிழ் மக்களின் உயிர் நிலையாக அமைந்து கிடைக்கின்றன. பழங்காலத் தமிழ் மக்கள் நகரமனைய பெருங் கோயில்களை மூவாமுதற் பொருளுக்கு எடுத்திருக்கின்றனர். எனவே, கடவுள் தன்மையை உணர்ந்த சான்றோர்கள், கடவுளை செப்படி வித்தைக்காரராகவோ, முதலாளியாகவோ பார்க்கவில்லை. அருள் வடிவனாக, உலக முதல்வனாகவே இறைவனைக் காட்டினர் நாயன்மார்களும், ஆழ்வார்களும்.

வள்ளல் பெருமானின் அருட்பாக்கள் இந்தத் தூய கருத்தையே வலியுறுத்துகின்றன. மற்ற கருத்துக்கள் உண்மை என்னும் அடிப்படை இல்லாமல் தன்னலத்தோடு கற்பனை செய்துகொள்ளப்பட்டவை. ஆகையால் அவை ஒரு காலத்திலே ஏமாற்றத்தைத் தருதல்கூடும். அவ்வாறு ஏமாற்றம் ஏற்படுகின்ற காலத்தில், அவற்றை நம்பியவர்கள், அந்த

நம்பிக்கையே தளர்ந்து இறைவன் இல்லை என்று கூறும் எல்லையையே நாட முடியும். வள்ளலாரின் அருட்பாக்கள் உணர்த்தும் கடவுள் கருத்துக்கள் பொதுநலம் நாடுவனவாய், உண்மையை உணர்த்துவனவாய் உள்ளன. அவை என்றும் போற்ற வேண்டிய தெய்வீகத்தை உணர்த்தவல்லவை. ஆகையால் குறிப்பிட்ட நாட்டிற்கோ, சமயத்திற்கோ என்று குறுகி நிற்காமல் எவரும், என்றும் போற்றத்தக்க முறையில் என்றும் உண்மையாய் விளங்குபவை. இதற்குச் சான்றுகள் பலவற்றை வள்ளலார் வாக்கிலே காணலாம். ஆறாவது திருமுறையில் உள்ள பிள்ளைச் சிறு விண்ணப்பம் என்ற சிறு பகுதியை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

*“எனக்குப் பேசிய தந்தையும் தாயும்*
*பொடித்திரு மேனி யம்பலத்தாடும்*
*புனித நீ ஆதலால் ---"*

எனக் கடவுளை தாயும், தந்தையுமாகவே வள்ளலார் காண்கிறார்.

வாழ்க்கையின் அடிப்படையே கடவுளின் திருவருளால் அமைந்ததென்றும், வாழ்க்கையின் எல்லா நலமும் கடவுள் அமைத்தவையே என்றும் தெளிந்த தெளிவு உள்ளவர் அவர். எனவே, தமக்கென செயல் ஒன்றுமில்லாமல், எல்லாம் அவன் வகுத்த வழியே என வள்ளலார் வாழ விரும்பினார். உண்ணும் உணவும் இறைவன் தந்ததே என எண்ணி, பற்றின்றி உண்பதாகக் கூறினார்.

*“இன்சுவை உணவு பலப்பல எனக்கிங்கு*
*எந்தை நீ கொடுப்பிக்கச் சிறியேன்*
*நின்சுவை உணவென் றுண்கின்றேன்*
*இன்னும் நீ தரு வித்திடின் அது நின்*
*தன் சுதந் தருமிங் கெனக்கதில் இறையும்*
*சம்மதம் இல்லை நான் தானே*
*என் சுதந் தரத்தில் தேடுவே னல்லேன்*
*தேடிய தும்மிலை யீண்டே.”*

இத்தகைய நல் உள்ளத்தை பெற்றவர் வடலூர் வள்ளலார். இந்த நினைவு, ஒருமுகச் செயப்பாடுதான் அவரது வாழ்வைச் சிறப்புறச் செய்தது. கடவுளிடத்து உறுதி என்ற கொம்புதான் அவரது பற்றுக்கோடாக விளங்கியது. வள்ளலார் இறைவனையே தொழுது,

பற்றிநின்ற உறுதிப்பாட்டை அருட்பா முழுதுங் காணலாம். அருட்பாவை ஓதி உணரும் பேறு பெற்ற ஒருவர் ஆண்டவனிடம் உறுதி கொள்ளவரென்று திடமாகக் கூறலாம்.

*"அப்பா நின்னையன்றி யெங்கும் அணைப்பாரில்லையே*
*அந்தோ நின்னையன்றி யெங்கும் அருள்வாரில்லையே*
*எப்பாலவர்க்கு நின்னையன்றி இறைமை யில்லையே*
*எனக்கு நின்மே லன்றியுலகில் இச்சையில்லையே"*

என்று வள்ளலார், கடவுளின் அருளாட்சியில் திளைத்தெழுவதைக் காணலாம். இதற்கு மேலே சென்று,

*"உன்னை மறக்கில் எந்தாயுயிரென் றுடம்பில் வாழுமோ*
*உன்பாலன்றிப் பிறர்பா லென்றனுள்ளஞ் சூலுமோ*
*என்னைக் கொடுக்க வாங்கிக் கொண்ட தென்னகருதியோ*
*எந்தாய் நின்னைக் கொடுக்க வென்பா லின்றிவருதியோ"*

எனப் பாடுகின்றார். இறைவனை மறந்தால், முன்னம் கேட்ட அவனது நாமத்தை நா சொல்ல மறந்தால், உயிர் உடலிலே நிற்காது என்று கூறுகிறார்.

இறைவனிடம் தான் இரண்டறக் கலந்துவிட்ட உறுதி நிலையை மேலும் விளக்குகிறார்.

*"இறைவா நின்னைக் கனவிலேனும் யான் மறப்பேனோ*
*எந்தாயுலகத் தவர்கள் போல் நான் யினியிறப்பனோ*
*மறைவாசகமும் பொருளும் பயனும் மதிக்கு மதியிலே*
*வாய்க் கருணை புரிந்து வைத்தாய் உயர்ந்தபதியிலே"*

என்றும்,

*"இறுக்கப் பிடித்துக் கொண்டேன் பதத்தையினி நான் விடுவேனோ*
*எந்தாய்பாதம் பிடித்த கையால் வேறு தொடுவேனோ*
*குறுக்கப் பயந்து கூற்றுமோடிக் குலைந்து போயிற்றே*
*கோவேயுன்றன் அருட்சிற்சோதி என்னதாயிற்றே"*

என்றும் பாடுகின்றார். வாழ்க்கைக்கு இன்றியமையாத சில பொருட்களின்மீது பற்றுக் கொள்ளவேண்டுமென்றாலும் அந்தப் பற்றினையெல்லாம் கடந்து பற்றற்றானைப்

பற்றுவதிலேயே வள்ளலார் மனம் கலந்து நின்றார். தன்னுடைய அனைத்தையுமே இறைவனிடம் கண்டார்.

*“தந்தையுந் தாயுங் குருவும்யான் போற்றுஞ்*
*சாமியும் பூமியும் பொருளும்*
*சொந்தநல் வாழ்வும் நேயமும் துணையும்*
*சுற்றமும் முற்றுநீ யென்றே*
*சிந்தையுற் றிங்கெ யிருக்கின்றே னிதுநின்*
*திருவுளந் தெரிந்ததே யெந்தாய்*
*நிந்தைசெய் யுலகில் யானுளங் கலங்கல்*
*நீதியோ நின்னருட் கழகோ”*

என்றும்,

*“ஊன் பெறும் உயிரும் உணர்ச்சியும் அன்பும்*
*ஊக்கமும் உண்மையும் என்னைத்*
*தான் பெறு தாயுந் தந்தையுங் குருவும் தனிப்*
*பெருந் தெய்வமும் தவமும்*
*வான் பெறு பொருளும் வாழ்வு நற்றுணையும்*
*மக்களும் மனைவியும் உறவும்*
*நன்பெறு நண்பும், யாவும்நீ என்றே*
*நம்பினேன் கைவிடேல் எனையே”*

என்றும்,

*“சோறு வேண்டினுந் துகிலணி முதலாம்*
*சுகங்கள் வேண்டினும் சுகமலாற் சுகமாம்*
*வேறு வேண்டினும் நினையடைந் தன்றி*
*மே வொணாதெனு மேலவர் உரைக்கே*
*மாறு வேண்டிலேன் வந்து நிற்கின்றேன்*
*வள்ளலே உன்றன் மனக் குறிப்பறியேன்*
*சாறு வேண்டிய பொழில் வடலரசே*
*சத்தியச் சபைத் தனிப்பெரும் பதியே”*

என்றும் பாடிய பாடல்கள் தமக்குரிய சகலமுமே இறைவன் தானென்பதைச் சுவாமிகள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்கள்.

இந்த இறைமைத் தன்மை நிறைந்த வழிபாட்டை வளர்த்துக் கொள்ளும்பொருட்டே தனது இளமை முயற்சிகள் அனைத்தும் இருந்ததாகக் கூறுகிறார். இளமையிலேயே இறைமையின் அருளாட்சி வள்ளலாரை ஆட்கொண்டுவிட்ட காரணத்தால், அருளாட்சி பெறுவதற்கு தடையாக உள்ள பொருளாசையைத் தான் விலக்கியெறிந்த தகைமையைக் கூறுகிறார்.

பணம் தேடல் முதலியவற்றிலே தனக்கு பற்று ஏற்படாத தன்மைகளைச் சுட்டிக்காட்டினார். வளர்ந்த அறிவின் விளைவாக இந்தக் கருத்து ஏற்படாமல் வித்திட்ட பருவத்திலேயே அப்பொருளாசைத் தன்னைப் பற்றாமையை எடுத்துக் காட்டுகிறார்.

*"பணத்திலே சிறிதும் ஆசை யொன்றிலை நான்*
*படைத்தவப் பணங்களைப் பலகால்*
*கிணற்றிலே எறிந்தேன் குளத்திலே எறிந்தேன்*
*கேணியில் எறிந்தனன் எந்தாய்*
*குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை*
*எறிகலேன் கொடுக்கிறேன் பிறர்க்கே*
*கணத்திலே எல்லாம் காட்டு நின்அருளைக்*
*கண்டனன் இனிச் சொல்வதென்னே"*

என்ற பாடல் வரிகள் வள்ளலாரின் திருவுள்ளத்தை - பணம் முதலிய பற்று தீண்டப் பெறாத மனத்துக்கண் தூய்மையைப் பறைசாற்றுகிறது.

வாழ்வின் இன்றியமையாத தேவையினை எண்ணிப் பார்க்கும் மனிதன், தன் உடம்பை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டுமென எண்ணுகிறான். உடல் நன்றாக இருக்க பசி வேண்டும். பசிக்கு ஏற்ற உணவு வேண்டும்; போகப் போக பசிபோய் நாவுக்கேற்ற உணவு வேண்டும்; சதைப் பிடிப்பு வேண்டும்; உடல் இளைக்காமலிருக்க வேண்டும் என்றெல்லாம், எல்லோரும் ஆசைப்படுவது இயற்கை. துறவிகளும், தம் துறவு நெறியில், யோகம் முதலியவற்றிற்காக இவ்வாசைகள் கொண்டு உடம்பைக் காப்பாற்றுவது உண்டு. உணவிலே ஆசை இல்லாதவர்களும், உடலை உரமாகக் காப்பாற்றுவதில் மட்டுமாவது ஆசை உடையவர்களாய்

இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆசையும் தமக்கு இல்லை என்று வள்ளலார் தெரிவிக்கின்றார்.

*“கிளைத்தவிவ் வுடம்பில் ஆசை யெள்ளளவும்*
*கிளைத்திலேன் பசியற உணவு*
*திளைத்திடுந் தோறும் வெறுப் பொடு உண்டேன்*
*இன்றுமே வெறுப்பிலுண்கின்றேன்*
*தளைத்திடும் முடையூன் உடம்பொரு சிறிதும்*
*தடித்திட நினைத்திலேன் இன்றும்*
*இளைத்திட விழைகின்றேனிது நான்தான்*
*இயம்ப லென் நீயறிந் ததுவே”*

இவ்வாறு வள்ளல் பெருமான் எவ்வகை ஆசையும் அற்ற உள்ளத்தோடு நடத்திய வாழ்க்கை எதற்காக என்று அறியத் தோன்றும். சரியை, கிரியை, யோகம் என்னும் நிலைகளில் உயர்ந்து நிற்பதற்காகவா? அதுவும் இல்லை என்கிறார் வள்ளலார். இவ்வாறு ஆசைகளை துறப்பதன் மூலம், உயர்ந்த நிலையோ, சிறந்த புகழோ பெறுவதற்காகவா? அதுவும் இல்லையாம். இறுதியில் முக்தி பெறுவது நோக்கமா? அதுவும் இல்லவே இல்லையாம்.

*“முக்தி பெற்றிடவும் உரிய தோர் இச்சை எனக்கில்லை என்றன்*
*உள்ளம் நீ அறிந்ததே எந்தாய்”*

என்று தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

அத்துடன் தனது உள்ளப் பான்மையை தெள்ளத் தெளிந்த தமிழில், சொல்லையும், கருத்தையும் தேர்ந்தெடுத்துப் படுகின்றார்.

*“இறக்கவும் ஆசை இல்லை யிப்படி நான்*
*இருக்கவும் ஆசையின்றினி நான்*
*பிறக்கவும் ஆசை இலையுல கெல்லாம்*
*பெரியவர் பெரியவர் எனவே*
*சிறக்கவும் ஆசை இலை விசித்திரங்கள்*
*செய்யவும் ஆசை யொன்றில்லை*
*துறக்கவும் ஆசையிலை துயர் அடைந்து*
*தூங்கவும் ஆசை யொன்றில்லையே”*

எனத் தனது உள்ள விளக்கினை, தனக்கென வாழாத தூய நோக்கத்தைப் பாடியுள்ளார்.

கடவுள் தமக்கு தாயும், தந்தையுமாக இருப்பது போலவே, எல்லா உயிர்க்கும் அவ்வாறு விளங்கி அருள் செய்கின்றார் என்ற தெளிவு அவருக்கேற்பட்ட காரணத்தால், அதனை யென்றென்றும் மறக்காமல், கடவுட் குடும்பத்தில் கடவுளாட்சியில் கலந்து ஒன்றிக் கடவுளின் அருட் புகழே பாடி வாழ வேண்டுமென்கிறார்.

கடவுட் குடும்பமாகிய இந்த பரந்த உலகத்திலே உள்ள உயிர்களுக்கு வரும் துன்பங்களைத் தீர்க்க ஆசை உண்டு என்றும், அதற்காகவே எப்பொழுதும் உழைக்கத் தனதுள்ளம் விரும்புகிறதென்றும் பாடியுள்ளார்.

*"சற்சபைக் குரியார் தம் மொடுங் கூடித்*
*தனித்த பேரன்பு மெய்யறிவும்*
*நற்சபைக் குரிய ஒழுக்கமும் அழியா*
*நல்ல மெம் வாழ்க்கையும் பெற்றே*
*சிற்சபை நடமும் பொற்சபை நடமும்*
*தினந்தொறும் பாடி நின்றாடித்*
*தெற்சபை உலகத் துயிர்க் கெலாம் இன்பம்*
*செய்வதென் இச்சையாம் எந்தாய்"*

*"எவ்வுயிர்த் திரளும் என் உயிர் எனவே*
*எண்ணி நல் இன்புறச் செயவும்*
*அவ்வுயிர்களுக்கு வருமிடை யூற்றை*
*அகற்றியே அச்ச நீக் கிடவும்*
*செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்*
*சிவ சிவா என்று கூத்தாடி*
*ஒவ்வுறு களிப்பால் அழிவுரு திங்கே*
*ஓங்கவும் இச்சை காண் எந்தாய்"*

உலகத்து உயிர்கள் எல்லாம் பெரிய அருட் குடும்பமாய் வாழ்தல் வேண்டுமென்ற காரணத்தால், உயிர்கள் வருந்தும் வருத்தைத்தைத் தன்னால் காண முடியவில்லையே என முறையிட்டுள்ளார். அந்த உயிர்களின் துன்பத்தைத் தீர்க்க நல்ல வரந் தந்தருள வேண்டும்

என்று வேண்டியுள்ளார். ஒருமுறையல்ல, பலமுறை தனது வேண்டுகோளை இறைவனின் திருச்சபை முன் வைக்கின்றார்.

*"உரிநற் றந்தை வள்ளலே அடியேன்*
*உரைக் கின்றேன் கேட்டருள் இதுவே*
*ஞான நாடகஞ் செய் தந்தையே அடியேன்*
*நவில்கின்றேன் கேட்டருள் இதுவே*
*என்னை ஈன் றெடுத்த தந்தையே அடியேன்*
*இசைக்கின்றேன் கேட்கவிம் மொழியே"*

என வள்ளலார் உள்ளமுருக வேண்டுகிறார். தன்னுடைய வேண்டுகோளை இறைவன் எவ்வாற்றானும் நிறைவேற்றித் தருவான் என்ற நம்பிக்கையும் அவருக்கு அழுத்தமாக இருந்தது. தமக்கு வேண்டிய எல்லாமே இறைவன்தான் என்று உறுதியாக நம்பினார். வள்ளலார், 'தெய்வம், தெய்வம்' என்று ஒரு பெரும் பதிகமே பாடியுள்ளார். அந்தத் தெய்வத்தின் சாதனையைத் தமிழில் முத்தாக வடித்தார்.

*"எல்லாஞ் செய் வல்ல தெய்வம் எங்கு நிறை தெய்வம்*
*என்னுயிரிற் கலந் தெனக்கே இன்ப நல்குந் தெய்வம்*
*நல்லார்க்கு நல்ல தெய்வம் நடுவான தெய்வம்*
*நற்சபையில் ஆடுகின்ற நடராசத் தெய்வம்*
*கல்லார்க்குங் கற்றவர்க்கும் களிப்பருளுந் தெய்வம்*
*காரணமாந் தெய்வமருட் பூரணமாந் தெய்வம்*
*செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்*
*சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்"*

*"தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்*
*தன்னை நிகரில்லாத தனித்தலைமைத் தெய்வம்"*

என்று பரவிக்கொண்டே போனாலும், அதன் உண்மை நிலையை ஊன்றிப் பார்த்தறியலாம்.

இறைவனையே தன் வாழ்வின் தாயாகித் தந்தையுமாய், தாங்குகின்ற தெய்வமுமாய் வள்ளலார் கொண்டு விளங்கியதை, அருட்பா படிப்போர் உணரலாம்.

தனது திருவருண் முறையீட்டில், மனிதன் பெற்றுள்ள புறக்கருவிகளின் தன்மை குறித்தும், அவை ஆற்ற வேண்டிய கடமை குறித்தும் விளக்கம் தருகின்றார்.

இறைவனை வணங்காத தலை - சும்மாட்டுத் தலை, மட்டி மாட்டுத்தலை - புன் வராகத்தலை - ஆட்டுத்தலை - வெறிநாய்த்தலை - பாம்பின்தலை - கற்பூட்டுத்தலை - வெம்புலித்தலை - நாற்றப் புழுத்தலை என்றும்,

இறைவனின் திருவினைக் கண்டு மகிழாத கண் குருட்டுக்கண், நீர் சொரிந்த கண், காசக் கண், புன் முலைக் கண், நகக் கண், கொடுங்கண், பொறாமைக்கண், புன்கண், வன்கண், மண்ணீர்மையுற்ற கண், மாமணி நீத்த கண், மாலைக் கண் என்றும்,

இறைவனின் புகழைக் கேளாத செவி – பொய்க் கதை ஒலியும், அழுகையொலியும், துண்ணெனும் தீச்சொல் ஒலியும், அந்தகன் தூதாக வா என்று உரப்பு ஒலியும், ஊன் செவியுமே யாகும் என்றும்,

இறைவனை வாழ்த்தாதார் வாய் தெரு மண்ணுண்ட வாய், பிணி கொண்ட வாய், விடப் பிச்சுண்ட வாய், பேச்சற்ற வாய், துணிகொண்ட வாய், அனற் சூடுண்ட வாய், மலஞ் சோர்ந்து இழிவாய், உப்பிலிக் கூழுண்ட வாய் என்றும்,

இறைவனை எண்ணாதவர்களின் நெஞ்சம் சுகமிலையே, உண்ணச் சோறிலையே, கட்டத் தூசிலையே, அகமிலையே, பொருளிலையே, வள்ளலார் இலையே, இகமிலையே, ஒன்றுமிங்கிலையே என்று இரங்கி வருந்திப் புலம்பி நிற்கும் நெஞ்சேயாகும் என்றும் திருவருட்பாவில் ‘திருவருண் முறையீடு’ என்னும் பகுதியிற் பலவகைகளில் இகழ்ந்துரைத்துப் பாடிய நம் வள்ளலார், இறைவனிடத்துக் கொண்டுள்ள அழுந்திய பற்றும், ஆர்வமும், ஈடுபாடும் விளங்குகிறது. “பண்டு மனது உவந்து குணம் சிறிதும் இல்லாப் பாவியேன் தனை ஆண்டாய் பரிவால்” என வள்ளலாரே குறிப்பிடுகின்றார். “யான் பிறர் எனும் பேத நடை விடுத்து ஒருமையின் இருத்தியென உரை செய் அரசே” என்று தன்னை இரண்டற இறைமையோடு ஆக்கிக் கொள்ளுகின்றார்.

தெய்வத் திருவருட்பாவின் கண், ‘குரு தரிசனம்’ என்னும் தலைப்பிட்ட பதிகம் காணப்படுகிறது.

“என்னையோர் வார்த்தையுட் படுத்துப் பற்றினாய் ... திருப் பெருந்துறை மேவிய சிவனே” என்றும் “ஞால மிந்திரன், நான்முகன், வானவர் நிற்க, மற்றெனை நயத்தினிது

ஆண்டாய்!” என்றும் மணிவாசகப் பெருமான் கூறுகின்ற கூற்றுக்கு ஒப்பாக வள்ளலார் பழமலையில் தான் கண்ட சிவபெருமானின் வடிவத்தையும், தன்மையையும், தான் அவனோடு பாதியாகிவிட்ட உண்மையையும் உவந்து கூறுகிறார்.

*“அருமா மணியை, ஆரமுதை, அன்பை*
*அறிவை அருட் பெருக்கை*
*குருமா மலையைப் பழமலையிற்*
*குலவி யோங்கக் கண்டேனே!”*

*“பாதியாகி ஒன்றாகிப்*
*படர்ந்த வடிவைப்பரம் பரத்தைச்*
*சோதி மலையைப் பழமலையிற்*
*சூழ்ந்து வணங்கிக் கண்டேனே!”*

என்கிறார். இவ்வாறு இறைவனைத் தான் காந்தத்தைத் தேடி ஓடும் முள் முனையைப் போல இருந்த ஆரம்பநிலை, படிப் படியாக மாறி, இறுதியில் முள் முனையாகிய பக்தனை நாடி, இறைவனாகிய காந்தமே ஓடி வந்த கதையையும் கூறுகிறார்.

தன்னையும் ஒரு பொருட்டாக எண்ணியிறைவனே ஆட்கொண்ட தன்மையைப் பெருமிதம் மிளிர வள்ளலார் குறிப்பிடுகின்றார்.

*“ஆடையிலே எனை மணந்த மணவாளா!”*

*“அச்சமெலாம் தவிர்த் தென்னை ஆட்கொண்ட குருவே!”*

*“செய்வகை யென் எனத் திகைத்தேன்*
*திகையேல் என்றொரு நாள்*
*திருமேனி காட்டி எனைத் தெளிவித்தாய் நீயே”*

*“தெருவிடத்தே விளையாடித் திரிந்த எனை வலிந்தே*
*சிவமாலை யணிந்தனை யச்சிறு வயதில்”*

இவ்வடிகள், சிவபெருமானாகிய இறைவன், தன்னை வலிய வந்து ஆட்கொண்ட பேரன்பினைத் தெற்றெனப் புலப்படுத்துகிறார். இதனுடைய தலைமை நிலையாக சிவபெருமானே தனக்கு திருவடி தீட்சை செய்து வைத்த நிலை பற்றியும் குறிப்பிடுகின்றார். குருவாய் வந்தாலும், தாயாகித் தந்தையுமாய் நின்ற நிலைதான் மேலோங்கி நிற்கிறதென்று வள்ளலாரே குறிப்பிடுகின்றார்.

*"நீ நினைத்த நன்மையெலாம்*
*யமறிந்தோம் நினையே*
*நேர் காண வந்தனம் என்*
*றென் முடிமேல் மலர்கால்*
*தான் நிலைக்க வைத்தருளிப்*
*படுத்திட நான் செறுக்கித்*
*தாள்க ளெடுத் தப்புறத்தே*
*வைத்திடத் தான் நகைத்தே*
*ஏன் நினைத்தாய் இவ்வளவு*
*சுதந்திரம் என் மகனே*
*எனக்கிலையோ என் றருளி*
*எனையாண்ட குருவே"*

எனப் பாடுகிறார். காலத்தைப் படைக்கும் கவிஞர்கள் - காலத்தாற் படைக்கப்படும் கவிஞர்கள் வரிசையில் வள்ளல் பெருமானை எண்ணிப் பார்ப்பதை விட, உயிர் இரக்கத்தின் வாரிசாக, தனது இன்பம், துன்பம் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்ட வாழத் தெரிந்தவராக, வாழ்ந்து காட்டிய வாழ்க்கையாக, வள்ளலாருடைய வாழ்க்கை விளங்குகிறது.

# 10. அருட் பெருஞ்சோதி

வடலூர் வள்ளல் பெருமான் வழங்கிய தாரக மந்திரம் "அருட்பெருஞ்சோதி". "அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங்கருணை, அருட்பெருஞ்சோதி" என்னும் நாமாவளியைச் சமரச சன்மார்க்க சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தியானித்து வருகிறார்கள்... அருட் பெருஞ்சோதி அகவலில் இத்தொடரை வள்ளலார் பலபடியாக எடுத்தாளுகிறார்.

சோதி, பெருஞ்சோதி என்ற சொற்களின் மூலம் ஆண்டவனை அழைக்கிறோம். புத்தம் புதிய சொல்லோவியங்களையும், கருத்துக்களையும், புலவர் பெருமக்கள் கொடுப்பது போலவே, வள்ளலார் புதிய சொற்கள் சிலவற்றையும் கொடுக்கின்றார். அருட்சோதி, அருட்பெருஞ்சோதி என்ற தொடர்களைத் தமிழ் இலக்கியத்திற்கு ஆக்கித் தந்தவர் வள்ளலார். அருட்பெருஞ்சோதியைப் பற்றிய கருத்துக்கள் காலத்தாற் பழயனவாக இருந்தாலும் சொல்லால் புதியதாக இருப்பதைப் பார்க்கிறோம்.

*“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்*
*சோதியை யாம் பாடக் கேட்டேயும்”*

என்று திருவாசகத்தில் அரும்பெரும் சோதி என்ற தொடர் வந்துள்ளதே தவிர அருட் பெருஞ்சோதி என்ற இணைப்பு இல்லை.

இறைவனைச் சோதியாகச் சொல்வது மரபு. வேதமும் இதனைக் கூறுகிறது.

*“சொற்றுணை வேதியன், சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்*
*கற்றுணைப் பூட்டிஓர் கடலிற் பாய்ச்சினும்*
*நற்றிணை யாவது நமச்சி வாயவே”*

என்று அப்பர் பெருமான் இறைவனை "சோதி வானவன்" என்கிறார்.

*“ஆதியாய நான்முகனும் மாலும் அறிவரிய*
*சோதியானே! நீதியில்லேன், சொல்லுவேன் நின்திறமே*
*ஓதி நாளும் உன்னை ஏத்தும் என்னை, வினை அவலம்*
*வாதியாமே வந்து நல்காய், வலிவலம் மேயவனே”*

என்பது சம்பந்தர் பாடல்.

*“சோதியே சுடரே சுடரொளி விளக்கே”*

என்பர் மணிவாசகர்.

'ஓசை ஒலியெலாம்' என்னும் திருத்தாண்டகத்தில், 'தேச விளக் கெலாம் ஆனாய் நீயே' என்றும், 'திருவையாறகலாத செம்பொற் சோதி' என்றும் மேலும் அப்பர் பெருமான் கூறுகிறார்.

பரஞ்சோதி என்ற தொடர் மிகப் பழமையான சொல். பெருஞ்சோதி என்றும் இதனைக் கூறலாம். விளக்கு என்றும் குறிப்பிடலாம். ஜோதி, சுடர், விளக்கு என்று ஒளிதரும் பொருட்களை மூன்று வகையாக கூறுவர். வள்ளல் பெருமான் இம்மூன்றையும் இணைத்து,

*“அருள் விளக்கே, அருட்சுடரே, அருட் சோதிச் சிவமே”*

என்று பேசுகிறார்.

இதில் விளக்கு என்பது நாம் கண்ணால் காண்பதாய், நம் விருப்பம் போல வடிவு பெறுவதாய், நாம் எண்ணெய் திரியிட்டு வேண்டும்போது ஏற்றிக் கொள்ளுவதாய், விரும்புமிடத்திற்கெல்லாம் எடுத்துக் கொண்டு செல்வதாய் அமைந்துள்ளது.

சுடர் என்பதை மூன்று என்று அறிஞர் பெருமக்கள் குறிப்பிடுகிறார்கள். அவை சூரியன், சந்திரன், அக்கினி என்பதாகும். இம்மூன்றும் கண்ணாற் காணக்கூடிய உருவமும், வடிவும் உடையதாகவும், கால தேசத்திற்குள் கட்டுப்பட்டதாகவும், உலகின் புற இருளைப் போக்குவதாகவும் அமைந்துள்ளது.

சோதி என்பது எல்லை இல்லாததாய், காண்பதற்கரிதாய், அகவிருளைப் போக்குவதாய் அமைந்துள்ளது. இறைவன் தன்னைத் தியானிப்போர்க்குச் சோதி வடிவாகத் தோன்றுவதாகவே கூறுகிறார்கள்.

*“விளக்கினையேற்றி வெளியே அறிமின்*
*விளக்கினின் முன்னே வேதனை மாறும்*
*விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்*
*விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே”*

என்று விளக்கின் மூலம் சோதிக்கு விளக்கம் தருகிறது திருமந்திரம்.

*“பற்றினுள்ளே பரமாய் பரஞ்சுடர்*

*முற்றினு முற்றி முளைக்கின்ற மூன்றொளி*
*நெற்றியினுள்ளே நினைவாய் நிலைதரு*
*மற்றவ னாய்நின்ற மாதவன் தானே"*

என்றும் திருமந்திரம் பரஞ்சுடரின் தத்துவத்தை விளக்குகிறது.

*"அருட்ஜோதி அளித்தனையேல் நின்னைக்*
*கண்டு கொள்ளுவேன்"*

என்கிறார் வள்ளலார். அம்மட்டோ?

*"இறுக்கப் பற்றிக் கொண்டேன் பதத்தை இனிநான்விடுவனோ*
*எந்தாய் பாதம் பிடித்த கையால் வேறு தொடுவனோ*
*குறுகப் பயந்து கூற்று மோடிக் குலைந்து போயிற்றே*
*கோவே யுன்றன் அருட்சிற் சோதி என்னதாயிற்றே"*

என்கிறார்.

எல்லா ஒளிக்கும் மூலமான ஒளியாய், எல்லாச் சோதிக்கும் மேற்பட்ட சோதியாய் விளங்குவது பெருஞ்சோதி. இந்த சோதி அஞ்ஞான மென்னும் அகவருளைப் போக்கி, மெய்ஞானமென்னும் ஒளியைப் பரப்பி, ஆசையை ஒழித்து ஆனந்தத்தை ஏற்படுத்துவது. அந்த நிலையில்தான் அருட்சிற்சோதி என்னதாகும் என்று கூறமுடியும்.

*"கற்பனை கடந்த சோதி கருணையே வடிவமாகி"*

என்று சேக்கிழார் பெருமான் கூறியது போல, சோதி கருணையே வடிவமானது. அந்தக் கருணை இறைவனிடம் இருப்பதனால்தான் மக்கள் பேரின்பத்தைப் பெறுகின்றனர்.

இந்தப் பேரின்பத்தைத் தாம் பெற்றதாக வள்ளலார் கூறுகிறார். தாம் பெற்றதோடு அமையாமல் தம்மையே வலிய வந்து ஆட்கொண்டதாகக் கூறுகிறார்.

*"நீயே வலிந்திங் கென்னை யாண்ட நீதிச் சோதியே*
*நின்னைப்பாட என்னை வளர்க்கு நிமலச் சோதியே*
*தாயே யெனவந் தென்னைக் காத்த தருமச் சோதியே*
*தம்மை பிறரா லரிதற் கரிய தலைமைச் சோதியே."*

இந்த தலைமைச் சோதி, தனக்கும் தீபவொளி காட்டி, ஒளி சேர்த்தவுடன், பிறவியாகிய பெருங்கடலிலிருந்து கரையேறுவதற்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது என்கிறார் வள்ளலார்.

*"ஈசனருளாற் கடலி லேற்ற தொரு வோடம்*
*ஏறிக் கரை யேறினே னிருந்த தொரு மாடம்*
*தேசுறுமம் மாடநாடுத் தெய்வமணிப் பீடம்*
*தீபவொளி கண்டவுடன் சேர்ந்தது சந்தோடம்"*

உள்ளொளி பெருகியவுடன் மகிழ்ச்சி ஏற்பட்டதாக கூறுகிறார்.

இத்தகு கருணை நிறைந்த பேரின்ப வெள்ளமாக இறைவன் இருக்கின்றான். கருணையோடு சோதியுடையவனாகவும் இருக்கின்றான். சோதியில், பெருஞ்சோதியாக - அருட்பெருஞ்சோதியாக இறைவன் இருக்கின்றான். அவனைப் பெருஞ்சோதி வடிவானவன் என என்னும்போது, நமக்கு தொலை தூரத்தில் உள்ளவனோ எனத் தோன்றுகிறது. ஆனால், அருட்பெருஞ்சோதியன் என என்னும் போது நம்முடைய உயிருக்கு உயிராக அருகில் உள்ளவனாகவே நினைக்கிறோம்.

அருளே உலகெலாம் ஆள்விப்பது. உலகங்கள் யாவும் இயங்குவதும், பற்பல பொருள்களைத் தருவதும், அவைகளை நுகர்ந்து உயிர்கள் வாழ்வதும், உய்வதும் இறைவனால்தான். தாயால்தான் குழந்தைகள் வளர்கின்றன. தாயின் அருள் இல்லையென்றால் குழந்தை வளர முடியாது. தாயின் அருளைப் போலவேதான் இறைவனின் அருளும் இருக்கிறது.

*"அருளுண்டாம் ஈசற்கு அதுசக்தி யன்றே*
*அருளுமவனன்றியில்லை அருளின்றேல் அவனில்லை"*

என்று சிவஞான போதம் கூறுகிறது. பொருளைச் சிவனென்றும் அவன் தன் குணமாயுள்ள சக்தியை அம்மை என்றும் உருவகப்படுத்திக் கூறுவது மரபாகும்.

'காயெலாம் கனிவிக்கும் ஒரு பெருங் கருணை அமுதாக' இறைவன் இருக்கின்றான். அக் கருணைப் பெருங் கடவுளுக்குச் சோதி என்ற பெயர்தான் பொருத்தமுடையதாகும்.

*"ஒளியாகி யுள் ளொளியா யுள் ளொளிக்குள் ளொளியாய்*
*ஒளியொளியி னொளியாயவ் வொளிக்குளுமோ ரொளியாய்*

*வெளியாகி வெளி வெளியாய் வெளியிடைமேல் வெளியாய்*
*மேல் வெளிமேற் பெருவெளியாய்ப் பெரு வெளிக்கோர் வெளியாய்*
*அளியாகி யதுவாகி யதுவுமல்லா தாகி*
*அப்பாலாய் அப்பாலும் அல்லதுவாய் நிறைவாந்*
*தளியாகி எல்லாமாய் விளங்குகின்ற ஞான*
*சபைத் தலைவா நின்னியலைச் சாற்றுவதெவ்வணமே"*

என்று வியந்து பாராட்டுகிறார்.

இன்புறுவதும், துன்புறுவதும் இறைவனருளே எனக் கண்டனர் வள்ளலார். இரண்டும் நடைபெறுவது உயிர்களின் நன்மைக்காகவேயாம். தண்டனை கொடுப்பது திருந்துவதற்காகத்தானே? இவ்வுண்மையை உணரும்போது இறைவன் அருள் தன்மை உள்ளத்தே தோன்ற ஞானிகள் அவனருளை நினைந்து, நினைந்து உணர்ந்து, உணர்ந்து "நன்னிதியே! என்னுரிமை நாயகனே! ஞான நடத்தரசே" என்று வாழ்த்துகின்றனர்.

*"நாடல் செய்கின்றேன் அருட்பெருஞ் சோதி நாதனை என்னுளே கண்டு*
*கூடல் செய்கின்றேன் எண்ணிய வெல்லாங் கூடியே குலவியின்புருவாய*
*ஆடல் செய்கின்றேன் சித்தெலாம் வல்லா னம்பலந் தன்னையே குறித்துப்*
*பாடல் செய்கின்றேன் எனக்கிது போதும் பண்ணிய தவம் பலித் ததுவே"*

எனத் தவம் பலித்ததாகக் கூறுகிறார்.

அருளுணர்வில் உள்ள மனிதன், நான் என்னும் நிலையைக் கடந்து, தன்னையும் இறைவனையும் ஒன்றெனக் காணுகின்ற உள்ளத்தைத் தருவதுதான் அருட் பெருஞ்சோதியின் தனித் தன்மை.

*"அது நானாய், நானதுவாய், அத்துவிதமாகி நின்றேன்"*

என்று தன்னனுபவம் கூறுகிறார் வள்ளலார். தன் அனுபவத்தை மேலும் தொடர்ந்து,

*"நான்ஆனான் தான்ஆனான் நானுந்தா னும்ஆனான்*
*தேன்ஆனான் தெள்ளமுதமாய்த் தித்தித்து நிற்கின்றான்*
*வான்ஆனான் ஞான மணிமன்றில் ஆடுகின்றான்*
*கோன்ஆனான் என்னு குலாவுகின்ற கோமானே"*

*"தானே அருள்ஆனான் தானே பொருள் ஆனான்*
*தானே எல்லாம் வல்லதான் ஆனான் - தானேதான்*

*நான்ஆனான் என்னுடைய நாயகன் ஆனான் ஞான*
*வான்ஆனான் அம்பலத் தெம்மான்”*

என்று தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார்.

இறைவனிடம் அருள் இருப்பது போல நம்மிடமும் அருள் இருக்க வேண்டும். இந்த அருளின் தனித்தன்மையை உணர்ந்து, ‘ஆருயிர்கட் கெல்லாம் நாம் அன்பு செயல் வேண்டும்’ என்று அவரே இறைவனை பிரார்த்தித்தார். ‘கருணை நிறைந்து அகம் புறமும் துளும்பி வழிந்துயிர்க்கெல்லாம் கலைக்கண்ணாகும்’ இயல்புடைய இறைமை தன்மையைப் பெறுதல் வேண்டும்.

இந்த அருட் பெருஞ்சோதியின் அருள் திறத்தை விளக்குவதே திரு அருட்பா. அதை விளக்கியவர் அருட் பிரகாச வள்ளலார் !

அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி,

தனிப்பெருங்கருணை, அருட்பெருஞ்சோதி!!

# நன்றியுரை

1969ஆம் ஆண்டில், தனது கன்னி முயற்சியாக, 'வள்ளலார்' என்ற தலைப்பில் இந்த ஆய்வு மலரை, அருட்பிரகாச வள்ளலாருக்கு ஒரு காணிக்கையாக சமர்ப்பித்தார் எங்கள் அன்னை, முனைவர்.சு. சிவகாமசுந்தரி அவர்கள். இந்த ஆய்வுக்களஞ்சியத்தை, மீண்டும் உலகெங்கும் உள்ள அருட்பெருங்குடும்பத்திற்கு மின் பதிப்பாகவும், ஒலிப் பேழையாகவும் வெளியிடுவது எங்கள் தவம். இம்முயற்சியில் உறுதுணையாக இருந்த வள்ளலார் யுனிவர்சல் மிஷன், அமெரிக்கா (https://vallalaruniversalmission.org) மற்றும் நண்பர்கள், குடும்பத்தினர் அனைவருக்கும் எங்கள் அன்பு நிறைந்த நன்றிகள்!!

---

*சன்மார்க்கப் பாதைக்கு வழிகாட்டிய எங்கள் தாய் முனைவர் சு.சிவகாமசுந்தரி, தந்தை முனைவர் வ.சுப்பிரமணியன், பாட்டி வடலூர் தருமாம்பாள், தாத்தா தந்சை பழனிவேல் அவர்களுக்கும் சமர்ப்பணம்.*

*சு. அமுதவடிவு, சு. அன்புமலர், சு. அருள்செல்வி*

*அக்டோபர்-5-2020*

---